Reg.No: QD/76/NEWS/2005

விலை 15/=

# ஈழநாதம்

மட்டக்களப்பு பதிப்பு

பக்கம் - 24

வார வெளியீடு

நாதம் - 02 செப்டெம்பர் 09 - 15 / 2005 வெள்ளி - 18



## ஆறு கடக்கும் வரைக்கும்...





## கறுப்பு செப்டெம்பர் வரலாற்று நினைவு







# யுத்தத்தை நோக்கிய நகர்வு....

## சிந்தனைக்கு

அறிவின் அதி உயர்ந்த பண்பாகப் பிறப்பதுதான் எளிமை: தன்னலமும் பெருமையும் அகன்ற நற்பண்பாக எளிமை தோன்றுகிறது. இந்த எளிமை ஒருவரை அழகான மனிதராக, பண்பான மனிதராக ஆக்கிவிடுகிறது.



தமிழீழ தேசியத் தலைவர்


# ஈழநாதம்

மட்டக்களப்பு பதிப்பு EEZHANATHAM

பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை.
தொலைபேசி:- 065-2226110, 078-8723447, 078-8722960.
இணையத்தளம் : www.battieezhanatham.com
www.battieelanatham.com
மின்னஞ்சல் : batti@eezhanatham.com
editor@battieelanatham.com
09.09.2005


## மகிந்த-ஜே.வி.பி மற்றுமோர் சதி

ஆளும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான மகிந்த ராஜபக்ஷவிற்கு பேரினவாதக் கட்சியான ஜே. வி. பி பன்னிரு நிபந்தனைகளுடன் ஆதரவு வழங்கத் தீர்மானித்திருக்கிறது. இந்த பன்னிரு நிபந்தனைகளின் உள்ளடக்கங்களை நன்கு அலசி ஆராயுமிடத்து சிறுபான்மை மக்களின் நலன்களை அடியோடு வெட்டி வீழ்த்தி போர் பிரகடன த்துக்கான ஒரு நடவடிக்கையாகவே இதனைக் கருத இடமுண்டு. கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக தமிழ் இனத்தின் உரிமைகளை வழங்குவதை தவிர்த்து வரும் சிங்கள ஆளும் வர்க்கத்தின் இனவாத சக்திகள் தாங்கள் கொண்டிருக்கும் கொள்கைகளிலிருந்து சற்றும் தளர்வுப் போக்கை பின்பற்றவில்லை.

மீண்டும் ஒரு தேர்தல். அது ஜனாதிபதித் தேர்தலாக இருக்கட்டும், அல்லது சிறிலங்காவின் நாடாளுமன்றத் தேர்தலாக இருக்கட்டும். தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்கள் பல்வேறு கோணங்களில் இருப்பது வழமை. அதாவது அமைதிச் சூழல் ஒன்று ஏற்படுமா? அல்லது புதிதாக வருபவர்கள் புதிய திருப்பத்தை ஏற்படுத்துவார்களா? என்ற எண்ணங்கள் அவை. அந்தடிப்படையில் எவரும் தேர்தல் வெற்றிக்குப் பின்னர் தமிழ் மக்களது பிரச்சினையை சிந்தித்ததாக வரலாறு இல்லை.

தற்போது ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவு வழங்குவதானால் பன்னிரு நிபந்தனைகளை ஜனாதிபதி வேட்பாளரான பிரதமர் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையை ஜே. வி. பி விதித்திருக்கிறது. இதனை மகிந்த ராஜபக்ஷ ஏற்றுக் கொண்டு விட்டார். விரைவில் அதற்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்படவுள்ளது. ஏற்கனவே சமாதான முயற்சிகளை சாகடிப்பதற்கும், ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியைக் கவிழ்ப்பதற்குமாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே. வி. பியும் கூட்டு முகாம் அமைத்து நாடாளுமன்ற ஆட்சியையும் கைப்பற்றியது. ஆயினும் சந்திரிகா அம்மையாருக்கும், ஜே. வி. பிக் குமிடையிலான உறவு கீரியும், பாம்பும் போன்ற உறவாகவே இருந்தது.

சுனாமிக் கட்டமைப்புத் தொடர்பான பேச்சுக்கள் தோன்றிய நிலையில் அதனைக் கடுமையாக எதிர்த்த ஜே. வி. பி கூட்டு முகாமிலிருந்து வெளியேறியது. ஆயினும் தமிழ் பேசும் மக்கள் சுனாமிப் பேரழிவினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதையோ அல்லது பாதிப்புற்ற பகுதியை மீளப் புனரமைப்பதையோ இவர்கள் விரும்பவில்லை. அதேவேளை சந்திரிகா அம்மையார் ஜே. வி. பிக்கு எதிராக சாவல் விட்ட போதும் பொதுக் கட்டமைப்பு விடயத்தில் அவர் தெரிவித்தது போன்று எதுவுமே நடைபெறவில்லை.

தற்போது இனவாதிகளுடன் சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஜனாதிபதித் தேர்தலுக்கு வருகிறது. அப்படி மகிந்த ஜனாதிபதியானால் ஜே. வி. பி விதித்திருக்கும் பன்னிரு நிபந்தனைகளையும் நடைமுறைப்படுத்த வேண்டும். அதன் பிரகாரம் ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்பை கைவிடுதல், ஒற்றை ஆட்சியின் கீழ் இனப்பிரச்சினைக்குத் தீர்வு, போர் நிறுத்த உடன்படிக்கை மறு பரிசீலனை செய்தல், நோர்வேயை ஓரங்கட்டுவது போன்ற முக்கிய நிபந்தனைகளை மகிந்த நடைமுறைப்படுத்த வேண்டும்.

இதனை நடைமுறைக்குக் கொண்டு வரும் பட்சத்தில் சமாதானம் என்பது சாகடித்து விடும். அதற்கான விச ஊசியையும், மருந்துகளையும் தற்போது மகிந்தவிடம் ஜே. வி. பி கொடுத்திருக்கிறது. இதனை முழுமையாக பார்க்குமிடத்து மீண்டும் ஒரு போர்ப் பிரகடனமாகவே இதனை தமிழினம் கருதவேண்டியுள்ளது. எந்த ஒரு கட்சியும் இனவாதக்கட்சிகள், பேரினவாத சக்திகள் மற்றும் பிக்குகளின் ஆலோசனை வழிநடத்தல்களை பின்பற்றுகின்ற போது தமிழினத்தின் உரிமைகள் பேசித் தீர்வு காண்பதற்கான சூழலைத் தோற்றுவிக்காது.

எனவே ஜனாதிபதித் தேர்தலில் யார் வந்தாலும் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கப் போவதில்லை என்பதே யதார்த்தம். அதற்கு முன்னதாக சர்வதேச சமூகம் தமிழினத்தின் தமிழ் அரசுப் பிரகடனத்தை அங்கீகரிக்க வேண்டும். ஏனெனில் எந்த ஒரு இனவாத சக்திகளும் சர்வதேச சமூகம் தமிழ் மக்களின் பிரச்சினையில் தீர்வு காணும் முயற்சியில் ஈடுபடுவதை விரும்பவில்லை. எதிர்காலத்திலும் இவர்கள் விரும்பமாட்டார்கள். கடந்த அரை நூற்றாண்டுக்கு மேலாக தமிழ் மக்களது உரிமைகளை வழங்காது இன அழிப்புக்களை மேற்கொண்டுவந்த சிங்கள இனவர்க்கத்தினர் இனியும் அதே பாணியில் தமது அரசியலை நடத்துவதற்கு முனைவதையே மகிந்த, ஜே. வி. பி உடன்பாடு காட்டுகிறது. இது போரை மூழ வைக்கும் மற்றுமோர் சதி என்றால் வியப்பில்லை.

# யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு கடிதம்

## அன்புக்குரிய தென்தமிழீழ மக்களுக்கு,

சிறிலங்காவின் அரசியல் ஜனாதிபதித் தேர்தலை நோக்கி விரைவாக நகர்ந்து கொண்டிருக்கின்றது. தமிழீழத்திலோ தமிழ்த் தேசிய எழுச்சி வீறு கொண்டு பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருக்கின்றது. அடுத்த ஜனாதிபதி யார் என்று இரு பெரும்பான்மைக் கட்சிகளும் பெரும் போட்டியில் இறங்கியுள்ளன. சிறிலங்காவில் தனது சொந்த ஆட்சியை எப்பொழுது நிறுவப் போகின்றோம் என்று ஏங்கித் தவிக்கிறது தமிழீழம்.

பேரினவாதிகள் தேர்தலில் பிளவுண்டிருந்தாலும் தமிழனத்தை அடக்கி ஆள்வதில் ஒரே எண்ணம் கொண்டவர்களாக உள்ளனர். சிறிலங்காவில். மரபுவழித்தாயகம், தேசிய இனம், தன்னாட்சி என்ற உணர்வுடன் தமிழினம் ஒரே எண்ணத்துடனும், உணர்வுடனும் தனது இறைமையை நிலைநாட்ட உலகம் உதவிட வேண்டும். தமிழீழம் திரண்டு கொள்கின்றது.

வவுனியாவில் நிறைவேற்றப்பட்ட தமிழ்த் தேசிய எழுச்சிப் பிரகடனத்தை உறுதிப்படுத்தியது மட்டு நகரில் கூடிய எழுச்சி மாநாடு. அதனைத் தொடர்ந்து கடந்த 2005-09-01 வியாழக்கிழமை கிளிநொச்சியில் கூடிய தமிழினம், உலகநாடுகளை நோக்கி அத்தீர்மானத்தை அங்கீகரிக்கும்படி கோரிக்கை விடுத்துள்ளது.

தொடர்ந்து முல்லைத்தீவிலும், மன்னாரிலும், பின்னர் யாழ்ப்பாணத்திலும் தமிழீழத் தேசிய எழுச்சி நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. விடுதலைக்கான முன்னெடுப்புக்களில் இவ்வெழுச்சிப் பிரகடனங்கள் முக்கிய கருத்துருவாக்கம் எனக் கருதலாம்.

இதே நேரம் சிறிலங்காவின் ஜனாதிபதித் தேர்தல் எப்படிச் சென்று கொண்டிருக்கின்றது என்பதும் எமக்குத் தேவையானதே. எனவே அவை பற்றியும் நாம் சற்றுப் பார்க்க வேண்டியுள்ளது. அக்கட்சிகளுக்கு இரட்டை வேடம் போடும் நிலை உள்ளது.

தமிழ் முஸ்லிம் மக்களுக்கு ஒன்றைச் சொல்ல வேண்டும். சிங்கள மக்களுக்கு வேறொன்றைச் சொல்ல வேண்டும். அவ்வாறு மாற்றி மாற்றிச் சொன்னால்தான் மக்களை ஏமாற்றி வாக்குகளைப் பெற்றிடலாம்.

பதவியில் ஏறிவிடலாம் என்பது அவர்களது நினைப்பாகும். பதவியில் ஏறியவுடன் ஏறிய ஏணியை உதைத்து வீழ்த்தி விடுவார்கள்.

ஜே.ஆரின் ஆட்சியிலும், பிரேமதாசவின் ஆட்சியிலும் போரின் சுமைகளைத் தாங்கிய மக்களிடம் வந்து சமாதானத்தைக் கொண்டு வருவேன் என்று வாக்குறுதி கொடுத்து வாக்குக் கேட்டார் சந்திரிகா. சிங்கள மக்களும் அதை நம்பினர், விரும்பினர். தமிழ் மக்களும் நம்பினார்கள்.

பெருவெற்றி பெற்ற சந்திரிகாவின் ஆட்சியில் யுத்தம் வெறித்தாண்டவமாடியது. சிங்கத்திற்கு இரையாகும் முயலைப் போல சிங்கள பேரினவாதத்திற்குள் அடங்கிய சமாதானத்தைத் தமிழ் மக்கள் மேல் திணித்தார் அவர். அதற்குப் பெயர்தான் சமாதானத்திற்கான யுத்தம். அதன் பிற்பாடு ரணில் வந்தார்.

சமாதானம் என்றார். ஒப்பந்தம் செய்தார். அதனால் எந்தவித உருப்படியான பலனும் ஏற்படவில்லை. காலத்தை இழுத்தடித்து உலக நாடுகளின் நெருக்குதல்களைக் கொடுத்துத் தமிழ்மக்களைப் பணிய வைக்க முயற்சித்தார். இதற்குச் சந்திரிகா விடவில்லை. தற்பொழுது யுத்த நிறுத்தம் கேள்விக்குள்ளாகியுள்ளது.

இந்நிலையில் 2006 வரை தனது ஆட்டத்தைத் தொடர சந்திரிகா எண்ணியிருந்தார். அவரது நம்பிக்கைக்குரிய சரத் என். சில்வாவின் தீர்ப்பினால் செய்வதறியாது உள்ளார் சந்திரிகா. நீதிமன்றத் தீர்ப்பு இப்படியாகக் கைவிட்டு விடும் என அவர் எதிர்பார்க்கவில்லை. தம்பி அனுராவையும் பதவிக்குக் கெண்டுவர இயலாமல் தன் ஆட்சிக்காலத்தின் இறுதிக் காலத்திற்கு வந்து விட்டார்.

மஹிந்த ராஜபக்ஷ அதே சமாதானப் பல்லவியுடன் தேர்தல் களத்தில் வந்து நிற்கிறார். தமிழ் - முஸ்லிம் மக்களுக்காக யுத்த நிறுத்தம் என்ற ஒரு தோணியில் ஒரு காலும், சிங்கள பௌத்த இனவாதம் என்ற தோணியில் ஜே.வி.பி போன்ற மற்றும் சில இனவாதக் குழுக்களுடனும் மறுதோணியில் மற்றைய காலையும் வைத்துள்ளார்.

பதவி கிடைத்தால் எந்தக் காலை எடுப்பார், எப்படி அந்தத் தோணியை மூழ்கடிப்பார் என்பது தமிழ் மக்கள் நன்கறிவார்கள். இருந்தாலும் இவர் யுத்த் நிறுத்தம் பற்றி என்ன சொல்கிறார் என்று சற்றுப் பார்ப்போம்.

நாட்டிற்குச் சமாதானம் வேண்டும். யுத்த நிறுத்தம் வேண்டும். சமாதானம் கௌரவமான சமாதானமாக இருக்கவேண்டும் என்கிறார். அதாவது இப்பொழுது ஏற்பட்டுள்ள யுத்தநிறுத்தமும், சமாதானமும் சிங்கள ஆட்சியாளருக்குக் கௌரவமானதல்லவாம். எனவே மஹிந்த ராஜபக்ஷ என்ன செய்யப் போகிறார்.?

இதே போல் யுத்த நிறுத்தம் வேண்டும் என்று கூறும் மஹிந்த ராஜபக்ஷ தற்போதுள்ள யுத்த நிறுத்தம் பற்றி என்ன கூறுகின்றார்? இன்றைய யுத்த நிறுத்தத்தால் என்னத்தைக் கண்டோம்? நாட்டின் ஜனாதிபதியோ, பிரதமரோ முழுநாட்டிற்கும் சென்று வர முடிகிறதா? புலிகளின் பகுதி என்று கூறி அப்பகுதிகளுக்கு ஜனாதிபதியோ, பிரதமரோ செல்ல முடியாதுள்ளது. இதை மாற்ற வேண்டும். என்று அவர் கூறுகின்றார்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி என்பது யுத்தநிறுத்த ஒப்பந்தத்தால் ஏற்படுத்தப் பட்ட பகுதி என அவர் சிங்கள மக்களுக்குக் காட்ட முனைகின்றார். மின்னல் வேகத் தாக்குதல்கள் மூலம் தம் பாரம்பரிய நிலப்பரப்பில் ஒரு பகுதியை தமிழீழ விடுதலைப்புலிகள் மீட்டதையும், கட்டுநாயக்கா விமானப்படைத் தளத் தாக்குதல் உட்பட தம் வலிமை மிக்க தாக்குதல்களின் மூலம் சிங்கள அரசைப் பேச்சுவார்த்தை மேசைக்கு வர நிர்பந்தித்ததையும் மறந்தவராக மஹிந்த ராஜபக்ஷ இப்பொழுது பேசி வருகிறார்.

யுத்த நிறுத்தம் வருவதற்கு முன்னர் அலரி மாளிக்கைக்குள் முடங்கியிருந்தவர். யுத்த நிறுத்தம் ஏற்பட்டதால் தான் தனது மாளிகையை விட்டுச் சுதந்திரமாக வெளியே நடமாட முடிந்தது. அவ்வாறான நிலையை மறந்துவிட்டு, யுத்த நிறுத்தம் ஏற்பட்டதால் தான் புலிகளின் பகுதிகளுக்குச் செல்ல முடியாமல் உள்ளார் என்று கோமாளித்தனமாகப் பேசுகின்றார்கள்.

உண்மையைச் சிங்கள மக்களே அறிவர். இந்நிலையில் தான் ஜனாதிபதியானால் தலைவர் பிரபாகரனுடன் நேரடிப் பேச்சு நடத்தப் போவதாகக் கூறுகிறார். இவ்வாறு கூறுவதை எவரும் ஏற்கப்போவதில்லை.

ஏனெனில் தமிழினத்தின் தலைவர் என்றும் இறங்கி வந்ததில்லை என்ற பாடல் வரிகள் தான் சான்று. ஆனால் சிங்கள மக்களை ஏமாற்ற இப்படி எத்தனையோ விடயங்களைச் சொல்வார்கள். பாவம் சிங்கள மக்கள்.

**அன்புடன் மாசிலான்**

# துரோகிகளை, துரோகிகளுக்கு துணை நிற்பவர்களை நாம் ஒருபோதும் ஏற்றுக் கொள்வதில்லை

## ஏனையவர்கள் எம்முடன் இணைந்து போராட முன்வரவேண்டும்

## மட்டு மாவட்ட புலனாய்வுப் பொறுப்பாளர் கீர்த்தி

**துரோகிகளையும், துரோகிகளுக்குத் துணை நிற்பவர்களையும் நாம் ஏற்றுக் கொள்வதில்லை. ஏனையவர்கள் எம்மோடு இணைந்து போராட முன்வர வேண்டும்.**

**இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட புலனாய்வுப் பொறுப்பாளர் கீர்த்தி தெரிவித்தார். புலம் பெயர்ந்து வாழும் தமிழ் உறவுகள் ஈழநாதம் (மட் பதிப்பு) இணையத்தளம் ஊடாக கேட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.**

**மட்டக்களப்பு மாவட்ட புலனாய்வுத் துறைப் பொறுப்பாளர் கீர்த்தி அவர்கள் இணையத்தளமூடாக தமிழ் உறவுகளின் கேள்விகளுக்கு அளித்த பதில்கள் வருமாறு:-**

**கேள்விகள்:- என். கர்ணன், குவைற்.**

**கேள்வி:- எதிரி எனக் கருதப்படும் கருணா இப்போதும் சிறிலங்காவில் தானா? எங்களது கிழக்கு மாகாணப் பெயருக்கு அவரால் களங்கம் ஏற்படுத்தப்படுகின்றது. இது உண்மையா? உங்களது அபிப்பிராயம் என்ன? ''அவர் தமிழ் மக்களின் எதிரி மட்டுமல்ல மாவீரர்களுக்கும் எதிரி''**

**பதில்:-** எதிரியுடன் கூட்டுச் சேர்ந்து தமிழ் மக்களுக்கு துரோகமிழைக்கும் கருணா போன்ற துரோகிகளுக்கு சிறிலங்காவில் மட்டுமல்ல எங்கேயும் வாழ்வதற்கு எதிரி வசதிகள் செய்து கொடுப்பான்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்குத் தனிப்பட்ட கருணா என்பவர் துரோகம் இழைத்தது உண்மை. தனிநபர் ஒருவரின் துரோகத்திற்கும் கிழக்கு மாகாண மக்களுக்கும் எதுவித தொடர்பும் இல்லை. எமது மக்கள் இதனையிட்டுக் கவலைப்படவும் தேவையில்லை என்றே கருதுகிறேன்.

**கேள்வி:-02. கருணாவைப் பற்றி நீங்கள் எண்ணுவது என்ன? அவர் சிறிலங்காவில் வாழ்கின்றாரா? அல்லது சிறிலங்காவிற்கு வெளியிலா?**

**பதில்:-** ராசிக், புளொட் மோகன், போன்ற துரோகிகளின் வரிசையில் கருணாவும் ஒரு துரோகி என்றே கருதுகின்றேன்.

**கேள்விகள் யோசப் , கனடா**

**கேள்வி:- சென்ற வருடம் கருணாவுடன் இருந்து பிரிந்து பிறகு எமது விடுதலை அமைப்புடன் மீண்டும் இணைந்த ஜிம்கெலித் தாத்தா, ராபேட், துரை, விசு மற்றவர்களுடைய தற்போதைய நிலைமை என்ன?**

**பதில்:-** ஜிம்கெலித் தாத்தா, ராபேட், துரை, விசு போன்றவர்கள் கருணாவுடன் சேர்ந்து துரோகச் செயலுக்கு ஒத்துழைத்தமையால் தற்போதும் தண்டனையில் விடப்பட்டுள்ளார்கள்.

**கேள்வி:-02. புலனாய்வுத்துறை உறுப்பினர் நியூட்டனை இலங்கை புலனாய்வுத்துறை கடத்தியதாக அறிந்து மிகவும் வேதனை அடைந்தோம். அவர் தொடர்பான செய்திகள் ஏதும் உங்களிடம் உண்டா?**

**பதில்:-** நியூட்டன் தொடர்பாக தற்போது எந்த ச் செய்தியும் இல்லை.

**கேள்வி:- எமது பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியற்துறைப் போராளிகள் மற்றும் தமிழ்த் தேசியப் பத்திரிகையாளர்களுக்கு இறுக்கமான பாதுகாப்பை வழங்க உங்களால் முடியாதா?**

**பதில்:-** புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் படி இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் அனைவருக்குமான பாதுகாப்பையும் சிறிலங்கா அரசே பொறுப்பேற்க வேண்டுமென்பதுதான் விதி என்பது உங்களுக்குத் தெரிந்திருக்குமென கருதுகிறேன்.

**கேள்வி:- நாம் மீனகத்தில் இருந்து கருணாவின் பிரச்சினையுடன் வெளியேறி சவுதியில் வேலை செய்கின்றோம். எம்முடன் நூற்றுக்கணக்கான எங்கள் பொடியன்கள் இங்கு இருக்கின்றார்கள். அங்கு நடக்கும் துரோகத்தனங்கள் பெரும் வேதனை தருகின்றன. நாங்கள் என்ன நடக்குமோ என்ற பயத்தில் தான் இங்கு வந்தோம். போராட்ட உணர்வு எம்மில் இருந்து மறைந்துவிடவில்லை. கடும் கஷ்ரப்பட்டு காசு கட்டியே இங்கு வந்தோம். 7000 ரூபாய்க்கு மாடு போல் வேலை செய்ய வேண்டியுள்ளது. இந்த நிலையில் நாம் அங்கும் வரமுடியாது. இந்நிலையில் தற்போது எங்களால் எமது தேசத்திற்கு செய்யக் கூடியது என்ன என்பதை கூறுங்கள்?**

**கேள்வி தமிழன், சவுதி**

**பதில்:-** தற்போதைய நிலையில் எமது விடுதலைப் போராட்டம் சம்பந்தமான கருத்துக்களை வழங்குவதனூடாக அங்கு போராட்டத்தின் பால் தெளிவில்லாமல் இருக்கும் ஏனையவர்களுக்கும் உங்களால் தெளிவூட்ட முடியும். உங்களிடம் உள்ள போராட்ட உணர்வு மறையாமல் இருப்பது மகிழ்ச்சியைத் தருகின்றது.

**கேள்வி:- நான் முன்பு விசாலகன் படையணியில் இருந்தவன். அங்கு ஏற்பட்ட பிரச்சினையால் இப்போது மத்திய கிழக்கில் வேலை செய்கின்றேன். இங்கு எம்முடன் எமது பகுதியைச் சேர்ந்த இயக்கத்தில் இருந்த பலர் வேலை செய்கின்றனர். நாம் கருணாவை நம்பி இயக்கத்திற்கு வரவில்லை. தலைமையை நம்பியே வந்தோம். இன்றும் எமது அறைகளில் தலைவரின் படங்களையே வைத்துள்ளோம். ஆயினும் நாம் அங்கு வந்தால் புலனாய்வுத்துறையால் பிடித்து அடைக்கப்படுவோம். சுடப்படுவோம் என அங்குள்ளவர்கள் சிலர் எழுதுகின்றார்கள். நாங்கள் எந்தத் துரோகமும் செய்யவில்லை. எங்களில் அனேகர் இதையிட்டு மிகவும் பயப்படுகிறார்கள். பலாலி முதல் பூமுனைவரை விடுதலைக்காக சண்டை யிட்ட எம் நிலை மிகப் பரிதாபத்திற்குரியதாக உள்ளது.**

**கேள்வி பாவலன், கட்டார்**

**பதில்:-** இங்கு நீங்கள் குறிப்பிடுவது போல் பயப்படுவதற்கு எதுவுமே நடைபெறவில்லை. உங்களைப் போல இயக்கத்திலிருந்து விலகிய பலர் மீண்டும் இணைந்து செயற்படத் தொடங்கிவிட்டார்கள். இன்னும் இணைந்து கொண்டும் இருக்கின்றார்கள். துரோகிகளையும், துரோகிகளுக்குத் துணை நிற்பவர்களையும் நாம் ஏற்றுக்கொள்வதில்லை. ஏனையவர் எம்முடன் இணைந்து போராட முன்வர வேண்டுமென எதிர்பார்க்கின்றோம்.

# தமிழர் தரப்பு மீது பழியை போட முனையும் சக்திகள்

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடியில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பணிமனை மீது ஞாயிறு அதிகாலை தேசவிரோதக் கும்பல்கள் நடாத்திய தாக்குதலில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

2ம் லெப்ரினன் அருள்நேசன் என்ற போராளியே இவ்வாறு வீரச்சாவடைந்தவர் ஆவார். காலை 6.30 மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. அலுவலகத்தின் முன்பாக பட்டிருப்புக் கோட்ட அரசியல் பொறுப்பாளர் கமலக்கண்ணன் மற்றும் செல்வன் மாமா உட்பட நான்கு போராளிகள் நின்றுள்ளனர். பின்பக்கம் போராளியான அருள்நேசன் நின்று தேனீர் அருந்திக் கொண்டிருந்த போது கொலையாளிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். அதுமட்டுமன்றி அலுவலகத்துக்குள் நுழைந்து அங்குள்ள பொருட்களையும் தீயிட்டு கொழுத்தி விட்டு பின்னர் கைக்குண்டொன்றையும் வீசி விட்டுச் சென்றுள்ளனர். துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த போராளியை களுவாஞ்சிகுடி வைத்தியசாலையில் அனுமதித்து சிகிச்சை வழங்கிய போது அது பலனளிக்காத காரணத்தினால் அவர் வீரச்சாவடைந்தார்.

தாக்குதல் நடத்த வந்த கொலையாளிகள் களுவாஞ்சிகுடி படைமுகாமிலிருந்தே வந்துள்ளனர். இதனை பொதுமக்கள் பலர் பார்த்துள்ளனர். அதேவேளை பட்டிருப்புக் கோட்ட அரசியல் பொறுப்பாளர் கமலக்கண்ணனும் இந்த குற்றச் சாட்டை முன்வைத்திருக்கிறார். சம்பவம் நடந்தவுடன் களுவாஞ்சிகுடி விசேட அதிரடிப் படைமுகா முக்குத் தெரியப்படுத்தியும் அவர்கள் வரவில்லை. கொலையாளிகள் சென்ற பின்னர் தான் இவர்கள் வந்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். அதேவேளை தாக்குதல் நடாத்தியவர்கள் மட்டக்களப்புப் பக்கமே சென்றுள்ளனர்.




உண்மையில் சம்பவம் நடைபெற்றவுடன் அதிரடிப்படையோ அல்லது பொலிசாரோ அவ்விடத்துக்கு வந்திருந்தால் கொலையாளியை கைது செய்திருக்கலாம். ஆனால் அவர்கள் தமது வேலைகளை முடித்து வெளியேறிச் சென்ற பிற்பாடுதான் இவர்கள் வந்து விசாரணை மேற்கொண்டமை வெறும் கண்துடைப்பு.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெறுகின்ற சம்பவங்களையும், ஏனைய அம்பாறை, திருமலை மாவட்டங்களில் நடைபெற்ற சம்பவங்களையும் நன்கு அவதானித்தால் படையினர் அல்லது பொலிசாரின் படைமுகாம்கள் அல்லது காவலரண்களுக்கு சமீபமாகவே நடைபெற்றுள்ளதை அவதானிக்க முடியும். அந்த அடிப்படையில் களுவாஞ்சிகுடி அரசியல் பணிமனையில் இருந்து சுமார் 20 மீற்றர் தூரத்தில் சிறிலங்கா பொலிசாரின் காவலரண் உள்ளது.

அவ்வாறு இருந்தும் எவ்வாறு படைத்தரப்புக்கு சம்பந்தமில்லாமல் கொலையாளிகள் தாக்குதல் நடத்துவது என்பது கேள்விக்குறி. ஏனெனில் கதிர்காமர் படுகொலையை அடுத்து அவசர காலச்சட்டத்தை படைத்தரப்பு அமுல்படுத்தியுள்ளதால் படையினரின் சோதனைக் கெடுபிடிகள் அதிகரித்துள்ளன. சர்வ சாதாரணமாக ஒருவர் மோட்டார் சைக்கிளில் செல்லும் போது படையினர் மற்றும் பொலிசாரின் சோதனைச் சாவடிகளில் கடுமையாக விசாரிக்கப்படுகின்றனர். அத்துடன் சோதனை நடவடிக்கைகளும் அதிகம் காணப்படுகின்றது. இந்த நிலையில் படைத் தரப்புக்கு சம்பந்தமில்லாத ஒருவர் மோட்டார் சைக்கிளில் துப்பாக்கி, கைக் குண்டுகள் கொண்டு வந்து தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச் செல்வது என்பது இலகுவான விடயமில்லை

அண்மையில் வாகரை கிருமிச்சை சந்தியில் ஊடுருவி மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் ஒரு போராளி வீரச்சாவடைந்தார். மற்றும் இரு பொது மக்கள் உட்பட மூவர் காயமடைந்தனர். தாக்குதல் நடத்தியவர்கள் படைமுகாமிற்குள் சென்று புகுந்து கொண்டதை நிறையப் பொதுமக்கள் நேரடியாகக் கண்டுள்ளனர். அத்துடன் அவர்கள் படையினரின் சீருடை தரித்திருந்ததையும் அவதானிக்க முடிந்தது. இந்தச் சம்பவம் முடிவடைந்த பிற்பாடு வாழைச்சேனைப் பகுதியில் பொலிசார் மீதும், படையினர் மீதும் கைக்குண்டு வீச்சுத் தாக்குல் நடத்தப்பட்டது. அதே வேளை களுவாஞ்சிகுடி அரசியல் பணிமனை மீது நடாத்தப்பட்ட தாக்குதலின் பின்னர் மட்டக்களப்பு சந்திவெளி கோரக்கல்லிமடு ஆகிய இடங்களில் படையினர் மீதான தாக்குதல் நடாத்தப்பட்டது. இதில் மூவர் காயமடைந்தனர். ஆனால் எவரும் உயிரிழக்கவில்லை.

விடுதலைப் புலிகளின் அலுவலகங்கள் அல்லது போராளிகள் மீது நடாத்தப்படும் தாக்குதலுக்கு எதிரொலியாக படையினர், பொலிசார் மீது தாக்குதல் நடத்தப்படுவதாக ஒரு குற்றச்சாட்டை அரச தரப்பும், படைத்தரப்பும் சுமத்த முற்படுகிறது. ஆனால் இந்த குற்றச்சாட்டை மறுத்துள்ள மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் இதற்கு யார் காரணம் என்பதையும் தெளிவுபடுத்தியுள்ளார். இதில் அவர் சுட்டிக்காட்டுவது என்னவென்றால் படையினர் மீதோ அல்லது பொலிசார் மீதோ நடத்தப்படும் தாக்குதலில் அவர்கள் கொல்லப்படவில்லை. காயமடைகின்றார்கள் என்ற விடயம்.

இதன் படி பார்த்தால் விடுதலைப் புலிகள் மீது தாக்குதல் நடத்துபவர்களே படையினர் மீது தாக்குதலை நடத்தி புலிகள் மீது அவதூறு ஏற்படுத்த முனைகின்றார்கள் என்பதே அவரது கருத்தாக நோக்க முடியும். எனவே ஏதோ ஒருவகையில் சமாதானத்தைக் குழப்பி பழியை தமிழர் தரப்பு மீது சுமத்தவே படைத்தரப்பும் தேசவிரோத சக்திகளும் முனைப்பாகவிருப்பது தெளிவாகத் தெரிகின்றது.

**எஸ்.கே**

# கறுப்பு செப்டெம்பர் துயர வரலாற்று பதிவு



தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் 1990 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் கறைபடிந்த வரலாறாக தமிழ் மக்களது மனங்களில் படிந்துள்ளது. அந்தளவிற்கு படுகொலைகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் சிங்கள இராணுவம் மற்றும் தேசவிரோதக் கும்பல்கள், ஊர்காவல் படையினரால் அரங்கேறியிருக்கின்றன.



இதில் கிழக்குப் பல்கலைக் கழகத்தில் 1990ம் ஆண்டு செப்டெம்பர் 05ம் திகதி 158 தமிழ் மக்கள் சிங்களப் படையினரால் கைது செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டமை, செப்டெம்பர் 09ம் திகதி சத்துருக்கொண்டான், பிள்ளையாரடி, கொக்குவில் கிராமங்களைச் சேர்ந்த 184 தமிழ் மக்கள் கொடூரமாக சிறிலங்காப் படையினரால் படுகொலை செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

அதனை விட இதே காலகட்டத்தில் இப்பகுதியில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டதன் காரணமாக தமிழ் மக்கள் மனங்களில் துயர வரலாற்றுப் பதிவாகியுள்ளது. இந்த சோகமான நிகழ்வுகள் நடந்தேறி பதினைந்து வருடங்களாகின்றன. இன்னும் கொலையாளிகள் மீதான எவ்வித நடவடிக்கையும் அரச தரப்பால் இறுக்கமாக மேற்கொள்ளப்பட்டு அவர்களுக்கான தண்டனைகள் வழங்கப்படாமையானது அரசின் அசமந்தத்தனத்தை வெளிக்காட்டுவதுடன் ஆயுதப்படைகளின் அராஜகத்தனங்களை ஆமோதிப்பதாகவே இவை அமைந்துள்ளன.

சத்துருக் கொண்டான் படுகொலை நடந்து பதினைந்தாவது ஆண்டு துயர நாளில் அவ்விரு படுகொலைச் சம்பவங்களை மீளவும் நினைவூட்டி இப்பதிவு எழுதப்படுகிறது. கிழக்குப் பல்கலைக் கழகத்தைச் சூழவுள்ள கிராமங்களைச் சேர்ந்த பொது மக்கள் 1990 யூன் மாதம் வன்செயல்கள் மீண்டும் ஆரம்பித்ததையடுத்து சிறிலங்கா இராணுவத்தினர், ஊர்காவல் படையினர் ஒட்டுப் படையினர் அனுசரணையுடன் கிராமம் கிராமமாக மேற்கொண்ட அடக்கு முறைகளின் காரணமாக இடம் பெயர்ந்தார்கள். சுமார் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் அபயம் தேடிக் கிழக்குப் பல்கலைக் கழகத்தில் தஞ்சமடைந்தனர்.

அந்த அகதி முகாம் கூட தமக்குப் பாதுகாப்பை ஏற்படுத்தாது என்பதை அறியாதவர்களாக அங்கு வாழ்ந்து வந்த அகதிகள் செப்டெம்பர் 05ம் திகதி விடிந்ததும்தான் தமிழ் மக்களின் பாதுகாப்பற்ற தன்மையை உணர்ந்தார்கள்.

1990 செப்டெம்பர் 05ம் திகதி புதன்கிழமை அதிகாலை 6.00 மணிக்குக் கொம்மாதுறைப் படைமுகாமைச் சேர்ந்த படையினர் அயலிலுள்ள முகாம்களைச் சேர்ந்த படையினர் துணையுடன் கிழக்குப் பல்கலைக்கழக அகதி முகாமைச் சுற்றி வளைத்தார்கள். இ.போ.ச.வுக்குச் சொந்தமான பஸ் வண்டிகளுடன் வந்திருந்த படையினர் வெள்ளை வானில் பொருத்தப்பட்டிருந்த ஒலிபெருக்கி மூலம் மூன்று வரிசைகளில் (12-25 வயது, 26-40 வயது, 40 வயதிற்கு மேற்பட்டவர்கள்) விளையாட்டு மைதானத்திற்கு வருமாறு அறிவிக்கப்பட்டது.

அப்போதுதான் அங்கிருந்த அகதிகள் அகதி முகாமிற்குள்ளும் பாதுகாப்பற்ற தன்மையை உணர்ந்தார்கள். ''மூன்று வரிசைகளாக வயது அடிப்படையில் பிரிக்கப்பட்டு வந்தவர்கள்.

ஓரிடத்தை நோக்கிக் கடந்து செல்லுமாறு உத்தரவிடப்பட்டது. அங்கே இராணுவச் சீருடை தரித்த ஐவர் முகமூடி அணிந்தவாறு இருந்தனர். அவர்களுக்குப் பின்னால் ஏழு முஸ்லிம்கள் நின்றார்கள்.'' அவர்களில் ஒரிருவரை எனக்குத் தெரியும். முகமூடிகளால் சைகைகாட்டப்படுபவர்கள் தனியாக ஓரிடத்தில் தடுத்து வைக்கப்பட ஏனையவர்கள் செல்ல அனுமதிக்கப்பட்டார்கள் என்று தனது அனுபவத்தை விபரித்தார் எஸ்.ஆறுமுகம் (51வயது) எனும் விவசாயி.

அப்போது முகாமைப் பரிபாலித்து வந்த பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் கணிப்பின்படி 158 பேர் முகாமிலிருந்து அழைத்துச் செல்லப்பட்டார்கள். வாழைச்சேனைப் பக்கமாகக் கொண்டு செல்லப்பட்டதாகவும், நாவலடி கிறவல் குழியில் போட்டு எரிக்கப்பட்டதாகவும் நம்பப்படுகிறது.

ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையின் படி வந்தாறுமூலை பல்கலைக்கழக சுற்றி வளைப்பில் கப்டன்களான முனாஸ், பாலித, குணரட்ன மேஜர்களான மஜீத், மோனன் ஆகியோர் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் இடம் பெற்று மூன்று தினங்களின் பின்னர் கிழக்குப் பல்கலைக்கழக அகதிமுகாமிற்குச் சென்ற இராணுவத் தளபதி ஜெரிசில்வா குற்றவாளிகளாகக் காணப்பட்ட 158 பேர் கைது செய்யப்பட்டதாகத் தெரிவித்தார்.

அப்போது பிரதிப் படைத்துறை அமைச்சராக இருந்த ரஞ்சன்



விஜயரத்தினாவின் செயலாளராக இருந்த ஏ.டபிள்யூ பேர்னான்டோ 32 பேர் கைது செய்யப்பட்டதாகவும், 24 மணி நேரத்தில் விடுதலை செய்யப்பட்டதாகவும் மட்டக்களப்பு சமாதானக் குழுவுக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவித்திருந்தார்.

ஆனால் இன்றுவரை அந்த 32 பேர்கூட வீடு திரும்பவில்லை. செப்டெம்பர் 23ம் திகதி மீண்டும் பல்கலைக்கழக அகதி முகாமைச் சுற்றிவளைத்த படையினர் 16 பேரை அழைத்துச் சென்றார்கள். அவர்களும் அடிச்சுவடு தெரியாமல் அழிக்கப்பட்டுள்ளார்கள்.

கிழக்குப் பல்கலைக்கழக சம்பவம் நடைபெற்று நான்கு நாட்கள் கடந்த நிலையில் மட்டக்களப்பு மாகாண நகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள சத்துருக்கொண்டான் ''போய்ஸ்டவுன்'' என்னும் இடத்திலும் இதே போன்ற ஒரு சம்பவம் இடம் பெற்றது.

09.09.1990 அன்று மாலை சத்துருக்கொண்டான் Boys Town படை முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர், சத்துருக்கொண்டான் கிராமத்தையும், அருகிலுள்ள பிள்ளையாரடி, பனிச்சையடி, கொக்குவில் போன்ற கிராமங்களையும், சுற்றிவளைத்து அங்கிருந்து 184 தமிழ் பொதுமக்களை விசாரணைக்கென்று அழைத்துச் சென்றனர். (இதில் 84 பெண்கள், 50 குழந்தைகள், இரண்டு கர்ப்பிணிப்பெண்கள் மற்றும் நான்கு மாதக் குழந்தை ஒன்றும் சில முதியவர்களும் அடங்கியிருந்தனர்) இவர்கள் அனைவருமே Boys Town இராணுவ முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டார்கள். அவர்களது உடல்கள் பின்னர் எரியூட்டப்பட்டன.

இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டவர்களில் ஒரே ஒரு நபர் மட்டுமே பலத்த காயங்களுடன் உயிர் தப்பியிருந்தார்.

இந்தக் கொலைகள் பற்றி விசாரிக்கவென நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக் குழுவிற்கு முன் அந்த நபர் சாட்சியமளிக்கையில், ''முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்ட பொது மக்களின் கண்கள் மூடிக்கட்டப்பட்டன. அனைவரினதும் கைகளும் பின் புறமாக கட்டப்பட்டன. என்னை முந்திரிகை மரமொன்றின் கீழே படுக்குமாறு கூறி, கூரிய ஆயுதம் ஒன்றினால் தாக்கினார்கள். நான் நினைவிழந்து விட்டேன்'' என்று தெரிவித்திருந்தார்.

இந்த முகாமிற்கு அருகில் வசித்தவர்கள் தெரிவித்த கருத்துக்களின் படி பொதுமக்கள் முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்ட சிறிது நேரத்தில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டன. அழுகுரல்களும், கதறல்களும் கேட்டன. பின்னர் புகைமண்டலம் தெரிந்ததுடன், பிணவாடையும் வீசியது.

இவ்வாறு சிறிலங்கா இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்படாத, தமது வீடுகளில் மறைந்திருந்து தப்பிய கிராம வாசிகள் தெரிவித்தார்கள். இந்தச் சம்பவத்திலும், முஸ்லிம் ஊர்காவல் படையினர் சம்பந்தப்பட்டிருந்தனர் என்று அப்பிரதேச வாழ்மக்கள் தெரிவித்தனர்.

இது போன்று பல சம்பவங்கள் மட்டக்களப்பில் சிறிலங்கா படையினரால் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நல்ல நீதி கிடைக்கவில்லை என்பது மிகவும் கவலைக்குரிய விடயமே. ஜனாதிபதி ஆணைக்குழு, அது, இது என்று சில கண் துடைப்புக்கள் இடம்பெற்றனவே தவிர, பாதிக்கப்பட்ட இப்பிரதேச மக்களுக்கு சரியான நியாயம் கிடைக்கவில்லை என்றே கூறவேண்டும்.

இந்தப் படுகொலைகளில் சம்பந்தப்பட்டதாக பொதுமக்களால் அடையாளம் கண்டுபிடிக்கப்பட்ட இராணுவ அதிகாரிகளும், நபர்களும் இன்னும் சுதந்திரமாக உலவிக் கொண்டுதான் இருக்கின்றார்கள். இந்தப் படுகொலைச் சம்பவங்களுடன் தொடர்புடைய சிறிலங்கா இராணுவ உயர் அதிகாரிகள், மேலதிக பதவி உயர்வுகளைப் பெற்றுக் கொண்டு உயர் அந்தஸ்துடன் காலம் கழிப்பதையும் நடைமுறையில் காணக்கூடியதாக இருக்கின்றது.

இத்தனை படுகொலைகளுக்கும் மறைமுக அங்கீகாரம் வழங்கி, இது போன்ற படுகொலைகளை ஒரு போரியல் யுத்தியாகவே மேற்கொண்டிருந்த சிறிலங்கா அரசாங்கமோ இன்று சர்வதேச அரங்கில் மனித உரிமைகள் பற்றி பாரிய சொற்பொழிவுகளை நடாத்திக் கொண்டிருக்கின்றது.

சாதாரண பதவி உயர்வு வழங்கப்படாத ஒரு சிறு விடயம் கூட இன்று ஒரு பாரிய மனித உரிமை மீறலாக சித்தரிக்கப்படும். இந்த உலகத்தில், நூற்றுக்கணக்கில் கொன்று புதைக்கப்பட்ட மனித உயிர்களின் பெறுமதி கணக்கில் கூட எடுக்கப்படாதது ஆச்சிரியமான விடயம்தான். அவை தமிழ் மக்களது உயிர்கள் என்பதனால்தான் பெறுமதியற்றுப் போய் விட்டனவோ?

==========
ஜெயா
==========

# ஆறு கடக்கும் வரைக்கும் அண்ணன் தம்பி....

-பிரவீனா-





இப்போது தேர்தல் களை கட்டிவிட்டது தென்னிலங்கையின் மூலை முடுக்குகளில் எல்லாம். வர்ணச் சுவரொட்டிகள். இரு பிரதான வேட்பாளர்களின் பென்னம் பெரிய கட்டவுட்டுக்கள். இதனை விட பிரசாரக் கூட்டங்களும். தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இவ்வளவும் நடைபெறும் போதும் இன்னும் தேர்தலுக்கான திகதி தேர்தல் திணைக்களத்தால் அறிவிக்கப்படவில்லை. தேர்தல் திகதி. வேட்பு மனுத் தாக்கல் செய்யும் காலம் என்பன இன்னும் வெளிவராத நிலையில் ஜனாதிபதித் தேர்தல் சூடு பிடித்திருக்கிறது.

இந்தக் கட்டத்தில் இரண்டு பிரதான கட்சிகளும். வாக்குறுதிகளை அள்ளி வீசி வருகின்றனர். ரணில் விக்கிரமசிங்க அவர்களும். சிறிலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளரான பிரதமர் மகிந்த ராஜக்ஷ அவர்களும். பல்வேறு வாக்குறுதிகளை அளித்து வருகின்றனர். இந்த வாக்குறுதிகள் எந்தளவு சாத்தியமாகும். தமிழ் மக்கள் இவர்களை நம்பலாமா? இவர்களின் நோக்கம் என்ன? என்பதைப் பற்றி இப்பத்தி விபரிக்கின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியா? சிறிலங்கா சுதந்திரக் கட்சியா? வெற்றி பெறுவது என்பது முக்கியமல்ல. இவர்களது வாக்குறுதிகளை எந்தளவிற்கு நடைமுறைப்படுத்தப் போகின்றார்கள் என்பதை நோக்குவோம். ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிடும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா அவர்கள் ஜனாதிபதித் தேர்தலில் இலகுவாக வெற்றி பெறலாம் எனக் கருதுகிறார். தான் வெற்றி பெற்று விட்டால் தடைப்பட்டு நிற்கும் சமாதானப் பேச்சுக்களை மீளத் தொடங்கவிருப்பதாகவும். போர் நிறுத்தத்தைப் பலப்படுத்தப் போவதாகவும். குறிப்பிட்டிருக்கிறார்.

தற்போது சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்டிருப்பது ரணில் கூறுவதற்கு சாதகமாய் அமைந்துள்ளன. அதேவேளை தமிழ் மக்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிப்பார்கள் என்ற நம்பிக்கை ரணில் விக்கிரமசிங்காவுக்கு உண்டு. போர் நிறுத்த உடன்படிக்கை கைச் சாத்திடப்பட்டு ஆறு சுற்றுப் பேச்சுக்கள் நடைபெற்ற போதும் இயல்பு நிலையை முழுமையாக அமுல்ப்படுத்துவதற்கோ. இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளிலிருந்து முழுமையாக படையினரை விலக்கி மக்களை மீளக் குடியமர்த்துவதற்கோ முயற்சிகள் அவரால் மேற்கொள்ளப்படவில்லை. இதனை முழுமையாகச் செய்ய முடியாததற்கு ஐக்கிய தேசியக் கட்சி அரசு தெரிவித்த கருத்து யாதெனில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி எதிர்க்கட்சித் தரப்பாக இருப்பதாலும். படைத்தரப்புத் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதுள்ளதாகவும். ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார். இதன் காரணமாக இலகுவில் குற்றம் சுமத்திவிட முடியாத நிலை அப்போது ஏற்பட்டது.

### உள் நோக்கம் என்ன?

ரணில் விக்கிரமசிங்காவைப் பொறுத்த மட்டில் சர்வதேச சமூகத்தின் குணம். குறி. அறிந்து அதற்கேற்ப தூண்டில் போட்டவர். சர்வதேச சமூகம் தமிழ் மக்களின் பிரச்சினையைப் பேச்சு வார்த்தை மூலம் தீர்க்க வேண்டும் என வலியுறுத்திய போது அதனைக் குறுக்கிட்டுக் குழப்பாது அங்கீகரிப்பதுடன் பேச்சுக்களை விரிவுபடுத்தி நடத்துவதற்கான இணக்கத்தையும் வெளிப்படுத்தியிருந்தார்.

இது சர்வதேச மட்டத்தில் ரணில் விக்கிரமசிங்காவின் செல்வாக்கை அதிகரிக்கச் செய்தது. இந்த நிலையில் சமாதான முயற்சிகள் தோல்வியடைந்தால் எவ்வாறு எதிர்கொள்வது என்பதற்கான மாற்றுத் திட்டமொன்றையும் ரணில் வகுத்திருந்தார். அதுதான் சர்வதேச வலைப்பின்னல். இதற்குள் விடுதலைப்புலிகளை மாட்டிவிடுவதற்கான முயற்சிகளிலும். துரிதமாகச் செயற்பட்டவர்தான் ரணில் விக்கிரமசிங்க.

சரி. ரணில் விக்கிரமசிங்கா ஜனாதிபதி தேர்தலில் வென்று விட்டார் என்று வைத்துக் கொள்வோம். அவர் அதிரடியாகச் செய்ய வேண்டிய மிக முக்கியமான நடவடிக்கையுள்ளது எது?

அதுதான் ஒட்டுப்படைகளிடமிருந்து ஆயுதக் களைவு. இந்த ஆயுதக் களைவு விவகாரத்தில் தீர்க்கமான. இறுக்கமான நடவடிக்கைகளை மேற்கொண்டு அவற்றைக் களைவதுடன். அவ்வாறான தேசவிரோத சக்திகளை வடக்குக் கிழக்கிற்கு வெளியே அகற்ற வேண்டும்.

இது போர் நிறுத்த உடன்படிக்கையைத் தொடர்ந்து பேணுவதற்குரிய சூழலைத் தோற்றுவிக்கும். அதேவேளை தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பித்தல். சுனாமிப் பொதுக்கட்டமைப்பு என நம்பிக்கையூட்டக் கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதில் எந்தளவு ரணில் விக்கிரமசிங்கா தமது நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருக்கின்றார் என்பது கேள்விக்குறி?

**"ஒட்டுப்படைகள் தொடர்பாக சமாதானப் பேச்சுக்கள் நடைபெறுவது தடைப்பட்டிருப்பது தொடர்பாகவோ நெகிழ்வுத் தன்மையுடனான நடவடிக்கைகளை அல்லது கருத்துக்களை தெரிவிக்காத பிரதமர் ஜனாதிபதியானதன் பிற்பாடு எவ்வாறு தேசியத் தலைவருடன் பேச்சுக்கள் நடத்தப் போகிறார். எனவே இரு பிரதான கட்சி வேட்பாளர்களும், சமாதானத்தைக் கொண்டு வருவதற்கான தங்களது மனம் நிறைந்த நிலைப்பாட்டைத் தெரிவிப்பது காலத்திற்கு அவசியமானது."**

ஏனெனில் ஒட்டுப்படைகள் குறித்து இதுவரை எவ்வித கருத்துக்களையும் அவர் பகிரங்கமாகத் தெரிவிக்காமை தமிழ் மக்களிடையே சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

அடுத்து ஜனாதிபதி வேட்பாளரான மகிந்த பற்றி ஆராய்வோம். பிரதமராகப் பதவி வகித்த காலத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து எவ்வித கருத்துக்களையும் தெரிவிக்கவில்லை. அது மட்டுமின்றி சுனாமிப் பொதுக்கட்டமைப்பினை உருவாக்குவது தொடர்பாக ஜனாதிபதிக்கும். ஜே.வி.பியினருக்கும் முறுகல் நிலை ஏற்பட்டு ஜே.வி.பி ஆட்சியை விட்டு விலகும் வரைக்கும் அல்லது விலகிய பின்னராவது கூட சுனாமிப் பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக பிரதமர் கருத்து எதனையும் தெரிவிக்காமை தமிழ் மக்களால் இவர் எவ்வாறானவர் என்பதை இனங்காணக் கூடியதாக இருந்தது. தற்போது ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக பேரினவாதக் கட்சிகளான ஜே.வி.பி. ஹெல உறுமய போன்ற கட்சிகளின் ஆதரவைக் கோரியிருக்கிறார்.

இவ்விடயத்தில் கருத்துத் தெரிவித்த ஜே.வி.பி தாம் விதிக்கும் நிபந்தனைகளை மகிந்த ராஜபக்ஷ ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில் ஆதரவு வழங்குவதாகத் தெரிவித்துள்ளது.

இதில் பிரதான விடயம் போர் நிறுத்தம். சமாதானப் பேச்சுக்கள். நோர்வே அனுசரணைப் பணி. தற்போதுள்ள போர் நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதுடன் எவ்வித பேச்சு வார்த்தையும் இன்றி மீண்டும் ஒரு போரைத் தொடங்குவதற்கான அழுத்தத்தினை ஜே.வி.பி முன்வைத்திருக்கின்றது. இதனை ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில் மாத்திரமே ஆதரவு வழங்குவதாக அக்கட்சி தெரிவித்திருக்கிறது.

இதில் எந்தளவிற்கு மகிந்த ஜே.வி.பியுடன் நெகிழ்வுப் போக்கை கடைப்பிடித்து உடன்பாட்டுக்கு வருவாராயின் தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பாக அவர் தெரிவிக்கும் கருத்துக்கள் செயல் வடிவம் பெறும் என்பது கேள்விக்குறி.

ஏனெனில் இப்போது மகிந்த ராஜபக்ஷ தெரிவித்திருக்கும். கருத்துப் பற்றி நோக்குவோம். தான் ஜனாதிபதியானால் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களுடனும் நேரடிப் பேச்சுக்கள் நடத்தப் போவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

சர்வதேச சமூகத்தின் அனுசரணையின்றி நேரடிப் பேச்சுக்குத் தயாராக இருப்பதாக தெரிவித்திருக்கும் கருத்துப்படி அவர் வெற்றி பெற்ற பின் அப்படி செயல்படுவாரா என்பது கேள்விக்குறி.

அவ்வாறான பேச்சுக்கான சூழலை உ வாக்குவதற்கு முன் செய்ய வேண்டிய காரியங் நிறையவே அவருக்கும் உள்ளன.

அதில் முக்கியமானது ஒட்டுப்படைகளி ஆயுதக் களைவு. இந்த விடயத்தில் தமிழர் தர இறுக்கமாகவுள்ளது. போர் நிறுத்த காலத்தில் தமிழ் மக்கள் மீது சிறிலங்கா அரசும். சிறிலங்காப் படைத்தரப்பும். நிழல் யுத்தமொன்றைத் திணித்துள்ளனர். இந்த நிழல் யுத்தம் திணிக்கப்படுவதற்குப் பிரதான காரணம் ஒட்டுப்படைகள். அதனால் போர் நிறுத்தம் மிக ஆபத்தான கட்டத்திலுள்ளது.

கதிர்காமர் படுகொலைக்குப் பின்னர் இரு தரப்பும் நேரடிப் பேச்சுக்களை நடாத்தி போர் நிறுத்த உடன்படிக்கையை பலப்படுத்த வேண்டும் என சர்வதேச சமூகம் வலியுறுத்தியிருந்தது.

இதற்கமைய அனுசரணைப் பணிகளை மேற்கொள்ளும் நோர்வே ஒஸ்லோவில் இரு தரப்பையும் பேச்சு வார்த்தை மேசைக்குக் கொண்டு வருவதற்கான ஆயத்தங்கள் செய்த போது. இறுதியாக ஜனாதிபதியவர்கள் ஒஸ்லோவில் நடைபெறும் பேச்சு வார்த்தையில் கலந்து கொள்ள முடியாது. அவை உள் நாட்டில் நடைபெற வேண்டும் எனத் தெரிவித்திருந்ததை அடுத்து நேரடிப் பேச்சுக்கள் நடைபெறுவதற்கான சாத்தியமற்றுப் போய் விட்டது. இதில் இன்னொரு விடயம். இதுவரை காலமும் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளுக்கு முன்னதாக நிபந்தனைகள் முன் நிலைப்பட்டிருந்தது. ஆனால் தற்போது நிபந்தனைகள் முன் வைக்கப்படாத நிலையில் இடம் பெரியதொரு பிரச்சினையாகி விட்டது. இதில் நேரடிப் பேச்சு என்பது இரு தரப்புக்கும் இடையே நடைபெற்று நீண்டதொரு கால இடைவெளியை ஏற்படுத்தியிருக்கிறது.

எனவே ஏற்கனவே நடைபெற்ற ஆறு சுற்றுப் பேச்சுக்கள் சர்வதேச அரங்கில் நடைபெற்றன. அந்தடிப்படையில் இப்பேச்சுக்கள் சர்வதேச சமூகத்தில் நடைபெற வேண்டியது அவசியம். இது நியாயமான கோரிக்கை. ஆனால் அரசாங்கம் ஒஸ்லோவில் நடைபெறும் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள மாட்டேன் எனக் கூறுவது விதண்டாவாதம் மட்டுமல்ல. தந்திரோபாயக் காய் நகர்த்தலாகவே கருத வேண்டியுள்ளது. இந்த நிலையில் பிரதமரும். ஜனாதிபதி வேட்பாளருமாகிய மகிந்த ராஜபக்ஷ எவ்வித கருத்துக்களையும் தெரிவிக்கவில்லை என்பது இங்கு கவனிக்கப்பட வேண்டியது.

ஒட்டுப்படைகள் தொடர்பாக சமாதானப் பேச்சுக்கள் நடைபெறுவது தடைப்பட்டிருப்பது தொடர்பாகவோ நெகிழ்வுத் தன்மையுடனான நடவடிக்கைகளை அல்லது கருத்துக்களை தெரிவிக்காத பிரதமர் ஜனாதிபதியான தன் பிற்பாடு எவ்வாறு தேசியத் தலைவருடன் பேச்சுக்கள் நடத்தப் போகிறார்.

எனவே இரு பிரதான கட்சி வேட்பாளர்களும். சமாதானத்தைக் கொண்டு வருவதற்கான தங்களது மனம் நிறைந்த நிலைப்பாட்டைத் தெரிவிப்பது காலத்திற்கு அவசியமானது.

அதேவேளை போர் நிறுத்தத்தை பாதிப்படையச் செய்து தமிழ் மக்களுக்கு எதிராகத் திணிக்கப்பட்ட நிழல் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான அதிரடி நடவடிக்கையை இவர்கள் வெற்றி பெற்றபின் மேற்கொள்வார்களா என்பது சந்தேகம். அமெரிக்கா. இந்தியா. பாகிஸ்தான். சீனா. ரஷ்யா போன்ற நாடுகளின் இராணுவ உதவிகளைப் பெறுவதும். அத்தகைய நாடுகளின் பலத்தில் நின்று விடுதலைப்புலிகளை நசுக்குவதுமே இவர்களது அரசியல் ராஜதந்திர முயற்சியாகும். மக்கள் பலத்துடன் தேசிய எழுச்சி பெற்று நிற்கும் ஒரு விடுதலை அமைப்பை சர்வசாதாரணமாக அழித்துவிடலாம் எனக் கருதுவார்களானால் அது முடியாத காரியம்.

வெறுமனே இராணுவக் கட்டமைப்பை மட்டும் கொண்ட விடுதலை அமைப்பாக விடுதலைப்புலிகளை நோக்கி விட முடியாது. ஒரு நாட்டின் அரச இயந்திரம் இயங்குவதற்குத் தேவையான பல்துறைக் கட்டமைப்புக்களையும். நிறுவி பரிணாமம் பெற்று நிற்கும் அதேவேளை தாயகப் பிரதேசத்தின் கணிசமான நிலப்பரப்பையும். தன்னகத்தே வைத்திருக்கும் மக்கள் பலம் மிக்க விடுதலை அமைப்பை மகிந்த நினைப்பது போன்றோ. சந்திரிகா நினைப்பது போன்றோ இனவாதக் கட்சிகளான ஜே.வி.பி. ஹெல உறுமய நினைப்பது போன்றோ அழித்து விட முடியாது. அவ்வாறான முயற்சிகளில் ஈடுபட முனைவார்களாயின் அது தென்னிலங்கையிலும். சிங்களப் படைகளுக்குமே பேரழிவை ஏற்படுத்தும்

எனவே இனவாத சாபமிடப்பட்ட கருத்துக்களை அரசியல் வாக்குறுதிகளாக தமிழ் மக்கள் மீது அள்ளி வீசி வெற்றி பெற நினைத்தால் அது முடியாத காரியம். ஆறு கடக்கும் வரைக்கும் அண்ணன் தம்பி. பின்னர் நீ யாரோ. நான் யாரோ என்பது போன்று இந்த ஜனாதிபதி வேட்பாளர்கள் செயற்பட்டவர்கள். எதிர்காலத்திலும் அவ்வாறே செயற்படுவார்கள் என்பதில் ஐயமில்லை. அல்லது இதய சுத்தியுடன் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணும் கரிசனை இருக்குமானால் இப்போது அதற்கான நல்லெண்ணச் சூழலை உருவாக்க வேண்டும். ஆனால் கள நிலமை அவ்வாறு இல்லை. அவசர காலச் சட்டத்தைப் பயன்படுத்தி தமிழ் மக்கள் மீதும் போராளிகள் மீதும் படைத்தரப்பு பல்வேறு கெடுபிடிகளை கட்டவிழ்த்துள்ள இன்றைய நிலையில் எதிர் காலத்தில் இவர்கள் சமாதானத்தைக் கொண்டு வருவார்கள் என்பதில் நம்பிக்கை கொள்ளக் கூடிய சூழ்நிலையில்லை.

# நெல் விலை வீழ்ச்சியால் வேதனையடையும் விவசாயிகள்

மட்டக்களப்பு மாவட்ட மக்களின் அன்றாட அடிப்படைத் தொழில்களுள் விவசாயத் தொழில்த்துறையும் முக்கிய இடத்தினை வகிக்கின்றது. இங்கு வாழ்கின்ற மக்கள் இவ்விவசாயத் தொழிலை தங்களுடைய பிரதான தொழிலாகவும் ஜீவனோபாயத் தொழிலாகவும் மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழர் தாயகப் பிரதேசங்களில் ஒன்றான மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பிரதேசங்களில் விவசாயமானது முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போதிலும் படுவான்கரைப் பகுதியிலேயே முழு அளவிலான விவசாயச் செய்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மட்டக்களப்பு மாவட்ட த்தை எழுவான்கரை, படுவான்கரை என இரு பெரும் பகுதிகளாக மக்கள் கைக்கொண்டு வருகின்றனர்.

இதனடிப்படையில் எழுவான் கரைப்பகுதியில் வர்த்தக வாணிபத்துறையும், படுவான்கரைப் பகுதியில் விவசாயத்துறையும் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், எழுவான்கரைப் பகுதியில் வாழ்கின்ற மக்களில் பெரும்பாலானோர் விவசாயத்துறையிலும் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் படுவான்



கரைப் பகுதியில் விவசாயத்தை செய்து கொண்டு எழுவான் கரைப்பகுதியில் வாழ்கின்றனர் என்பது குறிப்பிட வேண்டிய விடயமாகும்.

மீன்பாடும் தேனாடு எனும் சிறப்புப் பெயரைக் கொண்டு விளங்கும் மட்டக்களப்பு மாவட்டமானது வயல் வரப்புக்களையும், குளம் குட்டைகளையும், உள்ளாக்கிக் கொண்டு விளங்குவதோடு, அழகிய நகரையும் உள்ளடக்கியதொன்றாகவும் திகழ்கின்றதென்றால் அது மிகையாகாது. வயல் வரப்புகளையும், குளம் குட்டைகளையும் கொண்டு விளங்குகின்ற இம் மாவட்டம் வேளாண்மைச் செய்கைக்கு மிகவும் உறுதுணையாக இவைகள் விளங்குகின்றன.

மட்டக்களப்பு மாவட்ட மக்கள் பலவிதமான தொழில்த் துறைகளில் அதாவது மீன்பிடி, நெசவு, தச்சு, வணிகம், வர்த்தகம் போன்ற துறைகளில் ஈடுபட்டாலும் இவ் விவசாயத் துறையானது அவர்களுடைய வாழ்வியலில் ஒரு முக்கிய தொழிலாகவும், உடலுக்கு உயிரூட்டக்கூடிய தொழிலாகவும் விளங்குகின்றது.

விவசாயமானது உயர்மட்ட மக்கள் மத்தியிலிருந்து அடிமட்டத்திலுள்ள மக்களுடைய வாழ்விலும் பின்னிப்பிணைந்தும் காணப்படுகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வணிகர்களினாலும் சரி உத்தியோகத்தர்களினாலும் சரி அடிமட்ட கூலிவேலை செய்கின்றவர்களானாலும் சரி எல்லாத் தரப்பினர்களிடையேயும் இவ் விவசாயமானது தடம் பதித்துள்ளது.

இங்கு மேற்கொள்ளப்படுகின்ற விவசாயச் செய்கையானது. முக்கிய இரண்டு காலப்பகுதியைக் கொண்டதாகவும் அமைந்துள்ளது. அத்துடன் முழுமையாக மழையை நம்பிச் செய்கை பண்ணப்படும் நிலப்பரப்புக்களும் இங்கு காணப்படுகின்றன.

பெரும் போக வேளாண்மைச் செய்கையானது பருவகால மழையை நம்பிச் செய்கை பண்ணப்படுவதாகும். சிறு போகம் என்பது குளங்களில் தேக்கி வைக்கப்பட்டுள்ள நீரைக் கொண்டு செய்கை பண்ணப்படுவதாகும். இவ்வாறான இரண்டு பிரிவுகளாகவே விவசாயம் மேற்கொள்ளப்படுகின்றது.

இவற்றில் 2004-2005ற்கான புள்ளிவிபரப் படி
விதைக்கப்பட்ட நிலப்பரப்பு
பெரும்போகம் - 43486 ஏக்கர்
சிறுபோகம் - 47284 ஏக்கர்

நிலப்பரப்பிலும் செய்கை பண்ணப்பட்டது. அத்துடன் முற்றிலும் மழையை நம்பி செய்கை பண்ணப்படும் நிலப்பரப்பானது 65905 ஏக்கராகும். 01. 2005 சிறுபோகம் 38098.5 ஏக்கரும் தற்போது செய்கை பண்ணப்பட்டவையாகும்.

இச்சிறுபோக மற்றும் பெரும்போக வேளாண்மைச் செய்கையானது மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பல குளத்திலுள்ள நீரை நம்பியே செய்கை பண்ணப்படுகின்றது. அவையாவன.

*01. நவகிரிக்குளம்*
மொத்த நிலப்பரப்பு -7085 ஹெக்டெயர்
பெரும் போகம் - 4410 ஹெக்டெயர்
சிறுபோகம் - 4305 ஹெக்டெயர்

*02. உன்னிச்சை*
மொத்த நிலப்பரப்பு -5165 ஹெக்டெயர்
பெரும்போகம் - 4920 ஹெக்டெயர்
சிறுபோகம் - 2797 ஹெக்டெயர்

*03. உறுகாமம்*
மொத்த நிலப்பரப்பு-3948 ஹெக்டெயர்
பெரும் போகம் - 3948 ஹெக்டெயர்
சிறுபோகம் - 1768 ஹெக்டெயர்

*04. வாகனேரி*
மொத்த நிலப்பரப்பு -3441 ஹெக்டெயர்
பெரும் போகம் - 3421 ஹெக்டெயர்
சிறுபோகம் - 3302 ஹெக்டெயர்

*05. கட்டுமுறிவுக்குளம்*
மொத்த நிலப்பரப்பு-344 ஹெக்டெயர்
பெரும்போகம் - 334 ஹெக்டெயர்
சிறுபோகம் - 334 ஹெக்டெயர்

*06. தும்பங்கேணி*
மொத்த நிலப்பரப்பு-274ஹெஹக்டெயர்
பெரும் போகம் - 221 ஹெக்டெயர்
சிறுபோகம் - 80 ஹெக்டெயர்

*07.வடமுனைக் குளம்.*
மொத்த நிலப் பரப்பு-153 ஹெக்டெயர்
பெரும்போகம் - 153 ஹெக்டெயர்
சிறுபோகம் - 126 ஹெக்டெயர்

*08. கித்துள்குளம்*
மொத்தநிலப் பரப்பு - 324 ஹெக்டெயர்
பெரும்போகம் - 324 ஹெக்டெயர்
சிறுபோகம் 200 ஹெக்டெயர்

*வெலிக்காகண்டி*
மொத்த நிலப் பரப்பு-137 ஹெக்டெயர்
பெரும்போகம் - 137 ஹெக்டெயர்
சிறுபோகம் - 100 ஹெக்டெயர்

*09. புனானை அணைக்கட்டு*
மொத்த நிலப்பரப்பு - 627 ஹெக்டெயர்
பெரும்போகம் - 627 ஹெக்டெயர்
சிறுபோகம் - 485 ஹெக்டெயர்

இவ்வாறு பல குளங்களிலிருந்து நீரைப் பெற்று மக்கள் தங்கள் வேளாண்மைச் செய்கையினை மேற்கொண்டு வருவதுடன், கமநலகேந்திர நிலையத்தினூடாக கடுக்காமுனைக்குளம், மற்றும் சிறுசிறு குளங்களில் நீரைச் சேகரித்து வைத்து மக்கள் மத்தியில் விவசாயத்துறையினை ஊக்கப்படுத்தி வருவதுடன், இவ்வாறான குளங்களில் இருந்து நீரைப் பெற்று விவசாயத்தினை செய்து வருகின்ற விவசாயிகள் தங்களுடைய விவசாயச் செய்கையில் மிகப்பெரிய பாரதூரமான பிரச்சினைகளையும் அண்மைக்காலமாக எதிர் நோக்கி வருகின்றனர். அதாவது தற்போது நிலவுகின்ற சமாதான மற்ற சூழல், விவசாயத்திற்குத் தேவையான மூலப்பொருட்களின் விலையேற்றம், மூலப்பொருட்களை உரிய நேரத்திற்குப் பெறமுடியாமை, உற்பத்திப் பொருட்களை சந்தைப் படுத்தமுடியாமை போன்ற பலதரப்பட்ட பிரச்சினைகளை எதிர் நோக்கி வருகின்றனர்.

அது மட்டுமல்லாமல் சுனாமியனர்த்தத்தின் பின்னர் வெளிநாட்டு அரசாங்கங்கள் மானிய முறையில் அரிசை இறக்குமதி செய்துள்ளமையினால் (உலக உணவுத் திட்டம்) விவசாயிகள் உரிய வேளைக்கு உரிய விலைக்கு தங்களுடைய நெல்லை ஏற்றுமதி செய்யமுடியாத நிலை காணப்படுவதுடன், இவ்வாறான நிலையினாலும் சரியான விலைக்கு நெல்லை விற்று இலாபம் ஈட்ட முடியாத நிலையினாலும் மக்கள் பெரும் இன்னோரன்ன கஷ்ரங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

இவ்வாறாக மக்கள் எதிர்

**- நேரு -**

நோக்கும் பலவித இன்னோரன்னப் பிரச்சினைகளை அறிவதற்கு சில விவசாயிகளிடம் தொடர்பினை ஏற்படுத்திக் கேட்டபோது.

*பட்டிப்பளையைச் சேர்ந்த க.விஜயரெத்தினம் (35) என்பவரிடம் விவசாயச் செய்கை பற்றிக் கேட்டபோது:-*



தம்பி நான் இந்த வருடம் 25 ஏக்கர் பூமி எடுத்துக் காலபோகம் (இடைப்போகம்) செய்தேன். பட்டிப்பளைக் கண்டம், மற்றும் மாவடி முன்மாரிப் பகுதியிலும் பூமி எடுத்து விவசாயம் மேற்கொண்டேன். நான் இந்த 25 ஏக்கர் பூமியையும் குத்தகைக்குத் தான் பெற்றுக் கொண்டேன்.

1 மூடை விதை நெல் - ரூபா 1000.00 - 1200.00 ரூபா வரை
1 ஏக்கர் பூமி குத்தகைக்கு ரூபா 2500.00
1 ஏக்கருக்கு பூமி உழவுப்பணம் ரூபா 2500.00
1 ஏக்கருக்கு 1 அந்தர் அடிக்கட்டு (N.P.K) ரூபா 1800.00
1 ஏக்கருக்கு விதைப்புக் கூலி (ஆட்கள்) ரூபா 1500.00
1 ஏக்கருக்கு 1கலன் M.40 புல்லெண்ணெய் ரூபா 1350.00
1 ஏக்கருக்கு 1 அந்தர் யூரியா ரூபா 600.00
1 ஏக்கருக்கு 1/2 அந்தர் T.D.M ரூபா 750.00
(கிருமிநாசினி நோய் என்ணெய்) 1 ஏக்கருக்கு ரூபா 2500.00 - 3000.00 வரை செலவாகும்.
அறுவடைக் கூலி- 1 ஏக்கருக்கு 30 மரைக்கால் நெல் அல்லது (3 அவணம்)
சூடு போடுவதற்கான கூலி
உழவு இயந்திரம் 1 மூடைக்கு ரூபா 150.00. ஆட்கூலி. ஏக்கருக்கு 4 மரைக்கால் நெல் அல்லது 20 மூடைக்கு 4 மரைக்கால் நெல் கொடுக்க வேண்டும்.
விளைச்சல் 1 ஏக்கருக்கு 15-20 மூடை வரை.
நெல்லுக்கான விலை நீட்டு வோளைரீ வெள்ளை - 1 மூடை ரூபா 800.00 - 825.00 வரை
1 மூடை L/B ரூபா 900.00
1 மூடை சம்பா ரூபா 900.00 - 925.00
ஏற்றுமதி செய்யும் இடம்.
காத்தான்குடி அரிசி ஆலை

இவ்வாறு கூடுதலான செலவின் மத்தியிலே தான் நான் இந்த 25 ஏக்கர் பூமியையும் செய்தேன். கஷ்டப் பட்டுக் கண் விளித்து வேர்வை சிந்தி காவல் காத்துத்தான் இந்த வேளாண்மைச் செய்கையை மேற்கொண்டேன். இந்நிலையில் துன்ப துயங்களின் மத்தியில் கடன்பட்டு வேளாண்மையை செய்து அறுவடை செய்து சூடு போட்டு நெல்லை விற்க முடியாத நிலைக்குள்ளாகி, விளாங்காய் தின்று விக்கினவனைப் போல் காணப்படுகின்றேன். நெல்லைச் சரியான விலைக்குக்கூட விற்க முடியவில்லை. அப்படி குறைந்த விலைக்கு விற்றால் முதலையும் இழக்க வேண்டிவரும்.

இப்போது கொஞ்சமாக விற்று விட்டு மீதியை வீட்டில் அடுக்கி வைத்துள்ளேன். எப்போது தான் நெல்லுக்கு விலையேறப்போகுது. எப்போது தான் நெல்லை எல்லாம் விற்று கடனிலிருந்து விடுதலையாகப் போறேனோ தெரியல என்றார் அவர்.

*அடுத்து அரசடித்தீவைச் சேர்ந்த இராஜதுரை என்பவரைக் கேட்ட போது:-*


தப்பி நான் இந்தப் போகம் $3^1/_2$ ஏக்கர் இடைப்போகம் செய்தேன்.
01. இது என்னுடைய சொந்தப் பூமி.
02. 1 ஏக்கருக்கான மொத்தச் செலவு ரூபா 15000.00 - 18000.00 வரை
03. 1 ஏக்கர் உழவுப் பணம் ரூபா 4000.00
04. மொத்தமாக $3^1/_2$ ஏக்கருக்குமாக இருந்த நெல் 80 மூடையாகும்.

தம்பி வேளாண்மைச் செய்கையானது மற்றத் தொழில்களைப் போல இல்ல. பெரியதொரு முதலை மண்ணுக்குள் போட்டு விட்டு அது முளைத்து வளர்ந்து விளையும் மட்டும் அதைப் பராமரித்து கஷ்டப்பட்டு விளைய வைத்து எடுக்க வேண்டும். இலாபம் வந்தாலும் சரி. நஷ்டம் வந்தாலும் சரி நாமதான் அனுபவிக்க வேண்டும்.

இந்த வேளாண்மைச் செய்கையானது மிகவும் கஷ்ரமான தொரு தொழில். நாளுக்கு நாள் பசளை எண்ணெய்களுக்கு விலை உயர்ந்து கொண்டே செல்கின்றது. ஆனால் நெல்லுக்கு விலை குறைந்து கொண்டே வருகின்றது.

வயல் செய்வதற்குக் கூட தற்போது விருப்பமில்லாமல் போய் விட்டது. ஒவ்வொரு முறையும் வயல் செய்து நஷ்டம்தான் படவேண்டியுள்ளது. இனி வருங்காலத்தில் வேளாண்மைச் செய்யத் தேவையில்லை. ஏனெனில் அவ்வளவாக விலைவாசி, சாமனுக்கெல்லாம் விலை ஏறுகின்றது. வேளா ண்மைச் செய்யவும் இல்லாது கடன் படவும் முடியாது என்றார் அவர்.

*அடுத்து வட்டவிதானையான ப வளசிங்கம் அரசடித்தீவு.*



21 வருட காலமாக நான் இந்த வட்டை விதானை சேவையைச் செய்து வருக்கின் றேன். நான் இந்த வருடம் கொஞ்சமாக வயல் குத்தகைக்கு எடுத்து செய்தேன். எனக்குச் சரியான நஷ்டம். ஏனென்றால் வயல் செய்வதற்கான செலவுக் கேற்றபடி விளையவில்லை. விளைந்தவற்றைக் கொண்டு கூடிய விலைக்கு விற்று இலாபம் பெறமுடியாத நிலையில் உள்ளேன். தற்போது எண்ணெய், பசளைக்கெல்லாம் சரியான விலை. அது மட்டுமல்லாது பூமிக்கு குத்தகைக்கான விலை அதிகம், உழவு இயந்திரத்தால் உழவுவதற்கு கூடிய விலை, அத்துடன் வெட்டுக்கூலி அதிகம், சூடு போடக் கூலி அதிகம், எப்படி விலை கூடுதலாகக் கொடுத்து பிரயாசிப்பட்டு செய்தாலும் அறுவடை செய்வது தொடக்கம் சூடுபோடும் ஆட்கள் கூட இல்லாத நிலை இங்கு காணப்படுகின்றது.

இவ்வாறு வேலையாட்கள் இல்லாத காரணத்தினால் வேளாண்மைச் செய்கையெல்லாம் மண்ணோடு மண்ணாகிப் போகும் நிலை காணப்படுகின்றது. இவ்வாறான நிலை இனி வரும் நாட்களில் மேலும் அதிகரிக்கும் நிலை உருவாகலாம் என அஞ்சப்படுகின்றது. கடந்த காலங்களில் பசளை என்பன அரசாங்கம் மானிய விலைக்கு வளங்கி வந்தனர். ஆனால் இப்போதைய அரசாங்கம் பசளை வகைகளை கூடிய விலைக்கு விற்று வருகின்றது.

தம்பி இனிவரும் நாட்களில் விவசாயம் என்பது செய்யத் தேவையில்லை. இனி வரும் காலங்களிலாவது அரசாங்கம் ஏழை விவசாயிகள் மீது இரக்கம் காண்பித்து பசளை வகைகளுக்கு மானியம் வளங்குவதுடன், நெல்லுக்கு விலையினை கூட்டிக் கொள்வனவு செய்ய வேண்டும். எனக் கூறினார்.

ஆம் தற்போது விவசாயிகள் எதிர் நோக்குகின்ற பாரிய பிரச்சினைகளை கருத்தில் கொண்டு அரசாங்கம் தாராளமனதுடனும், இதய சுத்தியுடனும் செயலாற்ற வேண்டும் எனக் கேட்பதுடன், அடுத்து ஆட்சி அமைக்கும் அரசாங்கமாவது விவசாயிகளுக்கு இரக்கம் காட்ட வேண்டும்.




# விலை

**மலைமகள்**

உடலுக்கு எந்த அலுப்பையும் ஏற்படுத்தாது ஊர்தி வழுக்கிப் போய்க்கொண்டிருந்தது. இடையிடையே வீதியோரமாக காப்பரணிலிருந்து நீண்ட துப்பாக்கி முனைகளை, அரைத் தென்னை உயர விளம்பரப் பலகைகளைக் கடந்தவாறு நெரிசலான வீதிவழியே சக்கரங்கள் விரைந்தன. பயணம் சுகமான பயணம்தான். மனம்தான் கொந்தளித்துக்கொண்டேயிருந்தது.

அடையாள அட்டையைக் காட்டி, பெயரைப் பதிவு செய்து, ஊர்தியைப் பதிவு செய்து, வினோத உடைப்போட்டிக்காக அலங்காரம் செய்து மைதானத்தின் நடுவே வரும் சிறுபிள்ளையைப் பார்வையாளர்கள் பார்ப்பது போல சீருடைகளை அணிந்த விழிகள் பார்த்த பார்வையைக் கடந்து வந்த கொதிப்பு இன்னும் அடங்கவில்லை.

ஊர்தி தன் வேகத்தைக் குறைத்து, மிருசுவில் சந்தியில் வண்ணம் பூசப்பட்டு குறுக்கும் மறுக்கும் வைக்கப்பட்டிருந்த வெற்றுக் கொள்கலன்களாலான தடையை வலமும் இடமுமாய் திரும்பிக் கடந்து வேகம் பிடித்தது. ஊர்தி கொடிகாமத்துக்குப் போக முன்னரே நான் சாவகச்சேரிக்குப் போய்விட்டிருந்தேன்.

அன்று நாங்கள் விட்டுச் சென்றது போலவா இன்றும் சாவகச்சேரி இருக்கும் ? வீடுகள் உருமாறி....... வீதிகள் வடிவம் மாறி...... அந்த இடத்தை நான் அடையாளம் காணாமல் விட்டுவிடுவேனா? அடையாளம் தெரியாவிட்டால், மக்களிடம் மன்னிப்புக் கேட்டுவிட்டு, முன்பு நாங்கள் பயன்படுத்திய அதே வழியால் மதில்களை, வேலிகளைக் கடந்து போனால், மிகச் சரியாகப் போய்ச் சேர்வேன்.

தமிழரசி இல்லாவிட்டால் மட்டும்தான் இந்தச் சிக்கல். நாலு நாளின் பின்னர் வருகின்றோம். என்று சொல்லிவிட்டு, திடீரென்று இன்று புறப்பட்டுவிட்டோம். எங்கு என்ன வேலையாக நிற்கின்றாளோ, தெரியவில்லை.

திடீரென்று சுயநினைவு வந்து வீதியைப் பார்த்தேன்.. அடையாளம் விளங்கவில்லை.

''இது எந்த ரோடு?"

''கொடிகாமம்- பருத்தித்துறை வீதி"

ஆ, சரி. தமிழரசியின் தளத்துக்குப் போய்க் கொண்டிருக்கிறோம். ஊர்தியை வீதியோரமாக நிறுத்தி விட்டு, கனிமகள் இறங்கி உள்ளே போய்க் கேட்டுவிட்டு உடனேயே வந்தாள்.

''தமிழரசியக்கா காலையில தீவுக்குப் போயிட்டாவாம். பின்னேரத்துக்கிடையில் இஞ்ச வந்திடுவாவாம்."

ம். என்ன செய்யலாம்?

''நாங்கள் இடங்களைப் பார்த்துக்கொண்டு போய் யாழ்ப்பாணத்துக்குள்ள நிப்பம். மத்தியானம் வரைக்கும் பாப்பம். தமிழரசி வராட்டா, நாங்களாகவே இடத்தைத் தேடுவம்" என்றேன்.

கனிமகள் உள்ளே ஓடிப் போய்ச் சொல்லிவிட்டு வந்து ஊர்தியை எடுத்தாள். வேகத்தைக் கூட்டினாள்.

''மெதுவாகப் போ" வரும் போது மிக வேகமாக வந்ததில், கொடிகாமத்தில் ஆனையிறவு மாவீரர்களுக்காக அமைக்கப்பட்ட நினைவாலயத்தைக் காணவில்லை. ஒரு பக்க வெளிச்சுவர் மட்டுமே எஞ்சியிருந்ததாக அறிந்திருந்தேன். அவசரத்தில் அந்தச் சிறு சுவர் கண்களில் விழவில்லை.

பார்க்கும் இடமெங்கும் படையினரின் தலைகளே. இவர்களின் முகத்தில் விழிக்காமல் யாருமே எந்த வேலையும் செய்ய முடியாது போலுள்ளது.

இன்னும் ஒரு கொஞ்சத் தூரம் போனால் மீசாலைப் பள்ளிக்கூடம் வரும். சூரியக்கதிர் -02 நேரம் இதற்குள் நின்ற இராணுவத்தினரை வேவு பார்க்க லெப். கேணல் முகுந்தாவும், லெப், கௌதமியும் சேலையைக் கட்டிக்கொண்டு, மக்களோடு மக்களாக நடந்துபோய், படையினரிடமே தண்ணீர் வாங்கிக் குடித்துவிட்டு வந்தார்கள். அதன்பின் இப்போதுதான் மீசாலையைப் பார்க்கின்றோம்.

அன்று படையினர் நிற்கும் இடங்களை அறியாமல், கிளாலி நோக்கி நகர்ந்து கொண்டிருந்த மக்களை படையினர் மீசாலையில் வைத்துத் திருப்பிக் கொண்டிருந்தனர். சேலை கட்டியிருந்த முகுந்தாவும், கௌதமியும் மக்களோடு சேர்ந்து சாவகச்சேரிவரை நடந்து, கைவிடப்பட்ட எமது நிர்வாகத் தளத்தில் நின்ற மிதிவண்டியை எடுத்துக்கொண்டு படையினருக்குச் சுழித்தவாறு கொடிகாமத்தில நின்ற எங்களிடம் வந்து விட்டார்கள். எந்தப் பாதையால் வந்தார்கள் என்பதை அந்த நேரச் சண்டை நெருக்கடியில் கேட்க மறந்துவிட்டேன்....ம்... அது ஒரு பெரிய விடயமா? கண்ணில் பட்ட ஒழுங்கைகளுக்குள்ளாளெல்லாம் விட்டிருப்பார்கள்.

அட! அதற்குள் புத்தூருக்கு வந்துவிட்டோமா? இந்தச் சந்தியில் தானே முல்லை வீரச்சாவடைந்தாள்? புத்தூருக்குப் படையினர் வந்துவிட்டிருந்ததை எதிர்பாராத மோகனா ஊர்தியைச் சந்தியிலிருந்து ஒழுங்கைக்குள் திருப்பவும். பக்கவாட்டாக அடிவிழுந்தது. ஊர்தியை விட்டுவிட்டு ஆயுதத்தையும் தொலைத்தொடர்புக்கருவியையும் எடுத்துக்கொண்டு ஏனையவர்கள் புத்திசாலித்தனமாகத் தப்பி வந்துவிட்டார்கள்.

இன்னும் சில நிமிடங்களில் சாவகச்சேரி. என்னுடைய மனநிலையை என்னாலேயே புரிந்து கொள்ளமுடியவில்லை. கட்டுப்படுத்த முடியாமல் அழுதுவிடுவேனோ என்று பயமாக இருந்தது.

ஓயாத அலைகள்- 03, கட்டம் நான்கு. அப்போதும் நான் சாவகச்சேரிக்கு வந்தேன். வந்த பாதை தான் வேறு. உடல் அலுங்காமல் விரையும் ஊர்தியில் இப்போது வருவதைவிட, கடலையும் காற்றையும் கிழித்தவாறு உப்பு நீர் முகத்தில் தெறிக்க, ஆயுதங்களை இறுக அணைத்தவாறு இருளில் வந்து கோயிலாக்கண்டியில் இறங்கிய பயணம் இதமானது. கரைவரை படகுகள் வரவில்லை. முழங்கால் அளவு ஆழ நீரில் இறங்கி நீண்ட துாரம் நடந்தோம்.

ஒரு அணி, கைதடியைப் பிடித்து நாவற்குழியைப் பிடிக்க, இன்னொன்று அரியாலை, பூம்புகார், கொழும்புத்துறைவரை போக, நாங்கள் மட்டுவில், கனகம் புளியடி, சாவகச்சேரி, தனங்கிளப்பு என்று பரந்து விரிய, தென்மராட்சிச் சண்டை பெரிய சண்டைதான்.

சாவகச்சேரி நகரைக் கைப்பற்ற ஒரு நாள் முழுவதும் சண்டை நடந்தது. நகரத்தினுள் தம்மைப் பலமாக நிலைப்படுத்தியிருந்த படையினரிடமிருந்து ஒவ்வொரு அங்குல நிலத்தையும் மீட்கக் கொடுத்த உயிர் விலைகள்.....

எல்லோரும் நாலு அல்லது ஐந்து பேர் கொண்ட சிறு அணிகளாகப் பிரிந்து கொண்டோம். பாதைகளையும் பிரித்துக் கொண்டோம். லெப்.கேணல் நிஸ்மியா, மேஜர் மாலதி, தமிழ்ச்செல்வி, ஜமுனா என்று எல்லாக் கட்டளை அதிகாரிகளின் குரல்களும் தொலைத்த தொடர்புக் கருவியில் எம்மோடு இணைய, கட்டிடக் காட்டினுள் மறைந்திருந்த படைகளோடு மிகக் கடுமையாக மோதினோம். ஆயுதங்களுக்குத் தேவையான மேலதிக ரவைகளையும், கையெறி குண்டுகளையும் அளவு கணக்கில்லாமல் சுமந்திருந்தோம். எதற்காகவுமே யாருமே எமது முன்னேற்ற நடவடிக்கையை இடைநிறுத்த வேண்டிய தேவையிருக்கவில்லை. இப்படித்தான் சண்டை பிடித்தோம், அப்படித்தான் சண்டை பிடித்தோம் என்று வரையறுக்க முடியாதபடி அவ்வவ் இடத்து நிலைமை எப்படியோ, அப்படியெல்லாம் சண்டை பிடித்தோம். சில இடங்களுக்கு எறிகணைகள், சில இடங்களுக்கு ஆர் பி ஜிக்கள், சில இடங்களில் இலகு இயந்திரத் துப்பாக்கிகள்.. நிலைமைக்கேற்ற முடிவுகளை நாமே எடுத்தோம்.

சாவகச்சேரி நகரின் கட்டளை அதிகாரியாக மேஜர் கயல்விழியே நின்று கொண்டாள். பட்டாலியன் கணக்கான இராணுவத்தினரின் ஆயுத முனைகளின் மத்தியில் சாவகச்சேரி நகரைத் தன்னுடைய ஒரு பிளாட்டுனை மட்டுமே வைத்துப் பாதுகாத்த கயல்விழி உண்மையிலேயே கெட்டிக்காரி தான்.

ஊர்தி சாவகச்சேரி இந்துக் கல்லூரியை நெருங்கிக் கொண்டிருந்தது.

(தொடரும்.........)

# விழுதுகள்..... (19)

சிவகுமாரின் சுபாவம் இப்படித்தான் அமைந்திருந்தது. அயலில் உள்ளவர்கள் யாராவது " தம்பி, ஒருக்கா கடைக்குப் போட்டு வாறியே"? - "ஓம் ". காசையும் பையையும் வாங்கிக் கொண்டு புறப்பட்டு விடுவான். தெருவில் யாராவது ஒருவர் விபத்தில் சிக்கினாலோ, யாரும் விழுந்து கிடந்தாலோ, அந்த இடத்தில் அவர்களுக்கு முதலுதவிச் சிகிச்சையளிப்பதுடன் மட்டும்நின்று விடுவதில்லை. அவர்களைக் கொண்டு போய் வீட்டில் ஒப்படைப்பது வரை தானே நின்று செய்தால் தான் இவனுக்குத் திருப்தி.

இவன் மிகவும் அமைதியானவன். குடும்பத்தில் கூட, யாரையுமே தனக்காகச் சிரமப்படுத்த இவன் விரும்புவதில்லை. இப்படியான இவனுக்குள் பின்னாளில் ஒரு பூகம்பமே கிளர்ந்தெழும் என்று, யாருமே எதிர்பார்த்திருக்கமாட்டார்கள்.

சரித்திர நாவல்களைப் படிப்பதில் இவனுக்கு ஆர்வம் மிகுதி. " தமிழரின் பெருமை எத்தகையது, தமிழரின் வீரம், புகழ் எங்கெல்லாம் பரவியிருந்தது.... இன்று ஏன் இப்படி..? இந்த நிலைமையை மாற்றியமைக்கும் காலம் பிறந்துள்ளது. அதில் நிச்சயம் நானும் ஒரு பங்காளனாய்...., இவ்வாறாக அவன் மனது அடித்துக் கூறியது.. எண்ணங்கள் செயலை நோக்கித் தள்ளின. ஓட்டமென்றும் நீச்சலென்றும் தன்னைத் தயார்ப்படுத்தி வந்தான் இவன்.

1983 ஆம் ஆண்டு இடம்பெற்ற இனக்கலவரம் இந்தப் பூவைப் புயலாக மாற்றியது. தேடித் திரிந்தான் புலிகளைச் சந்திக்க. இவனது சொந்த இடம் தெல்லிப்பழை. அந்தக் காலத்தில் தடுக்கி விழுவதானால் கூட "ஒரு புளொட்" உறுப்பினரின் மேல்தான் விழ வேண்டும். அப்படியான நிலைமை இருந்தது தெல்லிப்பழையில். "உம்" என்று சொன்னால் படகுகளில் ஏற்றிக் கொண்டு இந்தியாவுக்குச் செல்ல எத்தனையோ இயக்கங்கள். ஆனாலும் இவனுக்குச் சம்மதமில்லை. வடிகட்டல் முறையில் போராளிகளை உள்வாங்கும் புலிகளை மட்டுமே பிடித்திருந்தது.

இவனுக்கும் மற்றும் சில நண்பர்களுக்கும் புலிகளின் தொடர்பும் கிடைத்தாயிற்று.


எனினும், உள்வாங்குவதில் சலிக்க வைக்கும் தாமதம்: தரப்படும் வேலைகளோ யானைப் பசிக்குச் சோளப்பொரி போல. "எங்களாலும் நிறைய சாதிக்கமுடியும் - அதுவும் இப்போதே"- தீர்மானித்து விட்டார்கள். அவர்கள். எங்கெங்கோ திரிந்து டைனமைற்றுக்குத் திரி வைத்து (பைப்பில்) குண்டுகள் செய்வது முதல், மேலும் சில விடயங்களைத் தெரிந்து கொண்டார்கள்.

1984 ஆம் ஆண்டு - காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் வெடி பொருள்களுக்குப் பாதுகாப்பாகச் சென்று கொண்டிருந்தனர் காவலர்கள். அவர்களிடம் 4 றிப்பீற்றர் துப்பாக்கிகளும் இருந்தன. அவற்றினையும் வெடிபொருட்களை வெடிக்க வைக்கும் கருவியையும் கைப்பற்றுவதற்காய் சிவகுமாரும் நண்பர்களும் காத்திருந்தனர். இவர்களிடம் இருந்ததோ ஒரேயொரு வேட்டைத் துப்பாக்கி - சில கைக்குண்டுகள் (கொளுத்தி எறிபவை)

"ஜீப்" மறிக்கப்பட்டது. கைக்குண்டுடன் சிவகுமார் - ஒருவன் துப்பாக்கியுடன் - மற்றவர்கள் பின்னால். நான்கு காவலர்களும் கைகளை உயர்த்தி விட்டனர். நான்கு றிப்பீற்றர்களும் இவர்கள் வசமாயிற்று. எக்ஸ்புறோடரையும் மற்றும் பொருட்களையும் கைப்பற்றிக் கொண்டு ஜீப்பிலேயே திரும்பி விட்டனர்.

இயக்கத்துடன் தொடர்புள்ளவர்கள் இயக்க கட்டுப்பாட்டை மீறிச் சுயமாக நடந்துள்ளார்கள். தவறுதான். ஆனால், இவர்களை நெறிப்படுத்த முடியும். அப்போது யாழ் மாவட்டத் தளபதியாக இருந்த கிட்டு, இவ்வாறு தீர்மானித்தார்.

ஒரு விடயத்தில் வெற்றி - அது அவர்களை உற்சாகப்படுத்தியது. மேலும் கைக்குண்டுகளைச் செய்தனர். அப்போது எதிர்பாராத விதமாகக் கைக்குண்டு வெடித்தது.. சிவகுமாரின் உடலெங்கும் பாரதூரமான காயம் - நெஞ்சுப் பகுதியைப் பார்க்க பயங்கரமாக இருந்தது. இப்படியொரு நிலை



மேஜர் அபயன்

வருமென்று எவருமே எதிர்பார்க்கவில்லை. சுமார் இருபது நாட்கள் - அதை இருபது வருடங்கள் என்று கூடச் சொல்லலாம். அப்படியான வேதனைகளை இவன் அனுபவித்தான். இவனது அண்ணன்தான் அப்போது இவனைப் பராமரித்து வந்தார். இராணுவத்தினரின் முற்றுகைகள் நிகழும் போது, தம்பியைத் தூக்கிக் கொண்டு ஓடுவதும் வைத்தியம் செய்வதுமாக இந்த இருபது நாட்களும் கடந்தன. "இயக்கத்திற்குக் கட்டுப்படாமல் நடந்ததால் இயக்கம் இவனைப் பொறுப்பெடுக்க மாட்டாது" என்று ஊரில் கதை உலாவியது. அப்படியானால் இவன் கதி......? அச்சத்துடன் கழிந்தன அந்த நாட்கள்.

விஷயத்தைக் கேள்விப்பட்டார் கிட்டு. "அவன் இயக்கமில்லையெண்டு ஆர் சொன்னது? அவன் இயக்கந்தான்" என்றபடியே அவனை நோக்கி விரைந்தார் அவர். அப்போதுதான் உயிரே வந்தது அவனை நேசித்தவர்களுக்கு. அவனது நிலைமையைப் பார்த்ததும் " ஏன் இந்த வேலை? என்னட்டக் கேட்டிருந்தா திறமான குண்டுகள் தந்திருப்பனே..." என்று கூறி அவனது பயத்தைப் போக்கி, உற்சாகப்படுத்தினார். வைத்தியத்திற்காக சிவகுமார் இந்தியாவிற்கு அனுப்பப்பட்டான். அங்குதான் அவன் அபயன் ஆனான். அவனுக்குப் பிடித்தமான பொன்னியின் செல்வன் நாவலில் வரும் ஒரு பாத்திரம் தான் அபயன்.

தொடரும்..........

# மட்டக்களப்பு மாவட்ட இடப் பெயர் ஆய்வுகள்

**சென்ற வாரத் தொடர்ச்சி.......**

**11.21.02. ஆயித்தியமலை:-**

சூரியன் உதவி கொண்டு நான்கு திசைகளை அறிவது போல் ஆயித்தியமலையிலிருந்து நான்கு பக்கமும் போக்குவரத்துச் செய்யக்கூடிய காட்டுப்பாதை அந்தக் காலத்தில்




இருந்தமையினால் சூரியனின் பெயரைக் கொண்டு இக்கிராமம் காணப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**11.22. உன்னிச்சை:-**

**11.21.01.** அரசர் கூடும் பிரதான இடங்களில் மாப்புட்டி, மணற்புட்டி, நாப்புட்டி, மலகவத்தை, உன்னாஞ்சை, தம்புட்டி, பங்கிடான்வெளி, அம்பிளாந்துறை, கொக்குகாசி, அப்பன்புட்டி, அறுகமனப்பூமசை என்பன காணப்பட்டதாக கல்வெட்டுச் செய்திகள் உள்ளன. இதில் உன்னாஞ்சை உன்னிச்சையாக மருவி இருக்கலாம் என்பர் ஒரு சாரார். இதில் பங்கிடான்வெளியே பங்குடாவெளி ஆயிற்று.

**11.22.02.** Monograph of Batticaloa. எனும் நூலில் உன்னிச்சைக் குளத்தின் பண்டைய பெயர் உன்னிச்சைக்குளம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வுன்னிச்சைக்குளமே உன்னிச்சை ஆயிற்று எனலாம்.

**11.23. கரவெட்டி:-**

**11.23.01.** முன்னைய காலப் பகுதியில் இங்கு கிரியைக் கல் பெறும் விளைச்சல்களை வாவியூடாக மறுகரை கொண்டு செல்ல மட்டக்களப்பு வள்ளங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்நிலையில் வள்ளப்போக்குவரத்தினை இலகுவாக்க கரைகள் வெட்டி விடப்பட்டன. இவ்வாறு கரை வெட்டி விடப்பட்டமை பின்னர் கரவெட்டி ஆயிற்று என்பர்.

**11.23.02** குடும்பஸ்தர் ஒருவர் தனது மனைவிக்கு கரை பட்டுச்சேலை வாங்கிக் கொடுக்க அப்பெண்மணி தனது வேலைகளின் போது பட்டுச் சேலையின் கரைமீது கவனம் கொண்டமையினால் தவறுதலாக கீழேவிழ அன்பு கொண்ட கணவன் தனது மனைவியின் நன்மையின் பொருட்டு பட்டுச்சேலையின் கரையினை வெட்டி விடுகின்றான். இதனால் கரைவெட்டியினர் பின்னர் கரைவெட்டி ஆயிற்று என்பர்.

*ஆதாரம்:-* மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் முத்தமிழ் விழா சிறப்பு வெளியீடு அகணியில் கலாசார உத்தியோகத்தர் திருமதி.சந்திரகுமாரி கமல்ராஜன் எழுதிய ஆய்வுக் கட்டுரை.

**12. மண்முனை தென் எருவில் பற்று (களுவாஞ்சிகுடி) பிரதேச செயலக இடப்பெயர் ஆய்வுகள்.**

**12.01.களுவாஞ்சிகுடி:-**

கி.பி.644 இல் மட்டக்களப்பின் மன்னனாகிய பாலுவின் மகனாகிய அமரசேனன் ஆட்சிக் காலத்தில் இராமர் நாட்டு மறவர் குலத்து இராச வம்சத்தைச் சார்ந்த ஏழு பெண்கள் தங்கள் தங்கள் மணமகனுடனும், சிறைத் தளங்களுடனும் வவனியர் குலத்து குருகக் குடும்பம் ஐந்தும் சேர்ந்து மட்டக்களப்பின் பரிசுத்தங்களை அறியும்படியும் வைதூலிய சமயத்தை மாற்றி அரிநமோ என்றும் நாமத்தைப் போதிக்க வேண்டும் என்றும் கம்பர் இயற்றிய இதிகாசப் பிரதியை எடுத்து வந்தனர்.

அமரசேனன் அவர்களை வரவேற்று ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ஊரளித்து வன்னிச்சி என்ற விருதும் அளித்தான். இவர்களுடைய பெயர் கலைவஞ்சி, மங்கி அம்மை, செட்டிச்சி, மகிளரசி, இராசம்மை, வீரமுத்து, பாலம்மை என்பனவாகும்.

முறையே களுவாஞ்சி (களுவாஞ்சிக்குடி) மங்கியட்டு (மங்கிகட்டு), செட்டிச்சிபளையம் (செட்டிபாளையம்), மகிளரசி (மகிளூர்), அல்லது மகிழடித்தீவு எனவும் வீரமுத்து வீரமுனை,வீரர்முனை எனவும் பாலம்மை பாலமுனை எனவும் மருவி இருக்கலாம் எனவும் கருதப்படுகின்றது.

**12.02 குருக்கள்மடம்:-**

கி.பி 1766 இல் ஒல்லாந்தர் அருமைக் குட்டியை மட்டக்களப்பு வடபகுதிக்கு போடியாக நியமித்தபோது அம்பிளாந்துறையில் ஓர் கல்விக் கூடம் அமைக்கப்பட்டது எனவும், அங்கு செம்பன் முதலிய ஆசிரியர்களுடன் சம்புநாதன் என்பவர் தலைவராக நியமிக்கப்பட்டார் எனவும், இவ்வாசிரியர்கள் திருச்சிராப் பள்ளியிலிருந்து வரவழைக்கப்பட்டவர்கள் எனவும் இவர்கள் இருந்த இடமே குருக்கள்மடம் ஆகும்.

இங்கு தற்போது கிடைக்கப்பெற்ற தொல்பொருட்களில் பழைய ஒரு மடத்திற்குரிய கற்தூண்கள், படிக்கட்டு[illegible], சிவன்சிலை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு வேதப்பிட்டி எனவும் அழைக்கின்றனர்.

**12.03. துறைநீலாவணை:-**


இங்கு காணப்படும் துறை தனிநபர் பெயருடன் இணைந்து அழைக்கப்படுகின்றது என ஒரு சாரார் கருத்து நிலவுகின்றது. இதன்படி கி.பி.1013ல் கதிர்சுதன் எனும் மன்னனின் ஏமமந்திரிகளில் நீலவண்ணசேனன் பெயர் கொண்டு அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

மேலதிக விளக்கம் (வவுணதீவு/ புளியந்தீவு/ சத்துருக்கொண்டான்)

**12.04. செட்டிபாளையம்:-**

எதிர்மன்ன சிங்க மன்னன் ஆட்சிக் காலத்தில் வளம் மிக்க மட்டக்களப்புப் பிரதேசத்திற்கு இந்தியாவில் இருந்து அண்ணாமலைச் செட்டிகள் அல்லது நாட்டுக்கோட்டை செட்டிமார் என்பவர்களும் வட நாட்டிலிருந்து துலுக்க வியாபாரிகளும் வந்து நாப்புட்டி முனைக்கு மேற்கில் வர்த்தகசாலை குட்டங்கி வீடுகளினை அண்டி அங்கிருந்து வர்த்தகம் செய்ய மண்முனைக்கு அடுக்காகப் பாளையம் போட்டு வர்த்தகம் செய்தனர். அதுவே செட்டிபாளையம் ஆயிற்று என்பர்.

**கே.எஸ்.ஆர்.சிவகுமார்**
**கலாசார உத்தியோகஸ்த்தர்**
**(கோறளைப்பற்று)**



**12.05.தேற்றாத்தீவு:-**

தேத்தா மரங்கள் காணப்பட்டமையினால் நீர்ச் சூழலினை அடிப்படையாகக் கொண்டு அழைக்கப்படுவது.

**12.06. பட்டிருப்பு:-**

வியாபார நோக்குடன் வெளியிருந்து வரும் செட்டிமார்களையும் துலுக்கு வியாபாரிகளையும் பார்த்து இருந்த இடமே (பார்த்து இருப்பு) பட்டிருப்பு ஆகும்.

**12.07. மாங்காடு:-**

மாமரங்கள் நிறைந்த இடமே மாங்காடு என அழைக்கப்பட்டது எனலாம்.

**13. போரதீவுப் பற்று ([illegible]பல்லாவெளி) பிரதேச செயலக இடப்பெயர் ஆய்வுகள்.**

**13.01.01. மண்டூர்:-**

கி.பி. 1107ம் ஆண்டுவரை மண்டூர் பதியை அரசாண்ட தமிழ் சிற்றரசன் மண்டு நாகன் என்பவன் பெயர் கொண்டு மண்டூர் என அழைக்கப்படுகின்றது.

**13.01.02. மண்டூர்:-**

மண்டு மரங்கள் நிறைந்த ஊரே மண்டூர் என அழைக்கப்பட்டது என்பர்.

**13.02.01. போரதீவு:-**

போர்முடைநாடு என்பதே போரதீவு என மருவியது என்பர்.

இது மேலும் கோயில் போரதீவு, பெரியபோரதீவு என பலவாக பிரிபடும்.

**13.02.02. கோயில் போரதீவு:-**

பேரர்முடைநாடு, வெள்ளை நாவல் பதி போரதீவு என அழைக்கப்பட்ட இடம் கோயில் சிறப்புக் காரணமாக கோயில் போரதீவு எனவும் சிறப்பிக்கப்பட்டது எனலாம்.

**13.02.03. பெரியபோரதீவு:-**

பெரிய போர் ஏறு தீவு என அழைக்கப்பட்ட இடமே பெரிய போரதீவு என அழைக்கப்பட்டது எனலாம்.

**13.03 பாலமுனை:-**

விளக்கம் (களுவாஞ்சிகுடி/மங்கிகட்டு செட்டிபாளையம், மகிழடித்தீவு வீரர்முனை என்பனவற்றில் உண்டு) இதன்படி பாலம்மை ஆட்சி செய்த பிரதேசம் பாலமுனை என அழைக்கப்பட்டது என்பர்.

**13.04. நாணமடு:-**

நாணல் புல்கள் அதிகமாகவும் சிறு சிறு பள்ளங்கள் காணப்பட்ட இடமே நாணமடு என அழைக்கப்பட்டது என்பர்.

**13.05. கணேசபுரம்:-**

விநாயக ஆலயங்களுக்கு முதன்மை வழங்கியதனூடாக ஏற்பட்ட சிறப்புப் பெயர் ஆகும்.

**13.06. பாலையடிவட்டை:-**

வட்டை என்பது வயல்வெளிகள் முன்னர் வட்டமாக அமைந்தமையினால் வட்டம் என்ற சொல்லின் அடியாகப் பிறந்து இருக்கலாம் என்பர். இதன்படி வட்டை என வயல் பரப்பு பிரதேசத்தில் பாலை மரங்கள் அதிகமாகக் காணப்பட்டமையினால் பாலையடிவட்டை என மருவி இருக்கலாம்.

**13.07. விளாத்தோட்டம்:-**

விளாம்பழ மரங்கள் அதிகமாகக் காணப்பட்டமையினால் ஏற்பட்ட பெயர்.

**13.08. நெல்லிக்காடு:-**

நெல்லி மரங்கள் காடு போல் காணப்பட்டமையினால் ஏற்பட்ட பெயர்.

**13.09. பலாச்சோலை:-**

பலா மரங்கள் அதிகம் உள்ள பகுதி ஆதலினால் சோலை என்ற பெயர் இணைக்கப்பட்டு பலாச்சோலை என்ற பெயர் உண்டாயிற்று.

**13.10. தும்பங்கேணி:-**

கேணி பிரதேசத்தில் தும்பை எனும் பூச்செடிகள் காணப்பட்டமையினால் ஏற்பட்ட பெயர்.

**13.11. கண்ணபுரம்:-**

விஷ்ணு கோயில் காணப்பட்டமையினால் ஏற்பட்ட சிறப்புப் பெயர்.

*(தொடரும்.........)*




## இனியும் கை தட்டமாட்டோம்



மகிந்தவுக்கு:-

மீண்டும் ஒரு ஜனாதிபதித் தேர்தலுக்கு சிங்கள தேசம் தயாராகி விட்டது. இரு பிரதான கட்சிகளும் வேட்பாளர்களை நிறுத்தியிருக்கிறது. ஆளும் சுதந்திரக் கட்சி சார்பில் உங்களை வேட்பாளராக உங்கள் கட்சி நிறத்தியிருக்கிறது.

யானைக் கட்சிக்காரர்கள் ரணிலை நிறுத்தியிருக்கிறார்கள். நான் ஆட்சிக்கு வந்தால் சமாதான முயற்சியைத் தொடர்வேன் எனத் தெரிவித்திருக்கிறார் அவர். பரவாயில்லை. உங்களைப் பற்றிச் சிந்திப்போம். உங்களிடம் சமாதானத்தினைக் கொண்டு வருவதற்கான திட்டங்களுள்ளதா? அப்படி இருந்தால் இப்போது தெளிவுபடுத்துவது பொருத்தமாயிருக்கும்.

ஏனெனில் பேரினவாதக் கட்சிகளின் ஆதரவுடன் கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வெற்றியடைந்தது. ஆனால் சமாதான முயற்சிகளில் எவ்வித நடவடிக்கைகளையும் செய்யவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

பேரினவாதக் கட்சிகளான ஜே.வி.பியுடன் சினேகிதம் பூண்டு இருக்கும் மட்டும் ஈழத்தமிழினத்திற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி எவ்வித உதவியையும் செய்யாது இது விடயத்தில் திடமாகவுள்ளனர் தமிழ் மக்கள். ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண புனரமைப்புத் தொடர்பாக கைச்சாத்திடப்பட்ட பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடுவதற்கு பேரினவாதக் கட்சியான ஜே.வி.பி கடும் எதிர்ப்புத் தெரிவித்தது. இறுதியில் ஆட்சியை விட்டு வெளியேறியது மட்டுமன்றி தென்னிலங்கையில் பெரிய களேபரத்தை உருவாக்கியிருந்தனர்.

விடுதலைப் புலிகளோடு பேசுவதையோ, தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணபதையோ இந்தப் பேரினவாதக் கட்சி ஒரு போதும் விரும்பவில்லை. இனியும் விரும்பாது. அவ்வாறான ஒரு கட்சி உங்களுக்கு ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவு வழங்குகிறது.

ஒருவேளை வென்று ஜனாதிபதியாகி விட்டீர்கள். பின்னர் சமாதான முயற்சிகளைத் தொடர்வதற்கு அவர்கள் அனுமதி அளிப்பார்களா? காரணம். ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்த பிற்பாடு நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறும். அதற்கு உங்களுக்கு அவர்களின் ஆதரவு கண்டிப்பாகத்தேவை.

எனவே பேரினவாத சக்திகளுக்கு கட்டுப்பட்டு நிற்கும் நீங்கள் சமாதான வழிமுறைகளைக் கையாள்வீர்கள் என்பதற்கு எவ்வித சாத்தியமுமில்லை. கடந்த காலங்களிலும் இப்படித்தான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள் தங்களை சமாதான நாயகர்களாக தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் அக்கறை கொண்டவர்களாகக் காட்டிக் கொண்டு புறப்பட்டார்கள். இறுதியில் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டதுதான் வரலாறு. அதனடிப்படையில் இனியும் தமிழ் மக்கள் இப்படிக் கூறும் வேட்பாளர்களிடம் ஏமாறமாட்டார்கள். உண்மையில் நீங்கள் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும்.

தடைப்பட்டு நிற்கும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்பதில் அக்கறை கொண்டவரானால் உங்கள் இனவாதக் கூட்டைத் தூக்கி எறியுங்கள். அதைவிடுத்து ஆட்சிக்கு வந்தால். தேசியத் தலைவரை நேரடியாகச் சந்தித்து பேச்சுக்கள் நடத்துவேன் எனப் பிதற்ற வேண்டாம்.

ஏனெனில் உங்கள் கூட்டு இனவாதக் கூட்டாக இருக்கும் போது இப்படி ஒரு பேச்சுவார்த்தைக்கு இனவாதிகள் இடம் விடுவார்களா? வேண்டாம். ஏமாற்றாதீர்கள் எங்களை. இனியும் ஏமாறமாட்டோம். ஏமாற்றுங்கள் தென்னிலங்கையை. ஏனெனில் இனியும் நீங்கள் களரியில் நின்று ஆட நாங்கள் பார்த்து கையடிக்க மாட்டோம்.

இங்ஙனம்
ஈழமகன்.

# பெண்களும் அவர்களுக்கு எதிரான வன்முறைகளும்

கணனி யுகமான இந்தக் காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் எம் சமூகத்தினர் மத்தியில் இன்று பாலியல் வன்முறை ஒரு அசுர வேகத்தில் மக்கள் மத்தியில் பரவிக்கொண்டு வருகின்றது. இச்சந்தர்ப்பத்தில் பெண்கள் இப்பாலியல் வன்முறை பிரச்சினைகளுக்கு அதிகமாக முகம் கொடுக்க வேண்டி ஏற்படுகிறது. ஐரோப்பிய நாடுகளில் மேலோங்கியிருந்த இந்தப் பாலியல் வன்முறைகள் தற்போது கீழைத்தேய நாடுகளிலும் பரவி வருகிறது. இதன்படி எமது நாடான இலங்கையும் இதற்கு உள்ளாகியுள்ளது.

எது எப்படி இருப்பினும் எமது அண்டை நாடான பெண்களின் பெருமை பேசும் தமிழ் நாட்டில் கூட பெண்ணடிமைத்தனமும், பெண்களுக்கெதிரான வன்முறைகளும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. அது மட்டுமல்ல பாலியல் பலாத்காரங்களும், வரதட்சனைக் கொடுமைகளும் மனித நேயத்திற்கு அதிர்ச்சியளிக்கக்கூடிய வகையில் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வருகின்றன. இந்நிலையில் இந்தியாவில் ஒரு மணி நேரத்துக்கொரு முறை ஒரு பெண் பாலியல் பலாத்காரம் செய்யப்படுகின்றாள் என்று இந்தியப் பெண்கள் இயக்கமும், மற்றும் குழந்தைகள் வளர்ச்சி அமைச்சகமும் குறிப்பிட்டிருக்கின்றன.

இப்படியான பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறைகள் தோட்டப் புறங்களிலும் கூட அதிகரித்துள்ளன. அதாவது மனைவியை அடித்தல், பிள்ளைகளை அடித்தல், தங்கையை அடித்தல், பாலியல் வன்முறை பாலியல் தொல்லை ஆகிய வற்றைக் குறிப்பிடலாம். அவை மதுபாவனையுடன் மிகவும் நெருங்கி தொடர்புடையவையாக இருக்கின்றன. ஆண்கள் குடித்து விட்டு வீட்டில் வன்முறைகளில் ஈடபடுவது மட்டுமல்லாமல் வீட்டுக்கு வெளியில் நடைபெறும் வன்முறைகளுடனும் இணைந்து செயற்படுகின்றனர். அதாவது பாதைகளிலும், பஸ்களிலும் பெண்களைக் கிண்டல் செய்தல், வழிமறித்து நிற்றல், தகாத வார்த்



தைகளைப் பிரயோகித்தல் போன்றவை இவ்வறான வெளி வன்முறைகளாகத் தோற்றம் கொடுக்கின்றன.

இதற்கெல்லாம் காரணமான ஆதிகால மனித வரலாற்றை நோக்கும் போது பெண்கள் பூர்வீக காலத்துள் இரண்டாம் பட்சப் பிறவியாகவும் ஆண்களுக்கு கீழானவர்களாகவும் அவர்களின் தேவைகளை நிறைவேற்றுபவர்களாகவும் நடாத்தப்பட்டுள்ளனர் என்பதை பல்வேறு வரலாற்றுச் சான்றுகள் மூலம் காணக் கூடியதாகவுள்ளது. இதனைய "விரிச்சுக் கெட்டது போயில. கிளைச்சுக் கெட்டது பொம்புள, பொம்புள சிரிச்சாப் போச்சு. போயில விரிச்சாப் போச்சு" எனும் பழமொழி உணர்த்தி நிற்கின்றது.

அத்துடன் பெண்கள் இரண்டாம் பட்சமாகவே கொள்ளப்படுகின்றனர். இத்தகைய முன்னோர்களின் செயல் காரணமாகவே ஆண்கள் தங்களை வீரம் மிக்கவர்கள். மேலானவர்கள். அவனது பாலியல் உணர்வுகளுக்கு அணைபோட முடியாது போன்ற கருத்துக்கள் தோன்றுகின்றன. இக்கருத்துக்கள் தான் சமூகத்தின் பால் நிலைக் கருத்தியலுடன் இணைந்து சமூகத்தில் நிலைத்து வருகின்றன.

இப்படியான காரணங்கள் ஒரு புறத்திலிருக்க இவை பாலியல் வன்முறைகளைத் தூண்டும் காரணிகளாக அமைவதுடன், மறுபுறம் பாலியல் வன் முறைக்கு எதிராக செயல்பட்டு பெண்களைப் புதுமையாகப் பேணுவதற்கும் உதவுகின்றன.

மேலும் பெண்களுக்கெதிரான வன்முறையானது பெண்களது உடல், உளத்தைப் பாதிப்பதுடன் பெண்கள் அபிவிருத்தித் திட்டங்களில் பங்குபற்ற முடியாது தடையை ஏற்படுத்தும் காரணியாகவும் அமைகின்றன. இப்படியான பிரச்சினைகளை ஒவ்வொரு சமூகத்தையும் சேர்ந்த ஒவ்வொரு பெண்ணும் வீட்டிலோ, வீதியிலோ, வேலைத் தளத்திலோ ஏதோவொரு வகையில் வன்மு றைக்குட்படுத்தப்பட்டுக் கொண்டே இருக்கின்றாள்.

இவ்வாறான அடாவடித் தனமான வன்முறைகளிலிருந்து பெண்ணினத்தை மீட்டெடுக்கவே 1987ல் மார்ச் 8ம் திகதி அமெரிக்க நியூயோர்க் நகர ஆடைத் தொழிற்சாலைப் பெண்கள் ஒரு போராட்டத்தை நடாத்தினர். இப்போராட்ட தினத்தை சர்வதேச பெண்கள் தினமாக அமுல்ப்படுத்த வேண்டுமென 'கிளாரா செற்கின்' என்ற பெண்மணி 1990ம் ஆண்டில் நடைபெற்ற பெண்கள் மாநாட்டில் கோரிக்கை விடுத்தார். இக்கோரிக்கை அம்மாநாட்டில் அங்கீகரிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து மார்ச் 8ம் திகதி மகளிர் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டது. ஆகேவே 'ஐந்து பெண் பெற்றால் அரசனும் ஆண்டியாவான்' என்ற பழமொழியிலிருந்து விடுபட்டு பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளிலிருந்து அவர்களை மீட்டெடுத்து அவர்களின் வாழ்வும் ஒளிமயமாக அமைய எல்லோரும் வழிசமைப்போமாக.


**'இளையநிலா' யூனுஸ்**
**காத்தான்குடி.**

# கணனிக் களத்தில் களமிறங்கி சதமடிக்கும் பெண்கள்

போர்ச் சூழல் காரணமாக இன அடக்கு முறைக்குள் உட்பட்டு பல வழிகளிலும் இன்னல்களை அனுபவித்த பெண்கள் தற்போது கணனிக் களத்திலே சதமடிக்கும் நிலைக்கு வந்து விட்டனர் என்று சொல்லக் கூடியளவிற்கு கணனித் துறையில் சாதனை புரியும் இடத்துக்கு முன்னேறி பெண்கள் விட்டனர் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

கணனி என்ற சொல்லுக்கே ஆரம்பத்தில் அர்த்தம் தெரியாத நிலையிலேயே பெண்களின் அறிவு மட்டம் இருந்தது பெண்கள் எனலாம். ஆனால் தமிழீழப் போரில் வேங்கைகளாகத் திகழ்வது போல் கணனித் துறையிலும் அவர்களின் பங்குகள் மேலோங்கிக் காணப்படுகின்றது.

இதனடிப்படையில் இணையம், மின்னஞ்சல், பெயின்ற், பொறியியல் துறைகளிலே மூழ்கி பெண்கள் வல்லமை படைப்பவர்களாகத் திகழ்வதைக் காண முடிகின்றது. இதன்மூலம் பெண்களால் கூடுதலான கண்டுபிடிப்புக்களும், சிறந்த கட்டிட வடிவடைப்புக்களும் மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதே.



இவ்வாறு சுவாரசியமான முறையில் தமது அறிவுத் திறனை வைத்து அதிரடி ஆட்டத்தில் இறங்கிக் கணனிக் களத்தில் பெண்கள் சதமடித்து மேலும் மேலும் சாதனை புரிவார்கள் என்பதில் ஐயமில்லை.

**பு.சீலன்**
**தம்பிலுவில் - 01.**

# குறிப்புணர்த்தும் குடும்பக் குறிப்புக்கள்

- பிறரைப் பார்த்து வாழ்வதில் பெண்களே திறமையானவர்கள். இந்நிலையில் ஆடம்பரம், பெருமை போன்றவற்றில் நுழையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.
- குடும்பப் பொறுப்பை மட்டுமல்ல பெண்களிடம் கொடுக்கப்படும் அனைத்துப்
- பொறுப்புக்களையும் ஆண்கள் அக்கறையுடன் ஊன்றிக் கவனிக்க வேண்டும். இதையே பெண்கள் ஆண்களிடம் எதிர்பாக்கின்றனர்.
- தன் உடம்பு தெரிய ஆடை அணியும் பழக்கம் கவர்ச்சிக்காக சினிமாவில் ஏற்படுத்தப்பட்டது. அதை நிஜ வாழ்க்கையில் பின் பற்றும் போது ஒவ்வொரு பெண்ணுக்கும் தீமையே ஏற்படுகின்றது.
- ஒரு பெண்ணிற்கு அவளின் இயற்கை அழகே போதுமானது. செயற்கை அழகைக் கூட்டும் போது விகாரமே மிஞ்சுகிறது.
- பெண் என்றால் எத்தனை பொறுப்புக்கள் ஏற்றாலும் குடும்பத்தின் மீது அதிக கவனம் இருக்கட்டும். ஆண் என்றால் எத்தனை பொறுப்புக்கள் ஏற்றாலும் உழைப்பின் மீது அதிக கவனம் இருக்கட்டும்.
- குடும்பத்திலுள்ள அனைத்து கஷ்டங்களையும் குறிப்பிட்ட வயது வரை குழந்தைகள் தெரிந்து கொள்ளாமல் புரிந்து கொள்வது ஒவ்வொரு பெற்றோரின் கடமையாகும். இதனால் குழந்தைகளுக்கு தாழ்வு மனப்பான்மை உண்டாகாது.
- எந்தக் காரணத்தைக் கொண்டும் குடும்பப் பெண்கள் போலிப் பெருமைகளுக்கு அடிமையாக வேண்டாம். அதுவே பெண்ணுக்கு இழுக்காகும்.

# அனாதைக் குமரிகள்

எங்கள்
குமரிகளின் குமுறல்களில்
ஆயிரம் அர்த்தம்......

நொந்து போன
இதயத் துடிப்பில்
இன்னும்
வெந்து கொண்டு......

ஆதரிக்க
அரவணைக்க
கைகளில்லை
வீதிக்கு வந்தவர்கள் தான்
அது
எங்கள் விதி
அதனால்
விலைபேசி விடாதீர்கள்.

இனி.......
இவர்களின்
அங்கங்களைக் காட்டி
உங்கள்
வயிற்றுப் பசிக்காய்
இந்தத் தங்கங்களை
விற்று விடாதீர்கள்.

*மருதமுனை முனாஸ்.*




# பாதங்களை அலட்சியம் செய்யாதீர்கள்

நம் உடலின் முழு எடையையும் தாங்குவது நம் பாதங்கள் தான். நம் பெண்கள் தமது முகத்தின் அழகைக் கூட்ட எடுத்துக் கொள்ளும் முயற்சிகளில் ஒரு சதவீதத்தையாவது தமது பாதங்களைக் கவனிக்கின்றீர்களா? என எண்ணிப் பாருங்கள். பெண்களே கால்களும், பாதங்களும் அழகும் ஆரோக்கிய மும் பெற்றால் நம் உடல் ஆரோக்கியமும் பொலிவு பெறும்.



எனவே சகோதரிகளே நமது பாதங்களுக்கு நிறையப் பராமரிப்புத்தேவை. நீங்கள் கவனியாது விட்டால் குதிகால்களில் வெடிப்பு, பாதங்கள் கறுத்து வீங்கி களையிழந்து காணப்படும் நிலைதோன்றும்.

ஒழுங்காகப் பாதங்கள் பராமரிக்கப்பட்டால் அவைகளில் வெடிப்பு என்பது ஒரு நாளும் வராது. கால்களில் வெடிப்பு ஏற்பட முக்கியமான காரணங்களில் ஒன்று, வெறும் காலுடன் நடப்பது. தவிர நீண்ட நேரம் நீரில் நிற்பது, கால்களை சுத்தமாக வைத்திருக்காது விடல், விற்றமின் சத்துக்கள் குறைவு, அதிக எடை போன்ற சில காரணங்களினாலும் வெடிப்புக்கள் ஏற்படலாம். அதிலும் ஒழுங்கான பாதணிகளைத் தெரிவு செய்து அணிதலாகும்.

அந்தநாள் பெண்களைப் போல் இக்காலப் பெண்கள் தமது கால்களைத் தேய்த்துக் குளிப்பது குறைவு. எனவே குளிக்கும் போது நன்றாக பாதங்களின் பின்புறத்தை உரேஞ்சிக் குளித்தல் வேண்டும். கூடுதலான சக்தி பாதங்களுக்கு வேண்டும் என நினைப்போர் தினமும் கடல் மணலில் கால் பதிய நடத்தல் வேண்டும். இவ்வாறு தொடர்ந்து செய்வதால் இளமையும், ஆரோக்கியமும் பலமும் கூடும்.

மருதாணியை அரைத்து தினமும் கால் நகங்களில் வைப்பதால் நல்ல குளிர்ச்சி கிடைப்பதுடன், அதனால் மருத்துவ பலனும் கிடைக்கும். நகங்களின் மீது சிலருக்கு வெள்ளைப் பூப் போல தோன்றும். நகங்களே நமது ஆரோக்கியத்தையே காட்டும் என்பது மிகச் சரியான கூற்று. உடலின் கல்சியக் குறைபாட்டினால்த்தான் பூவிளக் காரணம். இதனைத் தவிர்க்க கீரைகளை அதிகம் உணவில் சேர்த்துக் கொள்வதுடன், பாலையும் அதிகம் பருகுவதன் மூலம் இதனைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

எனவே உங்கள் உடலில் ஏனைய உறுப்புக்கள் முக்கிய இடம் பெறுவது போல நீங்களும் கால்களையும், பாதங்களையும் நன்கு பராமரிப்பதோடு காலணிகளைத் தெரிவு செய்யும் போது குதி உயர்ந்த காலணிகளைக் கூடு மானவரை தவிர்த்தல் வேண்டும். இளம் வயதில் இதன் பாதிப்புத் தெரியவிலலையென்றாலும் வயது அதிகரிக்க அதிகரிக்க முதுகு வலி ஆரம்பமாகி விடும்.

# பெண்களே மனை அழகுக்கு இதுவும் உதவும்


மரங்களில் கற்பகதரு எனப் போற்றப்படும் தென்னை மரம் ஒரு பயனுள்ள மரம் என்பது நம் அனைவருக்கும் தெரியும். இதன் மூலம் நாம் அலங்காரப் பொருட்கள் செய்வதற்கு அதன் பெரும் பாலான பாகங்கள் பயன்படும்.

தென்னை மரத்திலிருந்து பறிக்கும் பட்டையை பன்னாடை என்று கூறுவர். இது நமது பெண்கள் மத்தியில் எவ் வேலைக்கும் உதவாத பொருள் என்ற நினைப்பை உண்டு பண்ணியுள்ளது. ஆனால் இவ்வாறான பட்டைகளில் வண்ண ஓவியங்களைத் தீட்டி நமது வீட்டின் வரவேற்பறையில் தொங்க விடுவதன் மூலம் மனையழகைப் பேணலாம் என்பது உமக்குத் தெரியுமா? சிறந்த வடிதட்டாகவும் இதனைப் பயன்படுத்தலாம். அதில் எப்படி ஓவியம் செய்வது என யோசிக்கின்றீர்களா? நல்ல பன்னாடையை எடுத்துக் கொண்டு சோப் போட்டுக் கழுவி பின்னர் உங்கள் படுக்கையறையின் மெத்தைக்கடியில் குறைந்தது நான்கு நாட்கள் வைத்த பிறகு இது மடிப்பில்லாமல் நன்றாகப் பதமாகியதும், உங்கள் விருப்பத்திற்கு ஏற்ப வடிவங்களைத் தாளில் வரைந்து எடுத்துக் கொண்டு பட்டையின் மேல் காபன் தாளை வைத்து வரைந்து எடுத்துக் கொள்ளவும்.

இதில் உங்களுக்குத் தெரிந்த தையலைத் தைத்துக் கொண்டு வடிவத்தை நிரப்பி விடவும். அதில் கண்ணாடிகள் வைத்தும் தைக்கலாம். பெயிண்டிங் தெரிந்தவர்கள் செய்து கொள்ளலாம். இவ்வாறு செய்த பின்னர் பார்ப்பதற்கு அழகாகவும், பன்னாடையை இப்படியும் அழகுபடுத்தி உபயோகிக்கலாமா எனப் பார்ப்பவர்களையும் வியக்கும் படியும் அமையும்.

எனவே பெண்களே! முயற்சி செய்தால் நமது கைவண்ணத்தில் அனைத்துப் பொருட்களையும் உருவாக்கலாம். மேற் கூறியதைப் போல் வாழ்த்து அட்டைகளையும், பன்னாடையில் படம் வரைந்து அதனை கட்பண்ணி அனுப்பலாம்.

**ஆர்.சோபனா, வாழைச்சேனை.**



# சம்மதம்

அது ஒரு இனிமையான அந்திப் பொழுது. தன்னையறியாத நிலையில் கடற்கரையில் நின்று கொண்டிருந்தாள் அபி. பின்னாலிருந்து ஒரு குரல் ''அபி'' என்று. திரும்பிப்பார்த்தாள் அவள். அவள் பின்னால் ஆனந்த் நின்று கொண்டிருந்தான். அவளுக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. பேசுவதற்கு வார்த்தையும் வரவில்லை.

ஆனந்த் அவளது மாமியின் மகன். மேற்படிப்பிற்காக வெளிநாடு சென்றிருந்தான். இருவரும் நல்ல காதலர்கள். சந்தர்ப்ப சூழ்நிலையால் இருவரும் பிரிந்திருந்தனர்.....

ஐந்து வருடங்களாக இவர்கள் பிரிந்திருந்தாலும் இவர்களது காதல் மறையவில்லை. என்றாவது ஒருநாள் ஆனந்த் திரும்பி வருவான் என்ற எண்ணத்துடனேயே காத்திருந்தாள் அபி. இத்தனை வருடங்களுக்குப் பின்னர் ஆனந்தை சந்தித்த அவளுக்கு மிக்க மகிழ்ச்சியாகவே இருந்தது.

இருவரினதும் வாய்களுக்குப் பதிலாக கண்களே பேசின. நீண்ட நேரமாக மௌனமே, நிலவியது. சிறிது நேரத்திற்குப் பின் ''அபி எப்படி சுகம்?'' என்றான் ஆனந்த், அதற்கு தனது

பி.அபராஜிதா
திருக்கோவில்.

மென்மையான இதழ்களால் புன்முறுவல் பூத்தாள் அபி. நீண்ட நேரமாக இருவரும் பேசிக்கொண்டே இருந்தனர்.

அபி வீடு திரும்பாமையால் அவளது பெற்றோர் அவளை எல்லா இடமும் தேடினர். கடைசியாக அவள் கடற்கரையில் இருப்பதை அறிந்து அங்கே வந்தனர். தனது காதலனுடன் அவள் இருப்பதைக் கண்ட அவளது அப்பா அவளை அவனிடமிருந்து பிரித்துச் சென்றார். பிரிவு என்பது அவளுக்குப் புதிதல்ல. ஆனால் இத்தனை வருடங்களுக்குப் பிறகு வந்திருந்த தனது ஆனந்துடன் கதைக்க முடியவில்லையே என்று வருந்தினாள். அவனது எண்ணங்களுடனேயே அன்றைய நாளைக் கழித்தாள்.

மறு நாள் காலை, தனது வீட்டிற்கு ஆனந்த் வருவதைக் கண்ட அபி, ஓடி வந்து அவன் முன்னால் நின்றாள். அந்தச் சமயம் அவளது தகப்பனார், அங்கே வந்தார். அவனிடம் ''என்ன! எதற்காக எங்கே வந்தாய்?'' என வினாவினார். அதற்கு அவன் ''மாமா எனக்கு எனது அபியைத் திருமணம் செய்து தாருங்கள், நீங்கள் அவளுக்கு எதையும் செய்யவேண்டியதில்லை. அவளை நான் நன்றாக வாழ வைப்பேன்'' என்று தாழ்மையாகக் கேட்டான்.

அதற்கு அவருக்கு என்ன கூறுவது என்றே விளங்கவில்லை. ''சரி உனது மாமியிடம் பேசிப்பார்க்கிறேன்'' என்று கூறினார். அபியின் தகப்பனார் தாயிடம் இதைப்பற்றி கதைத்தபோது அதற்கு அவள் தனது சம்மதத்தை தெரிவித்தாள். இவ்வளவு நல்ல மாப்பிள்ளை தனது மகளுக்கு கிடைக்கப்போவதை எண்ணி இருவரும் பெருமைப்பட்டனர். இருவரும் பட்ட கஷ்டத்திற்கான பலனைப் பெற்றுவிட்டார்கள். ஆனந்த். அபி ஆகிய இருவரும் தனது பெற்றோரின் சம்மதத்திற்காக காத்திருந்து அவர்களது சம்மதத்துடனேயே திருமணம் செய்து இல்லற வாழ்வில் இணைந்து கொணடனர்.



# விடிவு

''மகன்! மகன்!''

''என்னப்பா?''

''எழும்பண்டா விடிஞ்சிற்று. பள்ளிக்குப் போறல்ல? இப்பிடித் தூங்கிறா விடிஞ்சதும் தெரியாம?''

''என்னப்பா இண்டைக்கு நானும் வாறனப்பா தோட்டத்திற்குப் போக...''

''இஞ்சே தேவயித்த கத கதைக்காம எழும்பி குளிச்சிற்று தங்கச்சியையும் கூட்டிற்றுப் பள்ளிக்கு ஓடு பாப்பம்''

''என்னப்பா நானும் தோட்ட வேல பழகத்தானே வேணும்?''

''அது லீவு'' நாள்ள பாக்கலாம் எழும்பு! எழும்பு! மகனைப் பாடசாலைக்குப் போகத் துரிதப்படுத்துகிறார் சிவசம்பு. மகனும், மகளும் பாடசாலைக்குப் போகப் புறப்பட்டு விட்டனர்.

''மகன்! நீங்க ரெண்டு பேரும் நல்லாப் படிச்சி நல்ல உத்தியோகம் எடுக்கணும். என்னப் போல தோட்ட வேலயில நீங்களும் கரச்சப்படாம நல்லா வாழணும். போயிற்று வாருங்க மக்காள்'' தனது மக்கள் இருவரையும் முதுகைத்தடவி விடுகிறார் தந்தை சிவசம்பு.

''அப்பா! அப்பா!....''

''என்ன மகன்?''

''நாங்க கட்டாயம் படிச்சி நல்ல வேல எடுப்பமப்பா. போயிற்று வாறம்'' மக்கள் பாடசாலை போகின்றனர்.

காலம் கனவேகமாகக் கடந்து செல்கிறது. மகன் நந்தனும், மகள் மலரும் கல்வியில் நல்ல திறமை காட்டி வந்தனர்.

பரீட்சைகளில் நல்ல புள்ளிகளைப் பெற்றுத் தம் திறமைகளை வெளிப்படுத்தினர்.

தந்தை சிவசம்புவும், தாய் பார்வதியும் எதிர் பார்த்தது போலவே தம் மகன் கல்விப் பொதுத் தராதர உயர்தரத்தில் தேறி சர்வ கலாசாலைப் பட்டப் படிப்புக்குத் தெரிவாகும் தகுதி கண்டு பெருமகிழ்வடைந்தனர்.

மகிழ்ச்சியில் இருந்த பெற்றோரை 'மகனின் படிப்புக்குப் பணம் இல்லையே' என்ற கவலை வாட்டி வதைத்தது. ஊரில் உள்ள அனேகரிடம் பணத்துக்காக சிவசம்பு நாயாயலைந்தும் பணம் கிடைக்கவில்லை. மனைவி கணவனிடம் வருகிறாள். தன் கணவன் சோர்ந்த முகத்துடனிருப்பதைக் கண்டு விட்டாள்.

''என்ன கடுமையா யோசிக்கிறியள்?'' மனைவி பார்வதி கேட்கிறாள் கணவனிடம். கணவரோ யோசிக்காம முடியுமா? ஊரில் உள்ள காசிக்காரரிட்ட எல்லாம் கெஞ்சிப் பாத்தாச்சி. ஏன் உண்ட கொண்ணர் சீனித்தம்பியிட்டக் கூட வட்டிதாறனெண்டும் கேட்டாச்சி''

''அண்ணனிட்ட போனதா? ஏன் அவரிட்டப் போன. அவனும் ஒரு மனுஷனா? ஈவிரக்கம் இல்லாதவனுகள்'' பார்வதி மனங்கலங்கி அழுகிறாள். பின்

ந.டே.குணரெத்தினம்
களுவாஞ்சிகுடி

முகத்தைத் துடைத்துக் கொள்கிறாள்.

கணவன் மனைவிக்கிடையில் உரையாடல் தொடர்கிறது.

''இஞ்சேருங்க! இப்பதான் எனக்கு ஞாபகம் வருகிறது'' பார்வதி கூற..........

''என்ன பார்வதி?'' என்று மனைவியை ஏறிட்டுப் பார்க்கிறார் சிவசம்பு.

அண்டைக்கு குணமக்காட்டப் போனப்பில மகன் நந்தண்ட படிப்பப் பத்திக் கேட்டவ நான் சொன்னன் நல்லாப் படிக்கிறான். கெம்பசிக்கு எடுபட்டானெண்டா செலவுக்கு காசிக்கு எங்க போறதெண்டு.

''பார்வதி! குணமக்காட்ட காசிருந்தா தருவா.அவங்களே சீவியத்தைக் கொண்டு போகக் கஷ்ரப்படுறாங்க. அண்டைக் கண்டாடு அங்க இங்க கூலிவேலை செஞ்சி சீவிக்கிறா. புருஷனையும் நடந்த ஈழப்போரில் இல்லத்தாக்கிப் போட்டானுகள் சண்டாள ஆமிக்காரனுகள். அது சரி குணமக்கா என்ன சொன்னா?''

''அவங்கட போதகர் கதிரேசு நல்ல மனுஷனாம். ஏழைகள் யாரும் உதவி கேட்டாலும் கட்டாயம் செய்வாராம். அப்படி மகன் கெம்பசிக்கு எடுபட்டா வா பார்வதி நான் கூட்டிற்றுப் போய் போதகரிட்டக் கதைக்கிறன் எண்டவ. அதப்போய்ப் பார்ப்பம். எல்லாத்துக்கும் கடவுள் இருக்கிறார். நாம் குணமக்காட்டப் போயிற்று வருவம். சாறத்த மாத்துங்க'' பார்வதி கூறி முடிய சிவசம்பு சாறத்தை மாற்றிக் கொண்டுவர இருவரும் குணமக்கா வீட்டுக்கு விரைந்தனர்.

சிவசம்புவையும், பார்வதியையும் கேற்றடியில் நின்ற குணமக்கா கண்டு விட்டார்.

''என்ன மலர் இரண்டு பேரும் வாறயள்? ஏதும் விசேசமோ?''

''அப்படியுந்தானக்கா. எண்ட மகன்....'' என்று தொடங்க.

''கெம்பசிக்கு எடுபட்டுற்றானா?'' என்று வினாவினாள் குணமக்கா.

''ஓம்! ஓம்! கெம்பசிக்குக் கட்டத்தான் காசிக்கு வழியில்ல'' பார்வதிகூற ''கடுமையா யோசிக்கிறியள். யோசிக்காம போதகரிட்டப் போவம் வாருங்க என்ற குணமக்கா சிவசம்புவையும், பார்வதியையும் அழைத்துக் கொண்டு போதகர் வீட்டை அடைந்தனர்.

போதகர் வந்த காரியத்தைக் கேட்க குணமக்கா விசயத்தை விளக்குகின்றாள். யாவற்றையும் கேட்டறிந்த போதகர் ''அது பிரச்சினையில்லை. செலவுகள நான் பார்த்துக்கிறன்'' படிக்கட்டும் என்று கூறினார். அவரே எல்லா ஏற்பாடுகளையும் செய்து தனது காரிலேயே நந்தனை அழைத்துச் சென்று பல்கலைக் கழகத்தில சேர்த்தும் விட்டார்.

மாதாமாதம் சிவசம்புவின் மகனுக்கான முழுச்செலவுகளையும் ஏற்றதோடு மகளின் படிப்புக்கும் பணம் கொடுத்து உதவினார் போதகர் கதிரேசு.

நந்தன் பட்டப்படிப்பில் நல்ல முறையில் தேறினான். உயர் பதவியொன்றும் அவனை நாடி வந்தது. மிக உயர்ந்த வருமானம் பெற்ற நந்தனை எண்ணி வீட்டாரும், போதகரும் பெரு மகிழ்வடைந்தனர்.

மகன் மாதா மாதம் மிகக் குறைந்த பணத்தையே பெற்றோருக்குக் கொடுப்பான். எவ்வளவு சம்பளம் என்று கூட மகன் கூறுவதில்லை. வேலை முடிந்து வந்தாலும் வீட்டில் தங்குவதுமில்லை.

தந்தை. மகனிடம் தம்பி ஒரு வீடுகட்ட வேண்டும். மகளின் திருமணத்துக்குப் பணம் வேண்டும். என்று எப்போதும் மகனை நச்சரித்த வண்ணமிருந்தனர். ஒரு நாள் வெளியே சென்ற மகன் இரண்டு நாட் கழித்தே வீட்டிற்கு வந்தான். தாயு தந்தையும் மகனோடு வாய்த்தர்க்கப்பட்டனர்.

மகன் வீட்டை விட்டுப் போய் விட்டான். போனவன் போனவன்தான். வருடங்கள் ஐந்தும் கடந்துவிட்டன. மகனைக் காணாது வருந்தினர் பெற்றோர்.

அன்றொரு நாள் இரண்டாயிரத்து நான்காமாண்டு மார்கழி இருபத்தி ஆறாந் திகதி ''சுனாமி'' அடித்தது. சனங்களெல்லாரும் திசை கெட்டு ஓடினர்.

சிவசம்பு வீட்டாரும் ஓடினர். மனைவியைக் காணாத சிவசம்புவும், மகளும் அழுதனர். பிரேதங்கூடக் கண்டு பிடிக்கப்படவில்லை. வீடும் அழிந்து விட்டது.

தந்தையும் மகளும் ஆறாத் துயரத்துடன் தற்காலிகமாக அமைத்துக் கொடுக்கப்பட்ட கூடாரத்தில் வாழ்ந்தனர்.

மகனைப் படிப்பித்தேன். அவன் எங்களை அடியோட மறந்து விட்டான். அவன் இப்போ இருக்கிறானோ இல்லையோ? சுனாமி அவனையும் அழித்து விட்டதோ? எனக்கு மனைவியுமில்லை. மகனுமில்லை. அந்த நல்ல மனுஷன் கதிரேசுப் போதகர் இரங்குகின்றபடியால் என் மகளும் படிக்கிறாள். கடவுளே எண்ட மகனைக் காப்பாத்து என்று சிவசம்பு அழ மகளும் தாயையும், தமையனையும் எண்ணி ஒப்பாரி வைக்கத் தொடங்கி விட்டாள்.

சிவசம்பு மகளைத் தேற்றுகின்றார். நாங்கள் இருந்த கூடாரத்தின் வெளியே தந்தையும் மகளும் வருகின்றனர். சற்றுத் தூரத்துக்கப்பால் பலர் சத்தமிட்டபடி சிவசம்பு வாழ்ந்த கூடாரத்தை நோக்கி ஓடிவருவதையும். சிவசம்புவின் மகன் நந்தன் ஓடிவருவதையும் கண்டனர்.

தந்தையும் மகளும் அழுது கொண்யோடி நந்தனை அணைக்கின்றனர். நந்தனே ''அம்மா! எண்ட அம்மா எங்கப்பா.'' என்று அலறுகிறான். மீண்டும் சனக்கூட்டம் அழுது கொண்டே ஓடிவர தந்தையும் மகளும் பார்க்கின்றனர். அவர்களுக்குத் தங்கள் கண்களை நம்பமுடியவில்லை. அங்கே பார்வதி நொண்டிக் கொண்டே அழுதபடி ஓடிவருகிறாள்.

மலர்! அப்பா! அம்மா அந்தா வாறா என்றுகூறி அழுது கொண்டே ஓட சிவசம்புவும். மகனும் கூட ஓடுகின்றனர். பார்வதியை யாவரும் கட்டிப்பிடித்து அழுகின்றனர். மலர் எண்ட ராசாத்தி நீ வந்திட்டாயம்மா என்று அழ தாயைத் தடவுகின்றனர். அவரது பிள்ளைகள் இருவரும்.

எப்படித் தப்பினீர்கள்? எங்கிருந்தீர்கள்? என்று சுற்றி நின்றவர்கள் கேள்வி மேல் கேள்வி கேட்டு நச்சரித்தனர். சுனாமி அடித்த போது கடல் அலையால் அடித்துச் செல்லப்பட்டேன். பின்பு நடந்ததை நானறியேன். நான் சுய உணர்வு வந்து என்ன நடந்நதென்பதையறிய ஒரு மாதமாகி விட்டது. கடலலையில் நான் அள்ளுண்டு போனபோது ஒரு இந்திய மீனவர் உணர்வற்ற நிலையில் என்னை இந்தியாவில் ஓர் வைத்தியசாலையில் சேர்த்துப் பாராமரித்திருக்கிறார். நான் குணமான போது என்னை இலங்கைக்கு அனுப்பி விட்டார். இன்று நான் களுவாஞ்சிகுடிக்கு வந்து சேர்ந்தேன் என்றாள் பார்வதி.

கணவன் சிவசம்பு தன் வீட்டாரை நோக்கினார். பார்வதி! என்று மனைவியைத் தடவியபடி இனி யாரும் அழக்கூடாது. இரக்கமுள்ள ஆண்டவன் எங்கள ஆச்சரியமாக ஒண்டு சேர்த்திட்டார் என்று கூறினார்.

மகன் நந்தன் தாயை நோக்கினான். அம்மா என்றான் மகன்.

என்ன மகன் என்று தாய் மகனை ஏறிட்டு நோக்கி மகன் நீ எங்களுடன் கோபித்துக் கொண்டு போனாய். இவ்வளவு காலமும் நீ எங்களை மறந்து விட்டாய். உன் கடமைகளை மறந்து விட்டாய் என்று கூறினாள்.

மகன் தாயை நோக்கினான். தான் வாழ்ந்த வாழ்க்கை பற்றி உரைக்கத் தொடங்கினான். அம்மா நான் உங்களையெல்லாம் மறக்கவும் இல்லை. என் கடமைகளை மறக்கவுமில்லை. நான் கல்விபெற உதவிய போதகர் ஐயாவையும் மறக்கவுமில்லை.

நான் உங்களுடன் கோபித்துக் கொண்டுபோய் கல்முனையில் ஒரு வாடகை வீட்டில் வாழ்ந்தேன். என் வேலை நேரம் போக மீதமிருந்த நேரங்களில் ''ரியூட்டரி'' ஒன்றில் வேலையும் செய்தேன். சிக்கனமாய் வாழ்ந்து வீடு ஒன்றும் கட்டினேன்.

என் தங்கையின் திருமணத்திற்காக வேண்டிய பணமும் சேர்த்து வைத்துள்ளேன். நாங்கள் எந்தக் கவலையுமின்றி இனி வாழலாம். கவலையை விடுங்கள் என்று தன் பேச்சை முடித்தான் மகன் நந்தன். எண்ட பிள்ளை நல்லவனப்பா என்று தாய் மகனை அன்போடு கட்டி அணைக்கிறாள்.

நந்தன் போதகர் வீட்டுக்குத் தன் வீட்டாருடன் விரைகிறான் நந்தன். வீட்டாரைப் போதகர் கண்டு நடந்த காரியங்களை அறிந்து மகிழ்ந்தார்.

புதிய வீட்டில் சிவசம்புவின் மகளின் திருமணம் இனிதே நடந்தேறியது. அன்று தான் சிவசம்புவின் மகளின் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை முடிவும் வந்து சேர்ந்தது. அவளும் எதிர்காலத்தில் ஓர் பட்டதாரி. சிவசம்புவின் வீட்டாருக்கு இனித்தான் விடிவு.

# யுத்தத்தை நோக்கிய நகர்வின் ஒரு நடவடிக்கையே அவசரகால நிலைப் பிரகடனம்



சிங்களத்துக் கட்சிகள் தங்களுக்குள் எவ்வளவுதான் மோதிக் கொண்டாலும் தமிழினம் சம்பந்தப்பட்ட விடயங்களில் என்றுமே ஒற்றுமையாகவே செயற்பட்டு வருகின்றன. தமிழின விரோதச் சட்டங்களைக் கொண்டு வரும் பொழுது அதில் தமிழினத்துக்கு எதிரான வலுக்குறைவாக உள்ளதே என்று சுட்டிக் காட்டுவார்களேயன்றி, இது அநியாயமான சட்டம் என்று எந்தச் சிங்களத்துக் கட்சிகளும் கருத்துத் தெரிவிப்பதில்லை. சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வரப்பட்ட பொழுது அதனை எதிர்த்த சிங்களத் தலைவர்களே பின்னர் சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி என்று அரசியல் யாப்பிலேயே திணித்தவர்கள் என்பது வரலாற்று உண்மையாகும்.

இதே போன்றுதான் இன்று மீண்டும் தீவு முழுவதிலும் அவசரகாலச்சட்டம் கொண்டு வரப்பட்ட பொழுது அனைத்துச் சிங்களத்துக் கட்சிகளும் அதற்கு ஆதரவு கொடுத்துள்ளன. ஆனால் தமிழ்க்கட்சிகளின் நிலைதான் பரிதாபகரமானதாகும். மேர்வின் சில்வாவின் அவதூறான பேச்சைக் கண்டிப்பதற்காக நாம் ஒன்றிணைந்து விட்டோம் என்று கூறியவர்கள், தமிழினத்தின் அரசியல் மீட்சிக்காக ஒன்றாக இணைவோம் என்று கூறியவர்கள் அவசரகாலச்சட்ட வாக்கெடுப்பில் பிரிந்து நின்றுள்ளனர். இலங்கைத் தொழிலாளர் காங்கிரசு ஆளும் கட்சியுடன் சேர்ந்து அவசரகாலத்தை ஆதரித்துள்ளது. இதர கட்சிகள் அவசர காலத்துக்கு எதிராக வாக்களித்துள்ளன. இங்கே ஒற்றுமையைக் காணமுடியவில்லை. இலங்கைத் தொழிலாளர் காங்கிரசு தொடர்ந்தும் இரட்டை வேட அரசியையலையே பின்பற்றி வருகின்றமை இதன் மூலம் மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

யுத்த நிறுத்தம் சமாதான உடன்படிக்கை என்பன இன்னமும் செத்துவிடவில்லை. ஒருவகையில் அவை நடைமுறையில் இருக்கின்றன. இந்நிலையில் கதிர்காமரின் கொலையை அடுத்து அவசரகால நிலைமை அமுல்படுத்தப்பட்டுள்ளது. கொலையாளிகளைக் கண்டு பிடிப்பதற்காக அவசரகாலச்சட்டடம் தேவைதானா?. தற்போது நடைமுறையிலுள்ள சட்டங்களால் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க முடியாதா? குமார் பொன்னம்பலத்தின் கொலையாளிகளைக் கண்டுபிடிக்க முடியவில்லை. சிவராமின் கொலையாளிகளைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இவ்வாறு பல தமிழுணர்வாளர்களினதும், ஊடகவியலாளர்களினதும் கொலைகளைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அப்பொழுது தேவைப்படாத அவசரகால விதிகள் இப்பொழுது மட்டும் ஏன் அவசரமாகத் தேவைப்படுகின்றன.

அவசரகாலச் சட்டம் என்பது பல ஆண்டுகளாகத் தீவிலே அமுலில் இருந்துள்ளது. மக்கள் விடுதலை முன்னணியினரின் கிளர்ச்சி இருமுறை ஏற்பட்ட பொழுது மாத்திரம் சிங்கள இளைஞர்களுக்கெதிராக இந்தச் சட்டம் பாய்ந்துள்ளது. ஆனால் பல ஆண்டுகள் தமிழ்மக்களின் உரிமைக் குரலை நசுக்குவதற்காகவே அவசரகாலச் சட்டம் பயன்படுத்தப்பட்டுள்ளதென்ற உண்மையை மறைக்க முடியாது.

1958 இல் தமிழ் மக்களுக்கெதிராக வன்செயல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டது. அப்பொழுது பிரதமர் பண்டாரநாயக்கா அவசர காலத்தை அமுல்படுத்தி நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர விரும்பாமல் காலத்தை இழுத்தடித்தார். அப்பொழுது கவனர் ஜெனரலாக இருந்த ஒலிபர் குணதிலகாவின் நெருக்குதலால் அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்தினார். இருபத்து நாலு மணித்தியாலங்களுக்கு முன்னர் அவசரகாலத்தை அமுல்படுத்தியிருந்தால் தமிழ் மக்களை பெரும் பாதிப்புகளிலிருந்து மீட்டிருக்க முடியும். ஆதனைச் செய்யாதது மட்டுமல்லாது, அவசரகாலச் சட்டத்தை பயன்படுத்தி இலங்கைத் தமிழரசுக்கட்சித் தலைவர்க்ளைக் கைது செய்து தடுப்புக்காவல் சட்டத்தின் கீழ் தடுத்து வைத்தார். கண்துடைப்புக்காக கே.எம்.பி இராஜரத்தினாவும் கைது செய்யப்பட்டு சிறிது காலம் தடுத்து வைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டார். அவசரகாலச் சட்டத்தை பாவித்துத் தமிழ்த் தலைவர்களை அடைத்து வைத்துக் கொண்டு தமிழ் மொழி விசேட சரத்துக்கள் சட்டத்தை நாடாளுமன்றத்தில் கொண்டு வந்து தமிழ் மக்களின் கருத்துக்களைக் கேட்காமல் நிறைவேற்றினார். அவசரகாலச் சட்டத்தால் தமிழர்களின் குரல்வளை நசுக்கப்பட்டது. இதன் பின்பு 1961 பெப்ரவரி 20 தொடக்கம் ஏப்பிரல் 17 வரை சிங்கள ஆட்சி இயந்திரம் தமிழர் பகுதிகளில நடைபெறவில்லை. சத்தியாக்கிரகிகளை 1961 ஏப்பிரல் 17 நள்ளிரவு அவசரகாலச்சட்டம் பிறப்பித்துக் கைது செய்தது. சாதாரண சட்டங்கள் எதனையும், எப்பொழுதும் பாவிக்காது அவசரகாலச் சட்டம் அமைதி வழிப் போராளிகள் மீது ஏவப்பட்டது.

1971 இல் மக்கள் விடுதலை முன்னணியினரின் கிளர்ச்சி கரரணமாக அவசரகாலச் சட்டம் கொண்டு வரப்பட்டு சிங்கள இளைஞர்கள் பல்லாயிரக்கணக்கானோர் ஈவு இரக்கமின்றிக் கொன்றொழிக்கப்பட்டனர். இந்த அவசரகாலச் சட்டத்தை வைத்துக் கொண்டு 1972 இல் புதிய குடியரசு அரச யாப்பை நிறைவேற்றியது சிறிமாவோ ஆட்சி. படிப்படியாக உரிமைகள் பறிக்கப்பட்ட தமிழினம் நிரந்தரமாக ஆளப்படும் இனமாக, இந்த அரசியல் திட்டம் வழிகோலியது. தமிழ் இளைஞர்கள் காரணங்களெதுவுமின்றிக் கைது செய்யப்பட்டனர். சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டனர். ஆண்டுக்கணக்காக விசாரணைகளின்றிச் சிறைகளில் அடைக்கப்பட்டனர். இவ்வாறு தமிழ் மக்களை அடக்கி ஒடுக்குவதற்காகக் கொண்டு வரப்பட்ட அவசரகாலச் சட்டமே நாட்டில் நீண்ட காலம் ஆட்சியாளர்களின் கடிவாளமாகப் பயன்பட்டது. சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சி நடத்திய பொழுதும், ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி நடத்திய பொழுதும் பெரும்பாலான ஆட்சிக் காலம் அவசரகாலச்சட்டத்துக்குள்ளேயே நடைபெற்றது. ஜனநாயகம், பேசிக்கொண்டு கொடுங்கோலாட்சி செய்வதில் இரு கட்சிகளும் போட்டி போட்டு நடந்து கொண்டன. அவசரகாலச்சட்டம் அதற்குத் தான் பயன்பட்டது.

> ‘‘ யுத்தநிறுத்த உடன்பாட்டி லுள்ள சமாதான வழிகள் பலவற்றை முடக்க அவசரகாலச் சட்டவி திகள் பயன்படுத்தப்படவுள்ளன. கடந்த மூன்றரை ஆண்டுகளாகக் கட்டி எழுப்பப்பட்ட சமாதான முயற்சியை அவசரகால விதிகள் நிர்மூலமாக்கும் ஆபத்துகளே அதிகம் உள்ளன. போ ராளிகளின் சுதந்திரப் பயணங்கள் தடை செய்யப்படலாம். கைது செய்துவிட்டு பழிகளைச் சுமத்தி விட்டுச் சிறைகளில் அடைத்து நாட்டின் நிலைமையை சமாதான ஒப்பந்த காலத்துக்கு முன்னைய காலத்துக்குப் பின்நோக்கித் தள்ளலாம். அதன் மூலம் நாட்டை மீண்டும் யுத்தத்துக்குள் தள்ளலாம் என்பதே அவர்களது நோக்கமாகும்”

அவசரகாலச் சட்டத்தின் அடக்குமுறைகள் தமிழ் இளைஞர்கள் துன்புறுத்தப்பட்டதிலிருந்து காணமால் போவது வரை நீண்டு கொண்டே போயிற்று. தமிழ் இளஞர்கள் மீதான கெடுபிடிகள் அதிகமாக விடுதலைப் போராட்டமும் வளர்ச்சியடைந்தது. இராணுவ பலத்தைப் பயன்படுத்தித் தமிழ் மக்களை, ப் பணிய வைக்க அவசரகாலச் சட்டம் பயன்படுத்தப்பட்டது. துன்பங்களைச் சுமந்தபடி தமிழ்மக்கள் போராடியதால் சிங்கள ஆட்சியின் ஆக்கிரமிப்பிலிருந்து பெரும்பகுதித் தமிழ் மண் மீட்கப்பட்டது. தனது பலம் முழுவதையும் பயன்படுத்தியும், தமிழ் மக்களின் போராட்டத்தை வெற்றி கொள்ள முடியாத நிலையில் சமாதான முனனெடுப்புக்களுக்கு அரசு உடன்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றியடைந்த நிலையில் புலிகள் யுத்த நிறுத்தம் அறிவித்ததைத் தொடர்ந்து புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டது. நாடாளுமன்ற அதிகாரத்திலிருந்த ஐக்கிய தேசியக் கட்சி சமாதான உடன்படிக்கையில் கையெழுத்திட்ட வேளையில் நாட்டின் ஆட்சியதிகாரம் ஜனாதிபதி சந்திரிகாவிடமே இருந்தது. இது ஒரு முரண்பட்ட நிலையாகும். இந்த முரண்பட்ட நிலையில் பல போர்நிறுத்த மீறல்களைக் குறிப்பாக சிறிலங்காவின் கடற்படையினர் மேற்கொண்டனர். புலிகளின் பொறுமையைச் சீண்டவும், அவர்களுக்கு உலகநாடுகளிடையே வளர்ந்து வரும் நம்பிக்கையையும் சீர்குலைக்கவும் சந்திரிகா, கடற்படையினர் மூலமாக மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை.

அதன் பின்னர் ஆட்சிக் கவிழ்ப்பும், தேர்தலும் நடைபெற்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சியைக் கைப்பற்றியது. யுத்த நிறுத்த உடன்படிக்கையை நேரடியாகக் கிழித்தெறியாமல் அதில் ”குறிப்பிட்டிருந்த “ஏற்பாடுகளை”யும் நிறைவேற்றாமல், ஆயுதக் குழுக்களைப் பயன்படுத்தியும், ஆயுதக் குழுக்களின் பெயரைப் பயன்படுத்தியும்” பல போராளிகளைக் கொன்று அராஜகம் செய்தனர் ஆயுதப்படையினர். ஆனால் புலிகள் இங்கேயும் பொறுமை காத்தனர். புலிகளைச் சீண்டிப் போரைத் தொடங்கிவிட்டுப் புலிகள் மேல் பழியைப் போடும் அவர்களது திட்டம் சரி வராது போய்விட்டது. உலக நாடுகள் புலிகளின் பொறுமையையும், அர்ப்பணிப்பையும் கண்டு அவர்களின் மீதுள்ள நம்பிக்கையை வலுப்படுத்தினர். இந்த நேரத்தில்



தான் வெளியுறவு அமைச்சர் கொல்லப்பட்டார். உடனே அதற்கான பழியைப் புலிகளின் மீது போட்டுவிட்டு, அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது. முதலில் பத்து நாட்களுக்கு என்று கூறப்பட்டாலும், பின்னர் அது நீடிக்கப்பட்டுள்ளது. கதிர்காமரைக் கொலை செய்தவர்களைக் கண்டு பிடிக்க அவசரகாலச்சட்டம் தான் தேவையா? நடைமுறையில் உள்ள நாட்டின் சட்டங்கள் போதாதா என்று மனித உரிமைக் கழகங்களும், ஆர்வலர்களும் குரல் எழுப்பியுள்ளனர்.

==========

-பரணி-

==========

கதிர்காமர் கொலை செய்யப்பட்டதும், புலிகளின் மேல் பழியைப் போட்டது மாத்திரமல்லாது, பயங்கரவாதத்துக்கு எதிராகப் போரிட உலக நாடுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார் ஜனாதிபதி வேட்பாளரும், பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ. தமிழினத்தின் உரிமைப் போரட்டத்தைக் கொச்சைப்படுத்தி அதனால் பயங்கரவாதமென உலக அரங்கில் பரப்புரை செய்தவர் கதிர்காமர். அதில் ஓரளவு வெற்றியும் கண்டவர். அவர் கெட்டிக்காரன் புழுகு எட்டு நாட்களுக்குத்தான் என்பது போல் அவரது பொய்களும் தோற்றுப் போய்க் கொண்டிருந்த வேளையில் அவர் கொல்லப்பட்டார். அவரது கொலையை வைத்துத் தோற்றுப் போன அவரது பரப்புரையை நிமிர வைக்கவே ஆட்சியாளர்கள் விரும்புகின்றனர். அதற்காகவே அவசரகாலச் சட்டத்தையும் கொண்டு வந்துள்ளனர்.

யுத்தநிறுத்த உடன்பாட்டிலுள்ள சமாதான வழிகள் பலவற்றை முடக்க அவசரகாலச் சட்டவிதிகள் பயன்படுத்தப்படவுள்ளன. கடந்த மூன்றரை ஆண்டுகளாகக் கட்டி எழுப்பப்பட்ட சமாதான முயற்சியை அவசரகால விதிகள் நிர்மூலமாக்கும் ஆபத்துகளே அதிகம் உள்ளன. போராளிகளின் சுதந்திரப் பயணங்கள் தடை செய்யப்படலாம். கைது செய்துவிட்டு பழிகளைச் சுமத்தி விட்டுச் சிறைகளில் அடைத்து நாட்டின் நிலைமையை சமாதான ஒப்பந்த காலத்துக்கு முன்னைய காலத்துக்குப் பின்நோக்கித் தள்ளலாம். அதன் மூலம் நாட்டை மீண்டும் யுத்தத்துக்குள் தள்ளலாம் என்பதே அவர்களது நோக்கமாகும்.

ஆயுதப் படையினருக்கு வரம்பு மீறிய அதிகாரங்களைக் கொடுத்ததனால் தான் ஆயுதப் போராட்டம் கூர்மையடைந்தது. அதே அதிகாரங்களை இப்பொழுதும் வழங்கியுள்ளமை சமாதான வழிகளில் அரசுக்கு நம்பிக்கை இல்லை என்பதைக் காட்டுவது போலத் தெரிகிறது.

அவசரகாலச் சட்டவிதிகள் சமாதான ஒப்பந்த விதிகளை மீறும் நிலை தோன்றும் பொழுது யுத்தம் தவிர்க்க முடியாததாகிவிடும். இந்த நிலையைத்தான் சந்திரிகா விரும்புகின்றார் என்பது அவசரகால நிலையை மேலும் நீடிப்பதனால் உறுதியாகிவிடும். யுத்த நிறுத்த மீறல்களைச் செய்த பொழுதெல்லாம் கருணா குழு என்றும், ஆயுதக் குழுக்கள் என்றும் கூறிய இராணுவம், தற்பொழுது அவசரகால விதிகளுக்குள் நின்று தாக்குதல்களை நடத்திவிட்டு, புலிகள் அவசரகால விதிகளை மீறியதாகக் கரடி விடுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. என்னென்ன உரிமைகள் விடுதலைப்புலிகளுக்கு யுத்தநிறுத்த ஒப்பந்தம் கொடுத்துள்ளதோ, அவற்றை அவசரகாலச் சட்ட விதிகளின் மூலம் இல்லாமல் செய்ய முடியும். மக்களின் அடிப்படைச் ஜனநாயக உரிமைகள் கூட அவசரகாலச் சட்டத்தால் மறுக்கப்படும். இவற்றின் மூலம் நாட்டை மீண்டும் போர்ச் சூழலுக்குள் இட்டுச் செல்வதே அரசின் நோக்கமாக உள்ளது.

யுத்தத்தைத் தொடங்குவதற்கு முன் அதற்கான பழியை எப்படியும் புலிகளின மீது போட்டுவிட வேண்டும். இதற்காக அவசரகாலச் சட்ட விதிகள் பயன்படுத்தப்படலாம்.

உலக நாடுகள், குறிப்பாக சமாதான முனனெடுப்பபுகளில் பங்கு பற்றும் நாடுகள் ஸ்ரீலங்கா அரசின் கபட நோக்கத்தைப் புரிந்து கொள்ளவேண்டும்.

# நாரையின் விதி



ஒரு நாள் தாய்ப் பறவையின் அரவணைப்பில் வளர்ந்த நாரை தனது தாயைப் பிரிந்து சில காலம் தனிமையில் காட்டில் வாழ்ந்து வந்தது.

வழமைபோல் நாரை ஒரு நாள் குளக்கரைக்கு அருகில் பறந்து வந்து இறங்கியது. அவ்வேளை அந்த நரை தனக்கு வேண்டிய அன்றைய உணவை அக்குளத்திலே பெறலாம் என்ற சிந்தனையுடன் இறங்கியது.

நாரையின் எண்ணம் போல் அக்குளத்தில் நிறைய மீன்கள் கிடைத்தது. தனக்குத் தேவையான உணவைப் பெற்றுக் கொண்ட நாரை, மிகவும் மகிழ்ச்சியடைந்தது.

இவ்வாறு நாரை தனக்கு வேண்டிய உணவை அக்குளத்திலிருந்து எடுத்துக் கொண்டிருக்கும் போது, வேட்டையாடுவதற்காக வேடன் ஒருவன் அவ்வழியே வந்து கொண்டிருந்தான்.

அப்போது அவ்வேடனுக்கு அன்றைய உணவிற்கு பறவைகளையாவது வேட்டையாடிக் கொண்டு செல்லல் வேண்டும் என்ற எண்ணம் தோன்றவும், குளக் கரைக்கு அருகாமையில் நின்றால் பறவைகளும், விலங்குகளும் வரும் என்ற நோக்குடன் குளக்கரையுள்ள பக்கத்தின் அருகாமையில் சென்றான்.

தான் குளத்தை அண்டியதும், மிக விரைவிலே தனக்கு உணவு கிடைத்து விட்டது என்று நரையைக் கண்ட வேடன் மகிழ்ச்சியடைந்தான்.

அந்த நாரையின் மீது ஆசை கொண்ட வேடன் நாரைக்கு சத்தம் கேட்காமல் குளக்கரைக்கு அருகாமையில் சென்று, தனது அம்பினால் நாரையை நோக்கி எய்தான்.

இவ்வாறு வேடன் எய்த அம்பு நாரையின் அழகிய சிறகுகளில் ஒன்றில் பட்டது. இதை முற்றிலும் எதிர் பாராத நரை வேதனையால் துடி துடித்தது. தனது சிறகு வேடனின் அம்பில் பட்டு முறியுண்டபடியால் தன்னால் பறக்க முடியாத நாரை நிலத்திலேயே விழுந்து கிடந்து பறக்க எத்தனித்தது.

இவ்வாறு நாரை நிலத்தில் விழுந்ததும் அது மீண்டும் பறந்து விடும் என்ற எண்ணத்துடன், அதைப் பிடிக்கும் முயற்சியில் வேடன் விரைந்து வந்து நாரையைப் பிடித்துக் கொண்டான்.

இதனை முற்றிலும் எதிர் பாராத நாரை தனக்கு இறுதி நேரம் வந்து விட்டது என்று நினைத்தது, தான் இதுவரை காலமும் எவ்வாறெல்லாம் சுதந்திரமாய் வாழ்ந்து வந்தேன். எனக்கு இன்று இந்நிலை நேர்ந்து விட்டதே என நினைத்ததுடன் வேடனின் அம்புபட்ட வலியினாலும் கதற ஆரம்பித்தது.

இதுவரை காலமும் ''மனதில் ஆயிரமாயிரம் எண்ணங்களுடனும், எதிர்பார்ப்புகளுடனும் சுதந்திரமாய் வாழ்ந்த எனக்கு இவ்வாறான நிலைதான் வரவேண்டுமா? என எண்ணி வேடனின் கையில் அகப்பட்ட நிலையில் நாரை தனது விதியை எண்ணி நொந்து கொண்டது.

விதியின் மேல் நம்பிக்கை கொண்ட நாரை, இறைவனிடத்திலும் நம்பிக்கை வைத்திருந்தது. இந்த வேளை வேடனின் கைப் பிடியில் அகப்பட்டு உயிருக்காகப் போராடும் தன்னைக் காப்பாற்றுமாறு நாரை இறைவனைப் பிரார்த்தித்தது.

இவ்வாறு நாரை தனது உயிருக்கு இறுதி நிலை ஏற்பட்ட நிலையிலும், தன்னைக் காப்பாற்ற எவரும் இல்லை என்ற நிலையிலும் நமது விருப்பப்படியே நமது ஆயுள் முடிந்து விட்டது என்று நினைத்தவாறே தனது இன்னுயிரைத் துறந்தது.

இவ்வாறு நாரையின் உயிர் பிநிந்து விட்டதைக் கண்ட வேடனுக்கோ மட்டற்ற மகிழ்ச்சி பொங்கியது. அதே வேளை இந்த உலகத்திலே தனக்கும் என்றோ ஒரு நாள் இப்படியாக மடிய வேண்டிய நிலை ஏற்படும் என்பதைப் புரியாத நிலையில் நாரையைக் கொண்டு தனது வீட்டில் உணவாக்கிக் கொண்டான்.

சிறிது காலத்தின் பின் தனக்கும் நாரைக்கும் நேர்ந்த விளைவு வந்த போது அதனை அனுபவித்துப் புரிந்து கொண்ட வேடன் அன்று நாரை உயிரிழந்ததையிட்டுத் தான் மகிழ்ச்சியடைந்ததை எண்ணி மிகவும் வருத்தம் கொண்டவனாகக் காணப்பட்டான்.

**அ.எழில்மாறன்,**
**தரம்-9K,**
**மட்-களுதாவளை ம.வித்தி.**

# பொது அறிவு

01. உலகில் மிக உயரமான மலை எது?
**சிவனொளிபாதமலை.**

02. உலகில் மிக நீளமான மலை எது?
**றொக்கி மலை.**

03. உலகில் மிக அகலமான மலை எது?
**அந்தீஸ் மலை.**

04. உலகில் மிகப் பெரிய கண்டம் எது?
**ஆசியாக் கண்டம்.**

05. உலகில் மிகப் பெரிய ஆழி எது?
**மரியானா ஆழி.**

06. உலகில் மிகப் பெரிய பாலை வனம் எது?
**சஹாராப் பாலை வனம்.**

07. உலகில் மிகப் பெரிய தீவு எது?
**கிறீன்லாந்து.**

08. இலங்கையின் பரப்பளவு யாது?
**65610 சதுர கிலோமீற்றர்.**

09. இலங்கையின் ஆதிக் குடிமக்கள் யார்?
**இயக்கர், நாகர்.**

10. இலங்கையின் மிகப் பெரிய நீர்வீழ்ச்சி எது?
**துன்கிந்த.**

11. இலங்கையையும், இந்தியாவையும் பிரிக்கும் நீரிணை எது?
**பாக்கு நீரிணை.**

12. இந்து சமுத்திரத்தின் முத்து என வர்ணிக்கப்படும் நாடு எது?
**இலங்கை.**

**ப.பிறிதீப்**
**தரம்-11**
**அரசடித்தீவு வி.ம.வித்தி.**

# பெறும் இடங்கள்

- "புத்தியை அவன் அடையும் தோல்வியிலிருந்து".
- "ஞானத்தை அவன் செய்யும் அயோக்கியத் தனத்திலிருந்து".
- "அன்பை அவன் கைக் கொள்ளும் கோழைத் தனத்திலிருந்து"
- "மனச்சாட்சியை அவனுக்கு வரும் துன்பத்திலிருந்து"
- "வறுமையை விட்டுக் கொடுக்கும் சுபாபத்திலிருந்து"
- "நெருப்பை விடச் சூடானது பொறுமைக் காரர்களின் மனம்"
- "நிலவை விடக் குளிர்ச்சியானது குழந்தையின் சிரிப்பு"
- "விசத்தை விடக் கொடியது சுயநலவாதியின் சிரிப்பு"
- "வாளை விடக் கூர்மையானது ஏழையின் கண்ணீர்"
- "கடலை விட ஆழமானது விதவையின் கவலை"

# மௌனத்தின் மகத்துவம்

- உன் கௌரவம் நாக்கு நுனியில் இருக்கின்றது.
- உரத்த குரலில் பேசுகிறவன் சரியாகப் பேசுவதில்லை.
- மௌனத்தைத் தாழ்வாக மதிப்பிடாதே.
- மௌனமாய் இருப்பதன் மூலம் மற்றவர்களின் குறைகளை அறிந்து கொள்ள முடியும்.
- பேச்சு பெரிதுதான் ஆனால் மௌனம் அதைவிடப் பெரிது.
- மௌனம் உண்மையான அறிவின் சிறந்த பதிலாகும்.
- அதிகமாக மௌனத்தைக் கடைப்பிடிப்பவர்கள் விசேட சிந்தனை செய்பவர்களாவர்.
- மௌனமாய் இருக்கத் தெரியாதவனுக்கு நன்றாகப் பேசவும் தெரியாது.
- பெண்ணுக்கு மௌனத்தைப் போல் அணிகலன் வேறில்லை. ஆனால் அவள் அதை அணிவதுதான் இல்லை.
- மௌனம் திறமையான பேச்சு வசனங்களை விட மேலானது.
- வார்த்தைகளால் சாதிக்க முடியாததை மௌனம் சாதித்து விடுகின்றது.

**செல்வி:-பூ.கிரிஜா**
**திருப்பழுகாமம் திலகவதியார் ம. இல்லம்.**






அ.துதிகரன், தம்பிலுவில் - 01.

# உலகம் போற்றிய புனிதர்




- உலகம் போற்றிய புனிதர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் ஆவார்.
- 1978ல் புதிய பாப்பரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- உலகிலுள்ள 110 கோடி கிறிஸ்தவர்களின் மத குருவாவார்.
- 1995 ஆம் ஆண்டு இலங்கை வந்தார்.
- அமைதியைப் பரப்ப 120 நாடுகளுக்கு மேல் விஜயம் மேற்கொண்டுள்ளார்.
- 1981 இல் நயவஞ்சகர்களின் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தார்.
- எனினும் அவர் குற்றவாளிக்கு மன்னிப்பளித்தது குறிப்பிடத் தக்கது.
- 12 மொழிகளுக்கு மேல் இவருக்கத் தெரியும்.
- இறக்கும் வரை தெய்வீக உணர்வு மாறாதிருந்தவராவார்.
- அண்மையில் சுமாக்கரின் காரை விட இவரது பழமை வாய்ந்த கார் அதிகளவில் ஏலமானது.
- உலகை விட்டு நீத்தாலும் உள்ளங்களை விட்டு இவரின்னும் அகலவில்லை.


**பு.சீலன்,**
**தரம்-09அ,**
**அக்-தம்பிலுவில் மகா வித்தி.**



**சி.றோய்**
**துறைநீலாவணை - 07**
**மெ.மி.த.பாடசாலை.**



அ.சியானி, தரம்-06K,
மட்-கொக்கட்டிச்சோலை இ.கி.மி.வித்தி.







நாம் "Black hole" என்ற சொல்லை பத்திரிகைகள் தொலைக்காட்சிகளில் கேட்டிருப்போம். அதன் மாதிரிகளையும் பார்த்திருப்போம். உண்மையில் "பிளைக் கோல் என்பது மிக சக்திவாய்ந்த ஈர்ப்புச் சக்தி கொண்ட நட்சத்திரங்களே ஆகும். இவற்றை நாம் தமிழில் "கறுப்பு ஈர்ப்பு மையங்கள்" என்று அழைக்கலாம்.

இந்த கறுப்பு ஈர்ப்பு மையம் பற்றிய ஒரு விபரணம் B.B.C தொலைக்காட்சிச் சேவையில் அண்மையில் ஒளிபரப்பானது. அதில் இந்த பிளைக் கோல் எவ்வாறு தன்னருகே உள்ள பொருட்களை (நட்சத்திரங்கள், கோள்கள் உட்பட) உள்ளீர்க்கின்றது என்பது விளக்கிக் காட்டப்பட்டது. அது ஒரு பயங்கரக் காட்சியாகவே இருந்தது.

விண்ணில் நாம் காணும் நட்சத்திரங்களை அவற்றின் திணிவினை சூரியனின் திணிவுடன் ஒப்பிட்டு பிரித்து வகைப்படுத்த முடியும். இவ்விதம் பெறப்படும் திணிவு சூரியத் திணிவு (Solar mass) எனப்படும். குறித்த ஒரு நட்சத்திரத்தின் திணிவு சூரியத் திணிவிலும் மிக அதிகமாய் இருக்கும் போது அந்த நட்சத்திரம் கரும் ஈர்ப்பு மையமாக மாறிவிடுவதுண்டு.

அண்டவெளியில் இவ்வாறான நட்சத்திரங்கள் இருக்கலாம் என முதன் முதலில் 1783 ஆம் ஆண்டு கேம்பிறிச் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஜோன் மைக்கல் கூறியிருந்தார். எனினும் இவைபற்றி மேலும் விளக்கி திணிவுகளை எல்லையிட்டு காட்டிய பெருமை இந்திய விஞ்ஞானி சந்திரசேகரையே சாரும். இவ் எல்லை அவரின் பெயர் கொண்டே அழைக்கப்படுகிறது. (சந்திரசேகர் எல்லை - Chandrasekhar limit)


இதன்படி 1.44 இற்குக் குறைவான சூரியத்திணிவை கொண்டுள்ளவற்றை வெண்குளர் (white Dwarf) நட்சத்திரம் எனவும் 1.44 - 3 வரையுள்ளவை நியுத்திரன் நட்சத்திரங்கள் எனவும், 3 இற்கு கூடுதலாக உள்ளவை கறுப்பு ஈர்ப்பு மையங்கள் எனவும் அவர் வகைப்படுத்தினார். இதற்காக அவருக்குப் பின்னாளில் நோபல் பரிசும் வழங்கப்பட்டது. இவ்வகையான ஈர்ப்பு மையக்கருக்களில் செல்லும் ஈர்ப்புவிசை இல்லாத அல்லது ஈர்ப்பு குறைந்த பொருள்கள் யாவற்றையும் இந்த ஈர்ப்பு மையங்கள் விழுங்கி ஏப்பமிட்டு விடும்.




ஆபிரிக்காக் கண்டத்தில் காணப்படும் அடன் சோனியா டிஜிடாடா (A dansonia digitata) எனும் மரம் வித்தியாசமானதொரு தோற்றத்தைக் கொண்டது. 70 அடிவரை வளரும் இம்மரம் பொதுவாக 35 அடி விட்டத்தைக் கொண்டிருக்கும். இவ்வாறு ஒரு மரம் வளர 1000 வருடங்கள் வரை எடுப்பதாகக் கூறப்படுகின்றது.

இம்மரம் மிகப் பயனுள்ளது. இது இலகுவில் பழுதுபடாத வைரமான மரம் என்பதுடன் இதன் இலைகள் மரக்கறி போல் பயன்படுத்தப்படுகின்றன. அத்துடன் இம் மரத்தின் நடுவில் உள்ள கூழ் போன்ற பகுதி உணவாகப் பயன்படுகிறது. மற்றும் இதன் விதைகள் வறுத்து உண்ணத்தக்கவையாகும். பட்டையை கொண்டு கயிறு, வலை போன்றவை தயாரிக்கப்படுகின்றன. பிரித்தானியர் ஆபிரிக்காவை ஆண்டகாலங்களில் இவ்வகை மரங்களை பெருமளவில் வெட்டி தமது நாட்டிற்கு அனுப்பியமை இம்மரங்கள் அருக காரணமாயிற்று.

இம்மரம் மணல்பாங்கான வெப்பம் மிக்க சம வெளிகளில் வளர்வதுடன் ஒரு மரம் 4000-5000 லீற்றர் நீரைச் சேமித்து வைக்கக் கூடியது.




விண்வெளிப் பயணங்களில் விந்தைகள் புரியப்படும் இக்காலத்தில் நாம் வாழ்கிறோம். ஆயிரக்கணக்கான செயற்கைக் கோள்கள் விண்வெளியில் பவனிவரும் சமகாலத்தின் சாட்சிகள் நாங்கள். 1957 இற்கு முன் வாழ்ந்தவர்கள் இவை பற்றி அதிகம் அறிந்தி ருக்க வாய்ப்பில்லை.

விண்வெளிக்குச் செயற்கைக் கோள்களை அனுப்பும் முயற்சியில் 1957 ஒக்டோபர் 4இல் ரசியா தனது திறனாற்றலை நிரூபித்தது. ஸ்பூட்னிக் -1 என்ற 184 இறாத்தல் நிறை கொண்ட செயற்கைக் கோளை பூமியில் இருந்து 140-590 மைல் உயரத்தில் ஒரு நீள்வட்டப் பாதையில் சுற்றிவரத்தக்கவாறு அது ஏவியது. இச் செயற்கைக் கோள் 90 நிமிடத்துக்கு ஒரு தடவை பூமியைச் சுற்றிவந்தது. இவ்வாறு இது 21 நாட்கள் செயற்பட்டது.

இதைத் தொடர்ந்து அமெரிக்கா 1958 இல் எஸ்புளோரர் -1 என்ற செயற்கைக் கோளை விண்ணில் ஏவி தனது பங்கை ஆரம்பித்து வைத்தது.

தற்போது 4800 செயற்றைக் கோள்கள் விண்வெளியில் உள்ளன. இவற்றில் 2300 செயற்கைக் கோள்களே இயங்கு நிலையில் உள்ளன. இவற்றில் 130 ரசியாவிற்கும் 700 அமெரிக்காவிற்கும் சொந்தமானவை. இது தவிர கூட்டு நாடுகளின் செயற்கைக்கோள்கள் (Multinational Satellites) 26 வரை உள்ளன.

இன்று அமெரிக்கா, ரசியா, சீனா, யப்பான் இந்தியா, இஸ்ரேல் மற்றும் ஐரோப்பிய விண்வெளி அமைப்பு என்பன விண்வெளியில் செயற்கைக் கோள்களைக் கொண்டுள்ளன. செயற்கைக் கோள்கள் தொலைத் தொடர்பு, திசையறிதல், பூமி நிலைகாணல், காலநிலை அறிதல், படைத்துறை கண்காணிப்பு, விஞ்ஞான ஆய்வுகள் போன்றவற்றை நோக்காகக் கொண்டு விண்ணில் ஏவப்படுகின்றன.





பூமியில் பிறந்த மனிதன் சந்திரனில் 1969 இல் காலடி பதித்து மகத்தான சாதனை படைத்தான். தொடர்ந்தும் வான்வெளியில் உள்ள கிரகங்களை வெற்றிகொள்ள வேண்டும் என்ற முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிரகங்களில் எல்லாவற்றையும் விட செவ்வாய் தொடர்பில் ஆர்வம் அதிகமாய் காணப்படுகிறது. செவ்வாயில் உயிரினங்கள் வாழலாம், வாழ்வதற்கான சூழல் நிலவலாம் என்ற எதிர்பார்ப்புக்கள் விஞ்ஞானிகளிடம் அன்றுமுதல் இருந்து வருகின்றன. அண்மையில் செவ்வாயில் தண்ணீர் இருக்கக் கூடிய சாத்தியங்கள் உண்டென அறியப்பட்டுள்ளது.

தற்போது செவ்வாயில் உள்ளஸ்பிறிட ரோவர் (Sprit Rover) (தன்னியக்க ஆய்வு வாகனம்) செவ்வாய் கிரகத்தின் உயரமானதொரு குன்றுப் பகுதிக்கு ஏறிச் சென்று (இக் குன்று கஸ்பன்ட் கில்) husband hill என அழைக்கப்படுகிறது. கொலம்பிய விண்கல விபத்தில் கொல்லப்பட்ட அதன் கொமாண்டர் Rick Hasband இன் பெயரே இதற்குச் சூட்டப்பட்டுள்ளது.) செவ்வாயின் பகுதிகளை தெளிவாக படம் பிடித்து பூமிக்கு அனுப்பியுள்ளது. அத்துடன் செவ்வாயின் தரையமைப்பையும் ரோவர் ஆராய்ந்து வருகின்றது. இவ் ஆய்வுகளின் மூலம் செவ்வாய் பற்றிய இன்னும் பல விடயங்கள் தெளிவாகலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# போராளிகள் மீதான தாக்குதலுக்கு படைத்தரப்பே பொறுப்பேற்க வேண்டும்

## யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் ஈழநாதம் வாரஇதழுக்கு தெரிவிப்பு



**போராளிகள் மீது இலக்கு வைத்து தாக்குதல் மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கான முழுப் பொறுப்பையும் படைத்தரப்பே ஏற்க வேண்டும்.**

**படைத்தரப்பின் ஒத்துழைப்பு அனுமதியின்றி இவ்வாறான தாக்குதல்களை வேறு சக்திகளால் மேற்கொள்ள முடியாது. அத்துடன் ஆயுதக் குழுக்களை அரசு அங்கீகரிக்கக்கூடாது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் என். ரவிராஜ் ஈழநாதம் வாரஇதழுக்குத் தெரிவித்தார். ஈழநாதம் வாரஇதழுக்கு அவர் வழங்கிய செவ்வியின் முழு விபரமும் வருமாறு:-**

**கேள்வி:~** *தற்போது சிறிலங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ ஜே.வி.பி, ஹெல உறுமயவின் கூட்டுடன் தேர்தலில் குதித்திருக்கிறார். இது பற்றி உங்கள் கருத்தென்ன?*

**பதில்:~** மீண்டும் பேரினவாதக் கட்சிகள் எல்லாம் ஒன்றிணைவதற்கான வாய்ப்பு இருக்கின்றது. இந்த நாட்டில் கொழுந்து விட்டு எரிகின்ற இனப் பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பாக எந்தவொரு தலைவரும் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்கவில்லை. ஆனால் மகிந்த ராஜபக்ஷ அவர்கள் சேர்ந்திருக்கின்ற கூட்டு அதாவது ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமயவினர் முற்று முழுதாக சமாதானப் பேச்சுவார்த்தைக்கு எதிரானவர்கள்.

அவர்களது ஆதரவினைப் பெற்று ஜனாதிபதியாக வருகின்ற போது எப்படி இந்த சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்வது என்பது கவலைக்குரிய விடயமாகும். ஆகவே இந்தச் சூழ்நிலையில் தமிழ் மக்களின் நிலைப்பாடு தொடர்பாக அரசாங்கம் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்காதவர்களாகவே இருந்து வருகின்றனர்.

**கேள்வி:~** *தமிழ்க் கூட்டமைப்பு ஜனாதிபதித் தேர்தலை எவ்வாறு நோக்குகிறது?*

**பதில்:~** தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்த வரையில் இது ஒரு முக்கியமான தலையாய கடமையல்ல. எங்களுடைய தமிழ்த் தேசியத்தினுடைய உரிமைகளுக்காக போராட்டத்திற்கே ஊக்கம் செலுத்துவதே தவிர தென்னிலங்கையில் யார் ஜனாதிபதியாக வரப்போகின்றார்கள் என்பதை தெரிவதில் அக்கறையில்லை. ஆகவே இது தொடர்பாக நாங்கள் முடிவு எடுக்கவில்லை. ஆனால் தமிழ் மக்களுடைய எதிர்காலத் தேவைகள் பற்றி என்ன முடிவு எடுக்க வேண்டுமோ. அதை எடுப்போம். நிச்சயமாக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் கலந்தாலோசனை நடத்தி சிறந்த முடிவுகளை எடுப்போம்.

**கேள்வி:~** *தற்போது சமாதான முயற்சிகள் தடைப்பட்டுள்ளன. நேரடிப் பேச்சுக்கள் விடயத்தில் அரசு ஒஸ்லோவில் நடைபெறுவதை நிராகரித்துள்ள நிலையில் அடுத்த நகர்வு என்னவாக இருக்கும்?*

**பதில்:~** எங்களைப் பொறுத்த மட்டில் இன்று இருக்கின்ற சமாதானச் சூழ்நிலை மிகவும் ஒரு கவலைக்குரிய ஒன்றாகவே இருக்கின்றது. இது தொடர்பாக நாங்கள் சர்வதேச சமூகத்திற்கு எடுத்துரைத்து இருக்கின்றோம். அதாவது சிங்களப் பேரினவாதிகள் தமிழ் மக்களின் உரிமைகளை ஒருபோதும் பெற்றுத்தரமாட்டார்கள் என்பதை அண்மைக் காலச் சம்பவங்கள் உணர்த்துகின்றன. எனவே தமிழ் மக்கள் போராட வேண்டியே உள்ளது. இதற்கான அங்கீகாரத்தினை சர்வதேச சமூகம் வழங்க வேண்டும் என்பதை சர்வதேச சமூகத்திற்கு எடுத்துரைத்திருக்கின்றோம்.

**கேள்வி:~** *இப்போது தமிழர் தாயகத்தில் படையினரின் ஆக்கிரமிப்புப் பகுதியில் போராளிகளை இலக்கு வைத்துத் தாக்குதல் நடத்தப்படும் நிலையில் போர் நிறுத்தம் நீடிக்குமா?*

**பதில்:~** இந்தச் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம் பெற்றுக் கொண்டு இருப்பதனை நாங்கள் காண்கின்றோம். ஆகவே இதனால் போர் நிறுத்த சூழ்நிலை அபாய நிலைக்கு இட்டுச் செல்கின்றது. இதில் அரசாங்கத்தினுடைய ஒத்துழைப்பு இல்லாது இவ்வாறான கொலைகளை இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் செய்ய முடியாது. ஆகவே அரசாங்கத்தினால் இந்த ஆயுதம் ஏந்திய குழுக்களின் ஆயுதங்கள் களையப்படுவதுடன், அவர்களை அரசு அங்கீகரிக்கக் கூடாது என்பதுதான் எங்களது கருத்து.

**கேள்வி:~** *கதிர்காமர் படுகொலைக்குப் பின் அவசரகாலச் சட்டத்தை அரசு பிரகடனப்படுத்தியுள்ளது. இதனால் மக்கள் படைத்தரப்பின் கெடுபிடி, கைது நடவடிக்கைகளுக்கு உள்ளாகி வருகின்றனர். இந்நிலை குறித்து உங்கள் கருத்தென்ன?*

**பதில்:~** அவசரகாலச் சட்டம் என்பது இந்த நாட்டில் தொடர்ச்சியாக தமிழ் இளைஞர்களையும் யுவதிகளையும் வாட்டி வதைத்து வரக்கூடிய தொன்று. இதற்கு இந்த அவசரகாலச் சட்டத்தினைப் பயன்படுத்தி தமிழ் இளைஞர் யுவதிகளை சித்திரவதைக்கு உட்படுத்தினர். இவற்றைத் தான் கடந்த காலங்களில் அவசரகாலச் சட்டத்தின் மூலம் சாதித்தனர். இந்த அவசரகாலச் சட் டத்தின் மூலம் இந்த நாட்டின் பிரச்சினைகளை தீர்க்க முடியாது.

எனவே அவசர காலச் சட்டத்தினை மீண்டும் கொண்டு வந்ததன் மூலம் அவர்கள் தமிழ் மக்கள் மீது அவர்களது இராட்சத தனத்தினைக் கட்டவிழ்த்து விடக் கூடிய நிலையினைப் படைத்தரப்பிற்குக் கொடுத்திருக்கின்றார்கள்.

இதனை நாங்கள் வன்மையாகக் கண்டித்திருக்கின்றோம். இது தொடர்பாக பாராளுமன்றத்திலும் கண்டித்து இருக்கின்றோம். சிங்கள கட்சிகள் எல்லாம் இணைந்து தமிழ் மக்கள் மீது அவசரகாலச் சட்டத்தினைப் பிறப்பித்து இருக்கின்றனர். இதனடிப்படையில் தமிழ் இளைஞர்கள் யுவதிகள் இன்றும் கைது, செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இதில் வெட்கப்பட வேண்டிய ஒன்று என்னவென்றால் தமிழ் பேசும் மக்கள் பாதிக்கப்படக்கூடிய நிலை இருக்கின்ற போதும், தமிழ் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்த இருக்கின்ற முஸ்லிம் காங்கிரசைத் தவிர ஏனைய முஸ்லிம் கட்சிகளும், மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கட்சிகளும் இந்த அவசரகாலச் சட்டத்திற்கு ஆதவு அளித்திருப்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

**செவ்வி கண்டவர்:-**
**ஜெயக்காந்**

**கேள்வி:~** *மகிந்த ஜனாதியானால் நோர்வேயின் அனுசரணைப் பணி நிறுத்தப்படுமா?*

**பதில்:~** போகின்ற போக்கைப் பார்த்ததால் மகிந்த ராஜபக்ஷ அவர்கள் ஜனாதிபதியாகத் தேர்ந்து எடுக்கப்பட்டால் நாட்டில் உடனடியாக யுத்தம் ஒன்று ஏற்படக்கூடிய நிலையைத்தான் நாம் காண்கின்றோம். ஏனென்றால் அவருடன் சேர்ந்து இருக்கின்றவர்கள், கூட்டுச் சேர்ந்து இருப்பவர்கள் எப்படியான போக்கினைக் கடைப்பிடிப்பார்கள் என்பதை நாங்கள் தற்போது நேரடியாகப் பார்த்துக் கொண்டு இருக்கின்றோம்.

**கேள்வி:~** *மீண்டும் இந்தியாவை இலங்கை விவகாரத்தில் சம்பந்தப்படுத்த சில தரப்பு முனைகின்றது. இது தமிழ் மக்கள் நலனில் எவ்வாறு அமையும்?*

**பதில்:~** இந்தியாவைப் பொறுத்தவரையில் இந்தியாவில் பல கோடிக் கணக்கில் தமிழ் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். ஆகவே இந்தியா தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில் ஒரு பாரதூரமான முடிவினை எடுக்க முடியாது. ஆனாலும் அண்மைக் காலங்களில் இந்தியாவினுடைய நடவடிக்கைகள் தமிழ் மக்களைச் சற்று கவலைக்குரிய விடயமாக்கியுள்ளது. அதாவது சந்தேகங்க ளைத் தோற்றுவிக்கக்கூடிய நடவடிக்கைகளை எடுத்திருப்பதை தமிழ் மக்கள் கண்டிருக்கின்றனர். ஆகவே மீண்டும் இந்தியாவினுடைய நடவடிக்கைகள் தமிழ் மக்களுக்கு சாதகமாக இருக்கும் என்பதில் சந்தேகமாக இருக்கின்றது. ஆரம்பத்தில் பேச்சுவார்த்தை தொடங்குகின்றபோது தமிழீழ விடுதலைப் புலிகள் இந்தியாவின் ஒத்துழைப்பை கோரியிருந்தனர். ஆனால் இந்தியா மறுத்திருந்தது. தற்போது இந்தியாவினுடைய செயற்பாடு எவ்வாறு மாறியிருக்கின்றது என்பது எங்களுக்குத் தெரியாது. ஆனால் இந்தியாவினுடைய தலையீடு தமிழ் மக்கள் தொடர்பாக எடுக்கக் கூடிய சாதகமான நிலைப்பாட்டில் தமிழ் மக்களுக்கு சந்தேகம் இருக்கின்றது.

**கேள்வி:~** *தற்போது படையினருடன் உள்ள ஆயுதக் குழுக்கள் சமாதானத்தைச் சாகடித்து வருகின்றனர். இவர்களின் ஆயுதங்கள் களையப்படாவிட்டால் சமாதானம் சாத்தியமில்லை. எனவே எதிர்காலத்தில் இவ்விவகாரத்தில் எவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்?*

**பதில்:~** தற்போது இயங்குகின்ற ஆயுதக் குழுக்கள் நிராயுத பாணிகளாக்கப்பட வேண்டும். இது யுத்த நிறுத்த உடன்படிக்கையில் இருக்கின்றது. அது இன்றைய நிலையில் மீறப்பட்டு வருவது உண்மை. ஆகவே ஜனநாயக வழிகளுக்கு வந்துவிட்டோம் எனக் கூறுகின்றவர்கள் தொடர்ச்சியாக ஆயுதங்களை வைத்து இருப்பவர்களைக் கடைசிவரை மக்களால் ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனென்றால் தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்தமட்டில் அவர்கள் ஆயுதங்களைத் தமிழ் மக்களின் பாதுகாப்பிற்காக வைத்திருக்கிறார்கள்.

ஆனால் இவர்கள் நாங்கள் ஆயுதங்களை வைத்து விட்டோம். ஜனநாயக வழிகளுக்கு வந்துவிட்டோம். என்று கூறிக் கொண்டு ஆயுதங்களை வைத்திருந்து படுகொலைகளைச் செய்து வருவது முற்றிலும் ஜனநாயகத்திற்கும், யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கும் முற்றிலும் முறனான ஒன்று என்றார் அவர்.

**போகின்ற போக்கைப் பார்த்ததால் மகிந்த ராஜபக்ஷ அவர்கள் ஜனாதிபதியாகத் தேர்ந்து எடுக்கப்பட்டால் நாட்டில் உடனடியாக யுத்தம் ஒன்று ஏற்படக்கூடிய நிலையைத்தான் நாம் காண்கின்றோம். ஏனென்றால் அவருடன் சேர்ந்து இருக்கின்றவர்கள், கூட்டுச் சேர்ந்து இருப்பவர்கள் எப்படியான போக்கினைக் கடைப்பிடிப்பார்கள் என்பதை நாங்கள் தற்போது நேரடியாகப் பார்த்துக் கொண்டு இருக்கின்றோம்.**

# ஆசிரியர்களுக்கான உரிமையும் சலுகைகளும்

**அரசியல் உரிமைகள்**

1970 நவம்பர் 18ம் திகதியில் ஆரம்ப வருடாந்தச் சம்பளம் ரூபா 6,720.00 அல்லது அதற்கு மேலானதான சம்பளம் பெறும் பதவி அணியினர், அரசியல் உரிமை அற்றவர்கள்.

1970 நவம்பர் 18ம் திகதியில் ஆரம்ப வருடாந்த சம்பளம் ரூபா 6,719.00 அல்லது அதற்குக் குறைவான சம்பளத்தை உடைய ஆளணியினர், தற்போது சம்பள உயர்ச்சி காரணமாக பதவி நிலை உத்தியோகத்தர்களாகக் கருதப்பட்டாலும் அரசியல் உரிமை உடையவர்களாவர்.

ஆரம்ப வருடாந்தச் சம்பளம் ரூபா 74160.00 அல்லது அதற்குக் கூடுதலானதாகவும் வருடாந்த சம்பள உயர்ச்சி ரூபா 1560.00 அல்லது அதற்குக் கூடுதலானதாகவும், உள்ள அரச ஊழியர்கள் பதவி நிலை உத்தியோகத்தர்களாவர்.

**பின்வரும் சேவையிலுள்ளவர்களுக்கு அரசியல் உரிமை இல்லை.**

அ. இலங்கை கல்வி நிர்வாகசேவை வகுப்பு I, II, III

ஆ. இலங்கை ஆசிரியர் கல்விச் சேவை வகுப்பு I, II, III

**பின்வரும் சேவையிலுள்ளவர்களுக்கு அரசியல் உரிமை உண்டு**

அ. இலங்கை ஆசிரிய சேவை அனைத்து வகுப்புகளும்,

ஆ. இலங்கை அதிபர் சேவை அனைத்து வகுப்புகளும்.

**அரசியல் உரிமை உடையவர்கள் என்று கூறும் போது, இவ்வாசிரியர்கள்,**

அ. அரசியல் கட்சிகளில் அங்கத்துவம் பெறலாம்.

ஆ. அரசியல் கட்சிகளை உருவாக்கலாம்.

இ. அரசியல் கட்சிகளில் பதவிகளை வகிக்கலாம்.

ஈ. அரசியல் கருத்துக்களைச் சுதந்திரமாக வெளியிடலாம்.

உ. ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல், உள்ளூராச்சித் தேர்தல் போன்ற தேர்தல்களில்

I. போட்டியிடலாம்.
II. பிரசாரம் செய்யலாம்.
III. கருத்துத் தெரிவிக்கலாம்.
IV. துண்டுப் பிரசுரங்கள்.
V. பதாதைகள், சுலோகங்கள், கட்டுரைகள் எழுதலாம், பிரசுரம் செய்யலாம்.
VI. பத்திரிகைகளில், சஞ்சிகைகளில் வெளியிடலாம்.

*குறிப்பு:-*

a. அரசியல் உரிமை உடைய ஆசியர்கள், அதிபர்கள் பாடசாலையை அல்லது வகுப்பறையை அரசியல் களமாகப் பயன்படுத்த அனுமதிக்கப்படமாட்டார்கள்.

b. தேர்தலில் பங்குபற்ற விரும்பும் அரசியல் உரிமைகள் உடைய ஆசிரியர்கள் வேட்பு மனுத் தாக்கல் செய்வதற்கு ஒரு வாரம் முன்னதாகவே லீவில் செல்ல வேண்டும். இதற்காக ஆசிரியர் வேட்பு மனுத் தாக்கல் செய்யும் இறுதித் திகதிக்குப் பத்து (10) நாள் முன்னதாக அதிபர் ஊடாகக் கல்விப் பணிப்பாளருக்கு முன்னறிவித்தல் கொடுக்க வேண்டும்.

c. ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தலில், மாகாண சபைத் தேர்தலில் வெற்றிபெறும் ஆசிரியர்கள், ஆசிரிய பதவியிலிருந்து இளைப் பாற்றப்படுவார்கள்.

d. உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் இளைப்பாற வேண்டிய அவசியமில்லை. ஆசிரிய தொழிலையும் செய்து கொண்டு உள்ளூர் ஆட்சிமன்ற வேலைகளையும் கவனிக்க அனுமதிக்கப்படுவார்கள்.

பாடசாலை நேரத்தில் உள்ளூராட்சிமன்றக் கூட்டங்கள் நடந்தால், அல்லது அவசரத் தேவைகள் இருந்தால், சம்பளத்துடனான விஷேட லீவு வழங்கப்படும்.

e. தேர்தலுக்காக ஆசிரியர் சொந்த லீவையும் பயன் படுத்தலாம். லீவு இல்லாத பட்சத்தில், சம்பளமற்ற லீவு வழங்கப்படும்.

**தொழிற் சங்கத்தில் இணையும் உரிமை**

ஆசிரியர்கள் தாம் விரும்பும் தொழிற்சங்கத்தில் இணையும் உரிமை உண்டு.

ஆசிரியர்கள் விரும்பின் புதிய தொழிற்சங்கம் ஒன்றை உருவாக்கவும் உரிமை உண்டு.

தொழிற் சங்கம் அழைக்கும் போது தொழிற்சங்கப் போராட்டங்களில் பங்கு பற்றும் உரிமை உண்டு.

தொழிற் சங்கக் கருத்தரங்குகளில், செயலமர்வுகளில், பட்டறைகளில் பங்கு பற்றும் உரிமை உண்டு. இவ்வாறு பங்கு பற்றும் போது, கடமை லீவு பெறும் உரிமை உண்டு.

**வி.ரி.சகாதேவராஜா**

**சுதந்திரமாகக் கருத்துத் தெரிவிக்கும் உரிமை**

எவ்விடயம் தொடர்பாகவும் தமது கருத்துக்களை கூட்டங்களில் தெரிவிக்கவும் உரிமையுண்டு.

ஊடகங்களில் வெளியிடவும் உரிமை உண்டு.

எனினும் அரசியல் உரிமை இல்லாத அதிகாரிகள் கட்சி அரசியல் தொடர்பாக கருத்துத் தெரிவிக்க உரிமை இல்லை.

கல்வி, பாடங்கள் தொடர்பான நூல்கள் வெளியிட உரிமை உண்டு. ஆனால் இந்நூலினை வெளியிட முன்னர் பாடநூல் வெளியீட்டுச் சபையின் அனுமதியைப் பெற வேண்டும்.

**பிரசவ லீவு**

பெண் ஆசிரியர்கள் சகல மகப்பேற்றிற்கும் 84 வேலை நாட்களை மகப்பேற்று லீவாகப் பெறும் உரிமை உண்டு.

*குறிப்பு:-*

01. வேலை நாட்கள் என்று கூறும் பொழுது சனி, ஞாயிற்றுக் கிழமைகளும், பொது விடுமுறை நாட்களும் கணக்கிடப்படமாட்டாது.

02. பாடசாலைத் தவணை விடுமுறைக் காலத்தில் உள்ள வேலை நாட்கள், மகப்பேற்று லீவுக்காகக் கணக்கிடப்படும்.

03. மகப்பேற்று லீவை, குழந்தை பிறந்த தினத்திலிருந்து அல்லது பிறந்த திகதிக்கு 14 நாட்கள் முன்னரான ஒரு திகதியிலிருந்து கணக்கிட முடியும்.

04. பிள்ளை பிறந்த நாளில் இருந்து 04 வார காலம் பாடசாலைக்குச் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்.

05. பிள்ளைக்கு (பிறந்த நாளில் இருந்து 06 மாத காலத்திற்கு) தாய்ப்பால் ஊட்டுவதற்காக நாள்தோறும் 1 மணித்தியாலம் லீவு பெறும் உரிமை உண்டு.

06. கர்ப்பம் தரித்து 05 மாத காலத்திலிருந்து மகப்பேற்றுக் காலம் வரை காலையில் 1/2 மணிநேரம் தாமதித்துப் பாடசாலைக்குச் செல்லவும், பாடசாலை முடிவடைவதற்கு 1/2 மணி நேரம் முன்னதாகப் பாடசாலையிலிருந்து வீடு திரும்புவதற்கும் உரிமை உண்டு.

07. இவ்விடுமுறைகள், ஆசிரியையின் வழமையான அமைய லீவு, அல்லது சுகயீன லீவுகளிலிருந்து கழிக்கப்படலாகாது. இவை வழமையான லீவுக்குப் புறம்பான விசேட சம்பளத்துடனான லீவாகும்.

08. பிள்ளை பிறக்கும் போது, அசாதாரண நிலையில் பிறந்து, மகப்பேற்று லீவு முடியும் போதும் தாயின் பாராமரிப்பு அவசியமெனின் அல்லது பிறப்பினால் வேறு நோய் ஏற்பட்டு மகப்பேற்று லீவு முடியும்போதும் தாயின் பராமரிப்பு அவசியமெனின் மேலும் 06 மாதங்கள் சம்பளமற்ற லீவு பெறமுடியும்.

இதற்காக அரசாங்க மகப்பேற்று மருத்துவ நிபுணரின் வைத்தியச் சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டும்.

09. குழந்தை இறந்து பிறந்தால் அல்லது பிறந்து 06 வாரங்களுள் இறந்தால் பிறந்த திகதியிலிருந்து 06 வாரங்கள் சம்பளத்துடனான விசேட லீவு பெறும் உரிமை உண்டு.

10. கர்ப்பம் தரித்த காலத்தில் கருச்சிதைவு ஏற்பட்டால் ஆசிரியை தனது சொந்தச் சுகயீன லீவிலேயே வைத்தியர் சிபார்சு செய்யும் காலத்திற்கு லீவு பெறலாம்.

**போக்குவரத்துச் செலவும் படிகளும**

ஓர் ஆசிரியர் இடமாற்றம் செய்யப்படும் போதும், கடமையின் நிமிர்த்தம் திணைக்களத் தலைவரால் அழைக்கப்படும் போதும், போக்குவரத்துச் செலவுகளையும், ஏனைய படிகளையும் பெறும் உரிமை உடையவர்கள்.

ஆசிரிய பயிற்சிக்காக கலாசாலைக்குச் செல்லும் போதும், ஆசிரிய பயிற்சியின் பின்னர் மீளப் பாடசாலைக்கு நியமனம் பெறும் போதும் ஓர் ஆசிரியர் போக்குவரத்துச் செலவையும், ஏனைய இணைந்த படிகளையும் பெற உரிமை உடையவர்கள்.

இதற்காக வழங்கப்படும் படிகள் பின்வரும் அடிப்படையில் கணக்கிடப்படும்.

| பயண வகுப்பு | வருடாந்தச் சம்பளம் |
|---|---|
| 1ம் வகுப்பு | ரூபா1,00,440.00 க்கு மேல் |
| 2ம் வகுப்பு | ரூபா 77,340.00 க்கு மேலும் ரூபா 1,00,339 க்கு குறைவானதும். |
| 3ம் வகுப்பு | ரூபா 77,339.00 க்கு குறைய |

**புகையிரத ஆணைச்சீட்டு.**

ஓர் ஆசிரியர் விடுமுறைக் காலங்களில் பயணம் செய்வதற்காக வருடா வருடம் 03 சோடி புகையிரத ஆணைச் சீட்டைப் பெறும் உரிமை உடையவர்.

ஆசிரியரின் மனைவி, பிள்ளைகளும் வருடா வருடம் 03 சோடி புகையிரத ஆணைச் சீட்டைப் பெறும் உரிமை உடையவர்கள்.

ஆசிரியரின் பிள்ளைகள் தந்தையின் பராமரிப்பில் இருக்கும் வரை வயதுக் கட்டுப்பாடின்றி, (அவரில் தங்கியிருக்கின்றார்கள் என கிராம சேவையாளரும், பிரதேசச் செயலாளரும் உறுதிப்படுத்தினால்) வருடா வருடம் 03 சோடி புகையிரத ஆணைச் சீட்டைப் பெறும் உரிமை உடையவர்கள்.

ஆசிரியரின் பெற்றோர்கள், திருமணமாகாத சகோதரர்கள் ஆகியோரும் (அவரில் தங்கியிருக்கின்றார்கள் என கிராம சேவையாளரும் பிரதேச செயலாளரும் உறுதிப்படுத்தினால்) வருடா வருடம் 03 சோடி புகையிரத ஆணைச் சீட்டைப் பெறும் உரிமை உடையவர்கள்.

கணவன், மனைவி ஆகிய இருவரும் அரச ஊழியராயின், கணவன் மாத்திரம் இலவசப் புகையிரத ஆணைச் சீட்டைப் பெற முடியும்.

கணவனை விட மனைவி கூடிய சம்பளத் திட்டத்தை உடைய பதவியில் இருந்தால், மனைவியின் சம்பளத்திட்டத்தின் அடிப்படையில் புகையிரத ஆணைச் சீட்டைக் கணவன் பெறமுடியும். இதற்காகக் கணவன், தனது மனைவியின் சம்பள விபரத்தை, மனைவியின் திணைக்களத் தலைவரைக் கொண்டு உறுதி செய்து தனது திணைக்களத் தலைவரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

இலசவப் புகையிரத ஆணைச் சீட்டிற்குரியவரே, அச்சீட்டில் பயணம் செய்யலாம். வேறு யாராவது பயணம் செய்து பிடிக்கப்பட்டால், பயணம் செய்தவரும் ஆணைச் சீட்டைப் பெற்றுக் கொடுத்த அரச ஊழியரும், ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவர்.

புகையிரதத்தில் பயணம் செய்யும் வகுப்பு, ஆசிரியரின் சம்பளத்திற்கேற்பத் கீழ்காணும் அட்டவணையின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

| வருடாந்த சம்பளம் | இணைந்த படிகள் |
|---|---|
| ரூ.57720 மட்டும் | ரூபா 150 |
| ரூ.57721லிருந்து ரூ.81300 வரை | ரூபா 180 |
| ரூ.81301லிருந்து ரூ.133440 வரை | ரூபா 230 |
| ரூ.133441க்குமேல் | ரூபா 280 |

*குறிப்பு :-*

01. 01.01.2004ம் ஆண்டு முதல் இன்றுவரை நடைமுறையில் இருக்கும் சம்பளத்திட்டத்திற்கு அமைவாக மேற்படி அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது.

02. எனினும், 01.01.2004க்கு முன்னரான திகதியில், ஓர் ஆசிரியர், 1ம் அல்லது 2ம் வகுப்புப் புகையிரத ஆணைச் சீட்டைப் பெற்றிருந்தாராயின், அவர் தொடர்ந்தும் அவ் வகுப்புக்குரிய ஆணைச் சீட்டைப் பெறலாம்.

> **“பிள்ளை பிறக்கும் போது, அசாதாரண நிலையில் பிறந்து, மகப்பேற்று லீவு முடியும் போதும் தாயின் பராமரிப்பு அவசியமெனின் அல்லது பிறப்பினால் வேறு நோய் ஏற்பட்டு மகப்பேற லீவு முடியும்போதும் தாயின் பராமரிப்பு அவசியமெனின் மேலும் 06 மாதங்கள் சம்பளமற்ற லீவு பெறமுடியும்”**

## காஷ்மீர் பிரச்சினை சல்மான் ருஷ்டியினால் நாவலாகிறது

காஷ்மீர் பிரச்சினையை மையமாகக் கொண்டு தனது புதிய நாவலைப் படைத்துள்ளார் சர்ச்சைக்குரிய எழுத்தாளர் சல்மான் ருஷ்டி.

‘சாத்தானின் வேதங்கள்’ என்ற நாவலால் முஸ்லிம் மக்களிடம் சலசலப்பை ஏற்படுத்தி, ஈரான் முஸ்லிம் மதத் தலைவர்களால் மரண தண்டனை விதிக்கப்பட்டவர் சல்மான் ருஷ்டி. சர்ச்சையில் சிக்கிக் கொள்வதை சர்க்கரைப் பொங்கலாக விரும்பும் இவர், தனது புதிய நாவல் மூலமாக மீண்டும் (சர்ச்சை) களம் புகுந்துள்ளார்.

லண்டன் வாழ் இந்தியரான சல்மான் ருஷ்டி, முதன் முதலாக காஷ்மீரை கதைக்களமாகக் கொண்டு, ‘சாலிமார் திகிளவுன்’ என்ற புதிய நாவலை எழுதியுள்ளார். பூலோக சொர்க்கமான காஷ்மீரில் தற்போது வன்முறையும், மத தீவிரவாதமும் தலை விரித்தாடுகிறது. இதை எனது நாவல் உலகம் முழுவதும் உள்ள மக்களுக்கு தெரிவிக்கும்.

‘சாலிமார் என்ற மென்மையான சிறுவனின் வாழ்வில் நிகழும் சம்பவங்கள், அவனை எவ்வாறு வன்முறைப் பாதைக்குத் தள்ளுகிறது’ என்பதே அந்த நாவலின் கதையாகும். ‘அல்சிகுவைதா’ போன்ற தீவிரவாத அமைப்புகளில் சேர ஒவ்வொரு மனிதனும் ஆர்வம் காட்டுவதற்கான காரணத்தை நாவலில் விளக்கி உள்ளதாக ருஷ்டி கூறுகிறார்.

லண்டன் தொடர் குண்டு வெடிப்பு குறித்து கூறும்போது, ‘இங்கிலாந்து 20 வருடங்களுக்கு முன்பே தவறு செய்து விட்டது. மதத் தீவிரவாதிகளை அப்போதே தனது நாட்டில் அனுமதித்து விட்டது’ என்றார். 1989ல் ருஷ்டிக்கு எதிராக மரண தண்டனை விதித்தபோது, அதை பெரும்பாலான இங்கிலாந்து முஸ்லிம்கள் வரவேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தனது சிறு வயது ஞாபகங்களில் மூழ்கும் ருஷ்டி, ‘இந்து, சீக்கிய மற்றும் முஸ்லிம் மக்கள் அனைவரும் ‘தாங்கள் காஷ்மீரிகள்’ என்ற உணர்வோடு காஷ்மீர் மாநிலத்தில் ஒற்றுமையாக மகிழ்ச்சியுடன் வாழ்ந்தனர்’ என்று குறிப்பிடுகிறார்.

தனது புதிய நாவலை அந்த முன்னோர்களுக்கு சமர்ப்பிப்பதாகக் கூறி உள்ளார். மீண்டும் சர்ச்சையை துவக்கி உள்ள ருஷ்டி, அடுத்த நாவலை சிறுவர்களுக்காக எழுதப் போவதாகவும் அறிவித்துள்ளார்.




## சுவடுகள்

ஊரெல்லாம் உறங்க
எங்கும் நிசப்தம் எதிலும் அமைதி
ஆனால்
தெருவினில் ஒரு வீட்டில்
வழியெல்லாம் விழி நோக்க
காத்துக் கிடக்கின்றன
அப்பாவி உள்ளங்கள்
ஏனென்றால்
பொருளாதாரம் தேடப்
புறப்பட்டவன்
வீடு திரும்புவான் என்று
அன்று தான் மடல் வந்தது
இன்று நான் வருவேனென்று
என்றைக்கும் அவன் வரமாட்டான்
வந்தவிடம் சென்று விட்டான்
அதுதான்
காலம் மாறிப் போச்சுதே
இன்று எதற்கும்
உத்தர வாதமில்லை
வேதனை தான்
வாழ்வின் சோதனை

*கோ.சந்திரிகா*
*சது.அன்னமலை*
*மகாவித்தியாலயம்*

## மௌனத்தால் கொல்லாதே

உன் கண்ணீரால்
என்னை அழவைக்காதே!
உன் காயங்களால்
என்னை நோகடிக்காதே!

உன் பார்வைகளால்
என்னை உருக்காதே!
உன் வார்த்தைகளால்
என்னைப் பயமுறுத்தாதே!

உன் புன்னகையால்
என்னைத் திருடாதே!
உன் அழகினால்
என்னை மயக்காதே!

உன் மௌனத்தால்
என்னைக் கொல்லாதே!

*காத்தநகர் இளங்கவி*
*அப்துல் கையூம்.*

## புனித யுத்தம்

புனித யுத்தம் ஒன்று நம்மை
நாடி வருகுது - எமக்குப்
புத்துணர்வை ஊட்ட அது
தேடி வருகுது!
மனிதனாக இந்த மண்ணில்
வாழவேண்டும்
நாம் - என்றும்
மானமுள்ள சாதியாக
வாழவேண்டும்!
ஆம்.....!
அடிமையாக இந்த மண்ணில்
நாளும் வாழ்வதா?
ஏன்.....?
அநாதையாக நொந்து இங்கு
நாமும்
வீழ்வதா?
இடியுதைகள் பட்டதெல்லாம்
போதும் நில்லடா
இனி எமதுபதி காக்க வேண்டும்.
விரைந்து செல்லடா.

*'கவிப்புயல்'*
*எஸ்.எம்.றம்ஸி*
*காத்தான்குடி - 06.*

## மனிதனாகவே வாழ்

மெய்ஞானம் விஞ்ஞானம் இருந்தென்ன பயன்
நஞ்சான அஞ்ஞானம் மனிதனில் இருந்தால்
எங்கும் சூழலை சுத்தமாய் வைத்திருக்கத் தவறின்
தங்கு தடையின்றி பரவும் டெங்கு நோய்.



புகைத்தலை பகைத்தலே சிறப்பு தவறின்
வதைத்திடும் பல பிணி பிடித்து இறப்பு.
எந்நோக்கிலும் உன்னோக்கு நன்னோக்கே
அந்நோக்கில் வீண்நோக்கை பின்தள்ளு.

இருவருக்குள் அருவருக்கா உறவுகொள் மகிழ்ச்சி அதில்
ஒருவருக்கு அருவருத்தால் விலகிக்கொள் மகிழ்ச்சி.
லஞ்ச ஊழல்வழி மனிதனின் இழிச் செயல்
நெஞ்சும் தளரா தலை நிமிர்ந்து பேசமுடியா அச்செயல்.

நாற்பத்தெட்டில் வாங்கிய நாட்டில் எண்பத்தெட்டு கட்சிகள் உருவாகி
தொண்ணூற்றெட்டுபிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது எப்போது.
பெண்ணுரிமை கேட்பதனால் ஆணுரிமை அழிவதில்லை அதற்கு
முன்னுரிமை கொடுத்துவிட்டு பெண்ணை வீண் அடிமை ஆக்காதே.

*ஐ.ஏ.ஹசன்*
*மருதமுனை - 03.*

## கலைந்து போன காவியம்

பூஜைக்கு மலராகும்
நாள் வரை நீ
எனக்காக இருந்ததால்
இதயத்தில் உன்னை
ஆழமாய்ப் பதிந்து
கொண்டேன்!

அது போல் நீயும்
உன் இதய மாளிகையின்
வாயிலைத் திறந்து
பார்வையால்
என்னை அழைத்ததையும்
அறிந்து கொண்டேன்.
உன் பார்வை பட்டதும்
வெண் சாமரமாய் என்
இமைகள் அடித்துக்
கொண்டன
என்னுள் நீ!

கல் வெட்டில்
பொறிக்கப்பட்டதாய்
உணர்ந்ததும் இறக்கை
முளைத்துப் பறந்தேன் உன்
பெயரை கோடிமுறை சொல்ல
என் காதுகளில் தேனருவி
பாய்ந்தது!

கோபுரமாய் உயர்ந்த காதல்
உன் பெற்றவளின்
பேராசையின் முன் மணல்
மேடாகியதே
கனாக் கலைந்து
மேகங்களானதே!
இன்றோ நாமிருவரும்
இரு துருவங்களாய் ஆனாலும்
உன் பெயரிலே
இதயம்துடித்துக்
கொண்டிருப்பதை
மீண்டும் ஒருமுறை
என் மனதில் நுழைந்து பார்.....

*கலைப்பூங்கா*
*கே.எல்.ஹில்மி*
*சாய்ந்தமருது - 13.*

## பௌர்ணமிக் கிராமம்

கூனற் பிறையில்
புதைந்திருக்கும் பௌர்ணமி
எறியங்களை வீசி
சிரிக்கத் தொடங்கிற்று
எம் கிராமத்தில்......

மீன்பிடி வள்ளங்கள்
ஓய்வெடுக்கும் காலம்
வெள்ளொளிபட்ட
காக்கையின் கூடுகளில்..
தாலாட்டுச் சத்தங்கள்
ஆரம்பித்து விட்டது.
குயவனின் முற்றம்
களிமண்ணில்
உருக்கொடுக்கும் தருணம்
சட்டியும் பானையும்,
உலைமூடியுமென்று

கரைகளைத்தேடி
கடுகதி செய் - கால்கள்
சாமம் முடியும்வரை....
குதூகலித்திருக்கும்
கூட்டம் கூட்டமாக...

நீண்டு போன விடியலும்
ஆயுள் கூடிய தூக்கமும்
எம் கிராமத்தின்........
கீர்த்தனைகளாயிற்று
பௌர்ணமிப் பொழுதின்
தடயங்களாய்......

*செயின் தம்பி ஸியாம்*
*கல்முனை - 06.*

## கல்வி

கல்வி கற்கும் போது கசப்பு
கற்றபின் அதுவே நமக்குச் சிறப்பு
கல்வி இல்லாவிடில் எம் வாழ்வு கறுப்பு
கற்க வேண்டும் தினம் உன் பொறுப்பு

எல்லா அழகும் அழகல்ல கல்வி அழகே
அழகு
எடுக்க எடுக்க குறையாத கல்வி
ஏணி போன்று எம்மை உயர்த்தி
வைத்திடும் கல்வி
ஏழைகளின் வாழ்வை ஒளியேற்றிடும்
இலவசக் கல்வி

ஐம்பூதங்களினால் என்றும் அழியாத
செல்வம் கல்வி
ஐயறிவோடு ஆறறிவு விருத்திக்குத்
தேவை கல்வி
அறிவு, திறன், மனப்பாங்கு
விழுமியங்கள் போதிப்பது கல்வி
அயல் நாடுகள் சென்று பொருள் தேட
உதவும் ஆங்கிலக் கல்வி

*செல்வி:-கோ.ஸந்திரிகா*

## ஒருதலைக் காதலன்

முள்ளில் மலர்ந்திருந்தால்
பறித்திருப்பேன்
என் இதயத்தில்
நீ மலர்ந்து விட்டாய்...!



ஆனால் உன் இதயத்தில்
நான் மலரவில்லை
ஒரு கயவன்.....
மலர்ந்து விட்டான்
அதனால்த்தான்
அழுகின்றேன்....!

இறைவா!
வேறு எவனையேனும்
நல்லவனாய்
என்னவளின்
இதயத்தில்
மலரவை
இறக்கும் வரை
உன்னை நான்
மறக்க மாட்டேன்.

*கே.எம்.கதீஸ்*
*சித்தாண்டி.*

## எதை நான் சொல்வேனம்மா?

ஓலக் குரல்களுடன்
ஓடிய
கதை
சொல்லவா?

உப்பு நீரில்
மூச்சுத் திணறிய
கதை
சொல்லவா?



ஒன்றுமறியாத
பாலகர்கள்
மிதந்த
கதை
சொல்லவா?

கற்பினிப் பெண்கள்
கதறிய
கதை
சொல்லவா?

இளம் குமரிகளின்
பரிநிர்வாணக்
கதை
சொல்லவா?

கிணற்றுக்குள்
தாயும் மகனும்
மாண்ட
கதை
சொல்லவா?

என்
தாய் பிரிந்த
கதை
சொல்லவா?

*மருதமுனை முனாஸ்.*

## ஓயாத காதல் அலை

நெஞ்சினில் வரும் காதல்
வலி
இயற்கையில் வரும்
சூறாவளி போன்றது
காதலால் கண்களில்
வரும் கண்ணீர்
இயற்கையில் வரும்
சுனாமி போன்றது.

துமனிராஜா
முகத்துவாரம்
மட்டக்களப்பு.

## விரைந்து வா!

அன்பே சகியே!
என்று சொன்னதிற்காக
நான் உன்னை
விரும்பவில்லை!

என்னுள்ளத்தில் - நீ
குடிகொண்டு விட்டாய்
என்னிதயம் எப்போதும்
உன்னையேதானே
நினைக்கின்றது!

அன்பனே - நான்
உன்னோடு வாழ
நினைக்கின்றேன்!

ஒருவேளை அது
முடியாமல் போனால்;
என்னுள்ளத்தில் உன்னை
ஒட்டிவைத்து பூஜிப்பேன்!.



ஒரேயொரு நாள் உன்னோடு
வாழ்ந்தால் போதும்;
என் வாழ்க்கையில்
எல்லாவற்றையும்
பெற்று விடுவேன்!

என்னுயிரே! மறுப்பு
ஏதும் சொல்லாதே!
என்னை மணந்து கொள்ள
விரைந்து வா!

*தினகரன் முரளிதரன்*
*சங்கமன் கிராமம்.*

## உயிர்

வானத்தில் இருக்கும்
நீலத்தைப் பிரித்து விட்டால்
வானமே இருக்காதடி
தோழி!

உன்
உடலில் இருக்கும்
என்னை - நீ!
பிரித்து விட்டால் - உன்
உடல் இருக்கும்
என் உயிர் இருக்காதடி
தோழி!

*வ.ருஷாந்தன்*
*கடற்கரை வீதி*
*தாண்டியடி.*

## தயாராகுங்கள் அத்தானே



அத்தானே
அம்மணியின்
அராஜக இராணுவ
சிப்பாயே...
எத்தனை நாள்
எம்மண்ணில்
இப்படி நீ
வாழுவது...?
வல்லரக்கன்
அமெரிக்கன்
வார்த்தெடுத்த
குண்டு ரவை
இப்போது
எம் கரத்தில்
ஏராளம் தாராளம்.
செத்துப் பிணமாக
செதுக்கிய பெட்டிகளில்
தலை நகர் பார்க்க
தயாராகுங்கள்
அத்தானே.

*எருவிலூர்*
*ஏ.ந.மூர்த்தி.*

## புரட்சி செய்

தட்டிக் கேட்பது தர்மம்
அதட்டிக் கேட்பது
அதர்மம்
ஆனால் இங்கு எல்லாம்
மாறிக்கிடக்குதே!
யார் கொண்ட கர்வம்.

புரட்சி செய்வது
தப்பென்று
அந்த புதன் கூட
சொன்னதில்லை.

தமிழா! அடங்கி நீ
அடிமையாக..
ஒதுங்கி நீ.
கோழையாக வாழ்வது
வேண்டாம்
வாழ்கை
அதை மாற்றி
அமைத்திடுவோம் வா!

*ச.உ.தயராஜ்*
*திக்கோடை.*

## மாவீரர்கள்

மாவீரர்கள்
எம் மண்ணில்
விழுந்த விதைகள்
மானத்தோடு
தமிழன் வாழ
தம்மை வித்திட்ட
மறவர்கள்
மங்காப் புகழ் பெற்ற
மாபெரும்
காவியங்கள்



மானசீகக் குருவாய்
எம் தலைவர் வழி
தொடர்ந்து
மற்றவர்கள்
வாழ்வதற்காய்
தம்மைத்
தியாகித்தவர்கள்
மண்ணில்
உயிர் வாழ்க்கை
இருக்கும் வரை
மாவீரர்கள் புகழும்
மங்காது மறையாது
நிலைத்திருக்கும்.



*த.நந்தினி*
*கரடியனாறு.*

## கவியே அவள்

என் காதலி
கவிதை எழுதச் சொன்னாள்.....
நான் எழுதினேன்.
அவளின் பெயரை....
'என்ன என் பெயரை எழுதுகிறாய்
கவிதை எழுதச் சொன்னால்' என்றாள்
அவளின் பெயரே
எனக்கோர் கவிதை என்பது
அவளுக்குத் தெரிய நியாயமில்லை
தானே.

*தி.சுதேஸ்*
*சங்கமன் கிராமம்.*

# தென்னிலங்கையே அதிகம் கவனிக்கப்படுகிறது

## 'தப்ரன்' அதிகாரி சுசிலா பெரேரா பகிரங்கமாக கூறினார்

''இலங்கையில் சுனாமிப் பாதிப்பில் 2/3 வீத சேதம் வடகிழக்குப் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ளது. தெற்கில் 1/3 பங்கு சேதமே ஏற்பட்டது. அது உலகறிந்த விடயம். ஆனால் துரதிஸ்ட வசமாக வடகிழக்கை விட தெற்குப் பிரதேசத்திலே கவனம் கூடுதலாக செலுத்தப்பட்டுள்ளது. இது ஒரு பாரிய பிரச்சினையே. அதற்காகவே கொடையாளி அமைப்புக்களை ஒழுங்கமைத்து தளத்தை ஏற்படுத்தி சீரமைக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்'' இவ்வாறு ''தப்ரன்'' (TAFREN) தேசத்தை மீளக்கட்டியெழுப்பும் விஷேட செயலணியின் உயர் அதிகாரி திருமதி.சுசிலா பெரேரா கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற மக்கள் நீதிமன்றத்தில் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் பேசுகையில்:-

''அரசாங்கம் கொள்கைகளை உருவாக்கலாம், நடைமுறைப்படுத்தலாம். எனினும் மக்களின் குறைநிறைகள் கேட்கப்பட்டு அதன்படி அமுலாக்காவிட்டால் எந்தக் கொள்கையிலும் நன்மையில்லை. உரிய பயன் கிடைக்காது போகும். இலங்கை ஒரு போதும் கண்டிராத இயற்கைப் பேரழிவு இது. அதனை மீட்டெடுப்பது என்பது சதாரண காரியமல்ல. அதாவது சுனாமித் தாக்கத்திலிருந்து மக்களை மீட்டெடுப்பதென்பது மிகவும் பாரிய விடயம். திசைமுகப்படுத்துவது சிரமம். அப்பெரும் பணியை ஓரளவு இலகுவாக்கவே ''தப்ரன்'' எனும் விஷேட செயலணியை அரசாங்கம் உருவாக்கியுள்ளது. அவசர நிலையிலிருந்து மக்களை மீட்டல், இடைக் காலத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல், சேத மதிப்பீடு மேற்கொள்ளல் போன்ற பல பாரிய பணிகளை இத் ''தப்ரன்'' அமைப்புச் செய்தது.

இவற்றை ஒழுங்கு செய்து அமுலாக்கலில் சிக்கல் இருந்தன. மக்களை மீளக் குடியேற்றுவதே முதல் பணியாகும். நகர அபிவிருத்தி அதிகாரசபை, சுனாமி வீடமைப்பு புனர்வாழ்வுக்குழு என்பன கொடையாளிகளின் நன் கொடையுடன் இயங்கத் தொடங்கின. சுனாமிக்கு முன்பு அந்த மக்கள் என்ன ஜீவாதாரத் தொழிலை செய்தார்கள் என்பதை இனங்கண்டு அதற்கேற்ப வாழ்வாதார உதவிகளைச் செய்யவேண்டியுள்ளது. இம் மதிப்பீட்டை செய்ய கால அவகாசம் எடுத்தது.

அரசாங்கம் மக்களுடன் சகல விடயங்களையும் பகிர்ந்து கொண்டு மீட்புப் பணிகளைச் செய்தது. துரதிஸ்டவசமாக சில மக்களுக்கு அத்தகவல்கள் போய்ச் சென்றடையவில்லை. முல்லைத்தீவிலே யூ.என்.டி.பி.யுடன் இணைந்து வீதி அபிவிருத்தி வேலைகள் இடம் பெறுகின்றன.

20 வருடங்கள் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை சுனாமி தாக்கியுள்ளது. இதில் சமத்துவத்தை ஏற்படுத்த வேண்டியுள்ளது. தரவுத் தளம் அமைக்கப்பட்டு வருகிறது. 1000 அரசசார்பற்ற நிறுவனங்கள் முளைத்துள்ளன. சில நன்றாக இயங்குகின்றன. சில ஜேப்படி வேலைகளில் ஈடுபடுகின்றன. நிதிக்கு என்ன நடக்கிறது என்பதே தெரியாமலுள்ளது. ''தப்ரன்'' அமைப்பிற்கும் நிதிக்கும் ஒருவித தொடர்புமில்லை. நாம் ஒரு சதத்தைக் கூட கையாள்வதில்லை. நாம் மீள் பணிகளை ஒழுங்கமைப்பதே பிரதான தொழிலாகக் கொண்டுள்ளோம் என்றார்.

மீள் கட்டமைப்புப் பணி தொடர்பாக கேள்வி கேட்கலாமென அறிவிப்பாளர் சபையில் கூறினார். கண்டி மனித அபிவிருத்தித் தபானம் சார்பில் அம்பாறையில் இருந்து கலந்து கொண்ட விரி.சகாதேவராஜா மூன்று வினாக்களைத் தொடுத்தார்.

01. பாதிக்கப்பட்ட அனைவருக்கும் தொடர்ந்து 6 மாதங்கள் ரூபா 5000.00 விஷேட கொடுப்பனவு வழங்கப்படுமென அரசாங்கம் கூறியிருந்ததும். அரச ஊழியர்க்கு இரண்டு மாதத்துடன் அவை நிறுதப்பட்டிருப்பது ஏன்?

02. இனமதபேதமற்று சுனாமி தாக்கியது. ஆனால் நிவராணங்களிலும். பாதுகாப்பு வலயம் ஏற்படுத்துதலிலும் பாரபட்சம் காட்டப்படுவது ஏன்?

03. வீடமைப்பு நன்கொடை வழங்குவதில் அநீதி. ஊழல் இடம் பெற்றுள்ளதாகக் கூறியும். உரியவர்களுக்கு நீதி வழங்கப்படாதது ஏன்?

பதிலளித்த அதிகாரி சுசீலா பெரேரா ரூபா 5000.00 விவகாரம் எமக்குரியதல்ல. நிரந்தர வருமானம் ஒன்றிருப்பதால் அப்படி நிறுத்தினார்களோ தெரியாது'' என்றார். இடைமறித்த அம்பாறை பிரதிநிதி ''அப்படியானால் முதலிரு கொடுப்பனவுகள் ஏன் வழங்கப்பட்டது? என்று கேட்க இது எம்முடன் தொடர்புடையதல்ல எனக் கூறினார்.கடலோரப் பாதுகாப்பு வலயம் தொடர்பாகப் பேசுகையில் கிழக்குக் கரையோரம் பொதுவாக சூறாவளி போன்ற இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்படுவதால் மக்கள் நன்மை கருதி 200 மீற்றராக பிரகடனம் செய்தோம் என்றார்.

''அப்படியெனின் கல்முனைக்கு மட்டும் 100 மீற்றர் எப்படி வந்தது? கல்முனை தெற்கிலா உள்ளது? என அம்பாறை பிரமுகர் மீண்டும் கேள்வி தொடுக்க அதிகாரி மௌனித்தார். ஊழல், அநீதி வீடமைப்பு நன் கொடை வழங்கலில் இடம் பெற்றிருந்தால் அரச அதிபருடாக முறைப்பாட்டை அனுப்பி வைக்கமுடியும் என்றார்.

ஹம்பாந்தோட்டையைச் சேர்ந்த பெண்மணி அஞ்சலா கேள்வி கேட்கையில் வாடகை வீட்டிலிருந்தவர்களுக்கு எந்த நிவாரணமோ, கொடுப்பனவோ கிடைப்பதில்லை. சுனாமியில் அழிந்தது வாடகைக்கு இருந்தவரின் சொத்துக்களே. இந்நிலையில் அவருக்கு நிவராணம் மறுக்கப்படுவது ஏன் என்றார். பதிலளித்த சுசீலா பெரேரா அது தொடர்பான தரவுகளைச் சேரித்து வருகிறோம். கிடைத்ததும் பரிசீலனை செய்வோம். என்று கூறினார்.

அமைப்பின் தலைவி கலாநிதி நிமல்கா பெர்ணாண்டோ தலைமையில் அம் முழுநாள் நிகழ்வு வெற்றிகரமாக நடைபெற்றது. அவர் தலைமையுரையாற்ற கண்டி மனித அபிவிருத்தித் தாபனப் பணிப்பாளர் பி.பி.சிவப்பிரகாசம் நிகழ்ச்சி பற்றிய விளக்கவுரை நிகழ்தினார். மக்கள் மன்றத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் சாட்சியமளித்தனர். அங்கு ஏற்படுத்தப் பட்டிருந்த மக்கள் நீதிமன்றத்தில் (peoples tribunal) ஓய்வு பெற்ற நீதிபதி ஜி.தீரரத்ன மற்றும் அறிஞர்களான சுசில் ஸ்ரீவர்த்தன, பத்மினி விஜேசூரியா, வாசுதேவ நாணயக்கார, பேராசிரியர் எஸ்.மூக்கையா, சரோஜா சிவச்சந்திரன், லலித் திசாநாயக்க ஆகியோர் நீதிபதிகளாக அமர்ந்திருந்தனர். மூன்று பாஷைகளையும் ஒரே நேரத்தில் மொழி பெயர்த்து வழங்க மூத்த மொழி பெயர்ப்பாளர் கே.ராகுலன் தலைமையிலான குழுவினர் அமர்த்தப்பட்டிருந்தனர்.

மண்டபத்தினுள் கண்டி மனித அபிவிருத்தித் தாபனத்தின் செயற்பாடுகளைப் பிரதிபலிக்கும் புகைப்படக் கண்காட்சி மகளிர் அணித் தலைவி பி.சிவப்பிரகாசம் லோகேஸ்வரி, பிரமுகர் நடராஜா தலைமையில் நடை பெற்றது; மாவட்ட இணைப்பாளர் பி.ஸ்ரீகாந் ஏற்பாட்டாராக விருந்தார். சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு மாகாணங்களைச் சேர்ந்த 100 க்கும் மேற்பட்டோர் வருகை தந்திருந்தனர். 21பேர் சாட்சியமளித்தனர். தேசத்தை மீளக் கட்டியெழுப்பும் செயலணி (தப்ரன்) சார்பில் உயரதிகாரி சுசீலா பெரேராவும் சமூகமளித்திருந்தார்.

அங்கு சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களிடமிருந்த வீடமைப்பு, வாழ்வாதாரம், உட்கட்டமைப்பு, நிவாரணம், கல்வியும், சிறுவரும் போன்ற பல்வேறு தலைப்புகளின் கீழ் மக்களின் கருத்துக்கள் பெறப்பட்டன. சில பெண்கள் பேசும்போது அழுது புலம்பத் தொடங்கி விட்டனர். அது சபையோரின் உள்ளங்களை நெகிழச் செய்தன.

**(விரி.சகாதேவராஜா)**

இடதுசாரி அமைப்பின் தலைவர் வாசுதேவ நாணயக்காரவும் சமூகமளித்திருந்தார். அவரது துணைவியார் கலாநிதி நிமல்கா பெர்ணாண்டோதான் இப் பெறுமதியான ஒன்று கூடலுக்கு வித்திட்டவர் எனலாம். வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என்று மாறிமாறி சகல பிரதேசங்களைச் சேர்ந்த பிரமுகர்களும் சாட்சியமளித்த போது ஓர் உண்மை வெளிச்சத்திற்கு வந்தது.

எட்டு மாதமாகியும் இன்னும் மக்கள் கண்ணீரும், கம்பலையுடன் தற்காலிக இடைத்தங்கல் முகாம்களில் வேண்டாவெறுப்பாக காலத்தைக் கடத்தி வருகிறார்கள் என்ற உண்மை தெரிந்தது. இரண்டாவது, வடக்கு, கிழக்கில் மட்டுமல்ல தெற்கு மற்றும் மேற்குப் பகுதிகளிலும் கூட குறைபாடுகள், பிரச்சினைகள், புறக்கணிப்புகள் இருக்கின்றன என்ற உண்மையும் கூடவே வெளிப்பட்டன.

அதற்கு அவர்கள் வழங்கிய பிரத்தியட்சமான சாட்சியங்கள் சான்று பகருகின்றன. கண்டி மனித அபிவிருத்தித் தாபனத்தின் பணிப்பாளர் பி.பி.சிவப்பிரகாசம் அங்கு தமிழில் பேசுகையில் இலங்கையின் 950 கிலோ மீற்றர் தூர கடற்பரப்பை சுனாமி சூறையாடியிருக்கிறது. சுமார் 30 ஆயிரம் உயிர்களை சுனாமி பலியெடுத்திருக்கிறது. ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டோர் இடம் பெயர்ந்துள்ளனர்.

இன்று எட்டு மாதங்களாகியும் இன்னும் அடிப்படைப் பிரச்சினை கூட தீர்த்து வைக்கப்படாத அவலநிலை உள்ளது. இதனை சம்பந்தப் பட்டவர்கள் நேரடியாக அதுவும் தலைநகர் கொழும்பில் வெளிப்படுத்த வேண்டும். அதுவும் படித்த நீதிபதிகள் முன்னிலையில் உத்தியோக பூர்வமாக வெளிப்படுத்தப்பட்டு தீர்ப்புகளை அரசாங்கத்திற்கும், சர்வதேச நிதி நிறுவனங்களுக்கும் சமர்ப்பிப்பதே எமது இந்த ஒன்று கூடலின் நோக்கம் என்று கூறினார்.

*கிண்ணியாவைச் சேர்ந்த எம்.ஏ.எம்.மஜீட் அங்கு உரையாற்று கையில்:-*

'' சுனாமி நிவாரணம் வழங்கலில் பலமுறைகேடுகள், ஊழல்கள் நடக்கின்றன. மீன்பிடிவள்ளங்கள் உரியவர்களுக்குச் சென்றடைவதில்லை. சுனாமியின் பின்பு எமது பகுதியில் 50 அரசசார்பற்ற நிறுவனங்கள் தோன்றியுள்ளன. அவை மக்களுக்குச் சேவைசெய்வதைவிட தங்களை வளப்படுத்துவதில் முனைப்புக் காட்டியுள்ளனர். தற்காலிக கொட்டிகள் ஒரு மாதம் கூட தாக்குப் பிடிக்காமல் உடைகின்றன. அரிசி, மா, பருப்பை விடுத்து வேற எதனையாவது கொடுங்கள்'' என்றார்.

*மாத்தறையைச் சேர்ந்த சுஜாதா கூறுகையில்:-*

நான் முன்பள்ளிப் பாடசாலை நடாத்துபவர். அன்று 20 குழந்தைகளைக் காப்பாற்றினேன். எமது பகுதியிலுள்ள 10 முன்பள்ளிப் பாடசாலைகள் சுனாமியால் சீரழிந்துள்ளது. இன்றும் மீளக்கட்டியெழுப்பபடவில்லை. இதனால் கல்வி பாதிக்கப்பட்டுள்ளது என்றார்.

*கொழும்பு அங்குலான தயாஹேரத் பேசுகையில்:-*

''எமது முகாமில் 110 குடும்பங்கள் வாழ்கின்றன. எமக்குரிய ரூபா 5000.00 நிறுத்தப்பட்டுள்ளது. அனைவரும் பாதிக் கப்பட்டவர்களதானே. நிவாரணத்தை கட்சி நிறத்தில் தருவதாலும் பிரச்சினை ஏற்படுகிறது என்றார். மாத்தறையைச் சேர்ந்த சட்டத்தரணி ஏ.சுரவீர பேசுகையில்:-

''எனது வீடு, சொத்து அனைத்தும் அழிக்கப்பட்டு விட்டது. இதுவரை எனக்கு எந்த நிவாரணமும் கிடைக்கப்பெறவில்லை. எனக்குக் கீழ் சட்டத்தரணிகள் உள்ளனர். 8 மாதங்கள் கடந்து விட்டன. பிறப்புப் பத்திரமோ, அடையாள அட்டையோ, சாரதிலைசன்ஸ் பத்திரமோ இன்னும் கிடைக்கப்பெறவில்லை. அமர ஒரு கதிரை கூட இல்லாமல் இருக்கிறேன்''. என்றார்.

*காலியைச் சேர்ந்த மகேஷ் கந்தரகே பேசுகையில்:-*

''பகலில் கொடிய வெயில் வாட்டுகிறது. இரவில் நுளம்பு, கடல் இரைச்சலைக் கேட்டால் பிள்ளைகள் நடுங்கி ஓடுகின்றனர். எமக்கு அடிப்படைத் தேவை நிரந்தர வீடொன்றே என்றார். முல்லைத்தீவு கொக்கிலாயைச் சேர்ந்த மார்க்ரம் பெர்ணான்டோ பேசுகையில் ''சுனாமிக்கு பிற்பாடு எந்த நிவாரணமும் இன்றி கஷ்டத்தின் மத்தியில் வாழ்ந்து வருகிறோம்'' என்றார்.

*யாழ்ப்பாணம் வடமராட்சியைச் சேர்ந்த சகாயராணி பேசுகையில்:-*

''இரு குழந்தைகளுடன் சந்தோஷமாக வாழ்ந்து வந்தேன். யுத்தத்தால் ஓரளவு பாதிக்கப்பட்டிருந்த போதிலும் சுனாமி என் கண்முனனே எனது இரு குழந்தைகளையும் பறித்துச் சென்றது. கடல் மூன்று முறை எம்மைத் தாக்கியழித்தது. எனது அம்மா, அப்பா என்று பலரும் கடலில் அடித்துச் செல்லப்பட்டனர். எதனையும் மறக்க முடியாது. யாரிடம் சொல்லி அழ? வீடு இருந்த இடமும் இல்லை. சுனாமி தாக்கி 8 மாதங்களாகியும் இன்னும் சரியான நிவாரணம் இல்லை'' என்றார்.

மட்டக்களப்பு எகெட் பிரதிநிதி அன்வர் ருஷான் பேசுகையில் ''கோறளைப் பற்று பிரிவிலுள்ள காவத்தைமுனை, தியாவட்டவான், மைலங்கரைச்சி, வாழைச்சேனை பகுதிகள் சுனாமிப் பாதிப்புப் பிரகடனம் செய்யப்பட வில்லை. 1956 இல் வன்முறை. 1978இல் சூறாவளி, பின்பு இனவன்முறைகள். 2004 இல் சுனாமி என்று அடிக்குமேல் அடி தொடர்ந்து கொண்டு தான் போகின்றன'' என்றார். அம்பாறை மாளிகைக்காடு எம்.எஸ்.எம்.ஹக்கீம் பேசுகையில் ''குறுகிய அரசியல் லாபம் கருதி அரசியல்வாதிகள் செயற்படுவதனால் நிவாரணம் சீராக வழங்கப்படவில்லை. ஜே.வி.பியின் சுனாமி நிவாரணம் உள்நோக்கத்தைக் கொண்டது.

அவசரகாலச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதன் காரணமாக மாலை 6.00 மணிக்கு மேல் நடமாட முடியாத சூழ்நிலை நிலவுகிறது அடையாள அட்டை கேட்கிறார்கள். இது நியாயமா? தென்பகுதிக்கு உதவிகள் கூடுவதேன்? பொதுக்கட்டமைப்பு எங்கே? என்று கேள்வி எழுப்பினார் காரைதீவைச் சேர்ந்த விதவை செல்வநாயகி. சிறுவர்களான இந்திரன் வினோதினி, தவராஜா, லவன் ஆகியோரும் பேசினர்.



# அமெரிக்காவை கலங்க வைத்த கத்ரீனா

கடந்த வருடம் தெற்காசிய நாடுகளை பீதியடையச் செய்த சொல் சுனாமி. இந்தக் கடல் அனர்த்தம் பற்றி கடந்த வருடம் டிசம்பர் 26க்கு முன்னர் நமது மக்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லை. பல்லாயிரக் கணக்கான மக்களின் உயிர்களைக் காவு கொண்ட இந்த ஆழிப்பேரலை அனர்த்தம் இன்னும் மக்களிடையே ஆழமான அச்சத்தையும், பீதியையும் ஏற்படுத்தியுள்ளது. இதே வேளை அமெரிக்காவின் நியூ ஓர்பின்ஸ் நகரில் வீசிய சூறாவளி மிகப் பெரிய பேரழிவை ஏற்படுத்தியிருக்கிறது. இந்த சூறாவளி கத்ரீனா என்ற புதுப் பெயரை நமக்கு கற்றுத் தந்திருக்கின்றது.



உலக சண்டியனாகப் புகழப்படும் அமெரிக்கா பொருளாதார ரீதியாகவும், அது வல்லரசு என்று கூறலாம். இவ்வாறான அமெரிக்காவை இயற்கை அனர்த்தம் அதாவது 'கத்ரீனா' சூறாவளி கத்தரித்து விட்டதா என்று எண்ணத் தோன்றுகிறது.


தற்போது ஏற்பட்டுள்ள நிலையில் அமெரிக்காவின் பொருளாதாரத்திற்கு பேரிடி வீழ்ந்திருக்கின்றது. பல ஆயிரக்கணக்கான மக்களின் உயிர்கள் கத்ரீனாவினால் பறிக்கப்பட்டுள்ளன. இன்னும் கூறுவதானால் எரிபொருள் தட்டுப்பாடு கூட அமெரிக்காவில் ஏற்பட்டுள்ளது. அமெரிக்காவில் கத்ரீனா ஏற்பட்ட இந்தக் காலம் நீண்ட விடு முறை காலப்பகுதி இக்காலத்தில் காரில் ஏறிக் குந்திக் கொண்டு சர்ரென்று அமெரிக்கர்கள் எல்லோரும் கடற்கரைக்கோ அல்லது தூரத்து உறவுகளைக் காண்பதற்கோ விரைவது வழக்கம். இக் காலப்பொழுதினிலே எப்பொழுதும் பெற்றோல் அவர்களுக்கு அதிகமாகத் தேவைப்படுவது வழக்கம். சாதாரணமாகவே இந்த விடுமுறை வந்து விட்டால் பெற்றோலிய விநியோகம் சற்று அங்கு திண்டாட்டம் காண்பதுமுண்டு. ஆனால் கத்ரீனா சூறாவளி வந்து நிலமைகளை மக மோசமாக்கியது. பெற்றோல் டீசல், ஒயில் அனைத்துக்கும் அவசியமான சுத்திகரிக்கப்படாத மசகு எண்ணெய் எடுக்கப்படுவதையும் கத்ரீனா பாதித்திருக்கின்றது. அதனால் இப்போது அமெரிக்காவிலே பல மாநிலங்களில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோல் வாங்கிக் கொள்வதற்கு வரையறைகள் கொண்டு வரப்பட்டுள்ளன. பெற்றோலிய சந்தைப்படுத்தலின் தலைவரான டான்வில் லியம் இந்த நிலமை குறித்து தெரிவித்திருப்பதாவது அமெரிக்காவில் பெரும்பாலான பெற்றோல் நிலையங்களில் எரிபொருள் தட்டுப்பாடு நிலவும் காலத்திலுள்ளது. போன்று பங்கீட்டு அடிப்படையில் பெற்றோலை வழங்கும் நிலைக்குச் சென்று விட்டன. அத்துடன் பெற்றோலிய விலையும் அதிகமாகி விட்டது. இரு பங்கு மற்றும் பணச் சந்தையில் கவலைகளைத் தோற்றி வித்திருக் கின்றது என்றார். எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அருகே சண்டை சச்சரவுகளையும் கொண்டு வந்திருக்கின்றது. இந்த நிலமையை சற்றே தணிக்குமாறு போல் (ஐ.ஜி.ஜே) சர்வதேச சக்தி நிறுவனத்தினருடைய அறிவித்தல் ஒன்று வந்திருக்கின்றது.
என்றார்.

அவசர கால நிலமைக்காக ஒதுக்கி வைத்திருக்கின்ற எண்ணெயிலே சுமார் 60 மில்லியன் பீப்பாய் எண்ணெயை வழங்குவதற்கு அந்த நிறுவனம் இணங்கியிருக்கின்றது. அதன் அரைப் பகுதி அமெரிக்காவுக்கு இருக்கின்ற இருப்பிலிருந்தும், மீதிப்பகுதி ஐரோப்பிய இருப்பிலிருந்தும் கிடைக்க இருக்கின்றன. ஐரோப்பிய நாடுகள் வழங்கியிருக்கும் சுத்திகரிக்கப்படாத எண்ணெய்கள் அடுத்த பத்து நாட்களுக்குக் கப்பலில் அமெரிக்காவைச் சென்றடைய இருக்கின்றன. அந்த சமயத்திலே எண்ணெய் விலை கொஞ்சம் குறைய ஆரம்பிக்கும் என அமெரிக்க எரிசக்தி துறை செயலரான சான் மோல் போல்டன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச சக்தி நிறுவனத்தின் முடிவு காரணமாக கச்சா எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் ஆகியவற்றின் மேலதிக விநியோகம் கிடைக்கவுள்ளது. மேலதிக விநியோகம் காரணமாக விலையில் சிறிது குறைவு ஏற்படும் சாத்தியமுள்ளது. ஆனால் அது சந்தையின் நிலையின் செயற்பாட்டுடன் சம்பந்தப்பட்ட விடயம். அவசரகால இருப்பு எண்ணையை வழங்குவதற்கு ஐ.ஜி.ஜே அமைப்பு எடுத்த முடிவு முக்கியமானது என்று ஆய்வாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் வேறு பலரோ அதனுடைய பலன். அதனுடைய தாக்கம் பெரிதாக இருக்கப் போவதில்லை என்று கருதுகின்றார்கள். பி.ஜ.சி. எனப்படுகின்ற எரி சக்தி நிறுவனத்தைச் சேர்ந்த ஜமால் குரேஸ் இந்த அறிவித்தலைக் கேட்டு இப்பொழுது ஆறுதல் அடைய முடியாமல் இருக்கின்றது என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

ஐரோப்பாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பெற்றோலியம் வந்து சேரும் வரை பெற்றோலின் விலை, பெற்றோலிய எண்ணையின் விலை அதிகரித்துக் கொண்டே இருக்கும். குறிப்பாக அமெரிக்க சுத்திகரிப்பு



நிலையங்கள் மீண்டும் தமது பணிகளை ஆரம்பித்து செயற்படுத்த தொடங்கும் வரை இந்த விலை அதிகரிப்புத் தொடரத்தான் செய்யும்.

கத்ரீனா தாக்கிய பல நகரங்கள் சேதமாக்கிக் கிடக்கின்றன. 10,12 எண்ணெய்க் கிணறுகளும், சுத்திகரிப்பு நிலையங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. சூறாவளியினுடைய மொத்தப் பாதிப்பு சுமார் 100 பில்லியன் டொலர் இருக்கும் என்று சில நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர். ஆனால் அமெரிக்க திறைசேரிச் செயலாளர் இந்தச் சூறாவளியினுடைய தாக்கம் நாட்டிலே நீண்ட கால அளவிலே கடுமையான பெரும் மாற்றங்களைக் கொண்டுவர மாட்டாது என்று கருதுவதாகக் கூறுகின்றார்.

கத்ரீனா சூறாவளியினுடைய பாதிப்பு கடுமையானதுதான். அதனால் அமெரிக்க பொருளாதாரத்திற்கு கடுமையான சவால் ஏற்பட்டிருக்கிறது. இதிலிருந்து மீட்சி அடைய நான்கு அல்லது ஐந்து மாதங்கள் நீடிக்கும் என திறைசேரிச் செயலாளர் குறிப்பிட்டிருக்கிறார்.

இதேவேளை கத்ரீனா சூறாவளியால் ஏற்பட்ட பாதிப்புக்களை அமெரிக்க ஜனாதிபதி விமானத்தில் சென்று பார்வையிட்டார். நிலமைகளை அவதானித்த அவர் இதன் தாக்கம் அதிகமானது. இதிலிருந்து மீள நீண்ட காலம் பிடிக்கும் எனக் குறிப்பிட்டிருந்தார். இதேவேளை சூறாவளி பாதிப்புக்கள் ஏற்பட்ட பகுதிகளிலிருந்து இன்னும் முற்று முழுதாக நீர் வடியவில்லை. இடிபாடுகள் அகற்றப்படவில்லை. மக்களுக்குப் போதுமான மருந்து, உணவு வசதிகள் சென்றடையவில்லை என்ற குற்றாச்சாட்டுக்களும் சுமர்த்தப்பட்டுள்ளது.

# கணப் பொழுதில் சோகத்தில் உறைந்து போன ஈராக்

ஈராக் மீதான போர். சதாம் ஆட்சி கவிழ்ப்பும், அதன் பின்னர் அமெரிக்க, பிரிட்டிஸ் படைகளின் தாக்குதல், பின்னர் அமெரிக்கப் படைகளுக்கும், கிளர்ச்சிக் குழுக்களுக்கும் இடையிலான தாக்குதல் என தொடர்கதையாகிச் செல்லும் சம்பவங்களால் ஈராக் மக்களின் வாழ்க்கை சீரழிந்து விட்டது என்றே கூறலாம்.

எண்ணை வளம்மிக்க இந்த நாடு இப்போது நிம்மதியிழந்துள்ள நிலையில் அண்மையில் சன நெருசலில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளமை மக்களை மேலும் பேரதிர்ச்சி அடைய வைத்துள்ளது.

ஈராக்கில் பாக்தாத் அருகே மனித வெடிகுண்டு பீதியால் பாலத்தில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கியும், டைகிரீஸ் நதியில் விழுந்தும் ஆயிரம் பேர் பலியாயினர். இறந்தவர்களை அடையாளம் காண அவர்களின் உறவினர்கள் கண்ணீரும், கம்பலையுமாகத் தேடி வருகின்றனர்.

இறந்தவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் என்பதால் சொந்தங்களை பறிகொடுத்தவர்கள் யாராலும் தேற்ற. முடியாத துயரத்தில் மூழ்கியுள்ளனர். ஈராக் போரை விட மோசமான சம்பவமாக இந்த சம்பவம் நடந்துள்ளது எனக் கூறப்படுகிறது.

ஈராக்கின் பாக்தாத் நகர் அருகேயுள்ள காதிமியா நகரில் ஷியா பிரிவு மதத்தலைவர் ஒருவரின் நினைவு. விழாவில் பங்கேற்க இலட்சக் கணக்கான மக்கள் பாக்தாத் நகரில் பல்வேறு பகுதியிலிருந்தும் திரண்டிருந்தனர்.

டைகிரீஸ் நதியின் குறுக்கேயுள்ள குறுகிய பாலத்தின் மீதும் பல ஆயிரம் பேர் போய்க் கொண்டிருந்தனர். அப்போது மனித வெடிகுண்டுத் தாக்குதல் நடக்கலாம் என திடீரென பரவிய வதந்தியால் உயிரைக் காத்துக் கொள்ள மக்கள் பதறி அடித்து ஓடினர்.

இதனால், ஏற்பட்ட பயங்கர நெரிசலில் பெண்களும், குழந்தைகளும், முதியவர்களும் ஆற்றில் விழுந்தும், கூட்ட நெரிசலில் மிதிபட்டும் இறந்தனர். ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இந்த சோக சம்பவத்தில் உயிரைப் பறிகொடுத்தனர். இன்னும் ஆற்றிலிருந்து மிதக்கும் பிணக்குவியல்களை மீட்புப் படையினர் பல நாட்கள் ஈடுபட்டனர்.

சம்பவத்தில் 815 பேர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்களில் 200க்கும் மேற்பட்டோர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்,

பலியானவர்களின் உடல்கள் வெண்ணிற பொலித்தீன் காகிதங்களால் மூடப்பட்டு பாக்தாத்தின் புறநகர்ப் பகுதியான சதர் நகரில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக கூடாரங்களில் வைக்கப்பட்டு பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

நடைபாதை என்றில்லாமல் அங்கிங்கெனாதபடி எங்கும் ஒரே பிணக்குவியல்களாகவே இருந்தது. இந்தப் பிணக்குவியல் களிடையே உறவினர்கள் கவலை தோய்ந்த முகத்துடனேயே தங்களது சொந்தங்களை கண்ணீர் மல்க ஏக்கத்துடன் தேடி அலைந்தது கல்நெஞ்சையும் கரைய வைப்பதாய் இருந்தது.

இறந்தோர்களின் சடலங்களை அடையாளம் கண்டுகொண்ட உறவினர்கள், நண்பர்கள் அழுது ஒப்பாரி வைத்தது விண்ணைப் பிளந்தது. மேலும், தங்கள் நெஞ்சில் அடித்துக்கொண்டு கதறும் காட்சி நெஞ்சத்தை உருக்குவதாக அமைந்திருந்தது.

அடையாளம் காணப்பட்ட பலரின் உடல்கள் இறுதிச் சடங்கிற்குப் பின்னர் சதர் நகர்ப்பகுதியிலும், நஜாப் நகருக்கும் எடுத்துச்செல்லப்பட்டு புதைக்கப்பட்டன.

இது தொடர்பாக ஈராக் பாதுகாப்புப் படை அதிகாரி கூறுகையில், 'இச்சம்பவத்தின் பின்னணியில் ஈராக் முன்னாள் அதிபர் சதாம் குசைனின் ஆதரவாளர்களுக்கும், அபு முஸாப் அல் ஜர் காவி என்பவர் தலைமையில் இயங்கும் அல் குவைதா அமைப்பினைச் சேர்ந்தவர்களுக்கும் தொடர்பிருக்கலாம்" என சந்தேகம் தெரிவித்தார்.

டைகிரீஸ் நதியில் பலர் செத்து மிதந்தனர், மேலும் பிணங்கள் மிதக்கலாம் என தாங்கள் சந்தேகிப்பதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்தச் சம்பவத்தில் பலியானவர்களை நினைவு கூறும் வகையில் ஈராக் அரசு மூன்று நாள் துக்கம் அனுஷ்டித்தது. முதல்நாள் அன்று நாடு முழுவதும் அமைதியாக துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

கடந்த 2003ம் ஆண்டு மார்ச்சில் அமெரிக்க அரசு ஈராக் மீது நடத்திய போரில் பல ஆயிரக்கணக்கானோர் பலியானார்கள், அதற்கடுத்து ஈராக்கில் நடந்த மிகப்பெரிய சோகச் சம்ப



வம் இது என்பது குறிப்பிடத்தக்கது. இருப்பினும், அப்போதைய சோகத்தை விட தற்போதைய சோகம் ஈராக் மக்களை பெருமளவு பாதித்துள்ளது.

ஈராக் அதிபர் ஜலால் தலாபானி கூறுகையில், 'இது ஒரு மிகப்பெரிய சோக நிகழ்வு, தன் நெஞ்சில் நீங்காத சோக வடுவாக இருக்கும்" என்றார்.

காதிமியாவில் நடந்த இந்த வழிபாட்டிற்கு கடந்த ஆண்டுகளை விட இந்த வருடம் கலந்து கொண்டோர் எண்ணிகை குறைவுதான் என்கிறார் ஒரு பாதுகாப்பு அதிகாரி. பாதுகாப்பு குறைபாடும், குளறுபடியுமே இதற்குக் காரணம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

# தமிழ் இலக்கிய அறிமுகம்

பழந்தமிழ் இலக்கியங்கள் சமுத்திரம் போல ஆழ அகலப் பரந்துள்ளன. பத்துப் பாட்டு, எட்டுத்தொகை பதினெண் கீழ்க் கணக்கு நூல்கள், ஐம்பெரும் காப்பியங்கள், பிரபந்த இலக்கியங்கள் இதிகாசங்கள், சிற்றிலக்கியங்கள் எனக் கணக்கிலடங்காத இலக்கியங்கள் தமிழில் உள்ளன. ஆனால் இவற்றை நன்கு அறியும் வாய்ப்புகள் தமிழ் மாணவர்களுக்குண்டா? நமது பாடப்புத்தகங்களில் இவை திருப்தியாக இடம் பெறுகின்றனவா?

குறைந்தபட்சம் சங்ககால இலக்கியங்கள் பற்றி தமிழ் மாணவர்கள் அறிந்திருக் கிறார்களா? இல்லையென்றே சொல்ல வேண்டும். எனவே இவற்றை அவர்களுக்கு அறிமுகம் செய்யும் நோக்கில் இக்கட்டுரைகள் எழுதப்படுகின்றன.

**சங்க நூல்கள்**

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பெருமக்கள் தமிழ் மக்கள். முதற் சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என முச்சங்கங்கள் இருந்ததாகத் தமிழ் இலக்கியங்களின் அகச் சான்றுகள், புறச் சான்றுகள் மூலம் அறிகின்றோம். இவற்றுள் முதல் இரு சங்கங்களும் சங்ககாலத்து நூல்களும் கடல் கோள்களினால் அழிந்து போயின.

கடைச்சங்க காலத்து நூல்களில் ஒரு சில பிற்காலத்தில் கிடைத்தன. கடைச்சங்க காலம் கி.மு.200 முதல் கி.பி200 வரை எனக் கூறுவர். கடைச் சங்க காலத்து நூல்களை பத்துப் பாட்டு எட்டுத் தொகை எனத் தொகுத்தனர். அவ்வாறே சங்கமருவிய காலத்து நூல்களை 'பதினெண் கீழ்க்கணக்கு' நூல்கள் எனத் தொகுத்தனர்.

இதிலிருந்து 'பத்துப் பாட்டு' பத்து நூல்களையும் 'எட்டுத் தொகை' எட்டு நூல்களையும் 'பதினெண் கீழ்க்கணக்கு' 18 நூல்களையும் கொண்டன என்பது வெளிப்படை.

இத்தொகுப்புகளில் அடங்கிய நூல்களின் விபரம் வருமாறு:~

**எட்டுத் தொகை:~**

01. நற்றினை 02. குறுந்தொகை
03. ஐங்குறுநூறு 04. பதிற்றுப் பத்து
05. பரிபாடல் 06. கலித்தொகை
07. அகநானூறு 08. புறநானூறு.

**பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்**

01. நாலடியார் 02. நான்மணிக்கடிகை
03. இன்னா நாற்பது
04. இனியவை நாற்பது
05. திருக்குறள் 06. திரிகடுகம்
07. ஆசாரக்கோவை 08. பழமொழி நானூறு
09. சிறுபஞ்சமூலம் 10. முதுமொழிக் காஞ்சி
11. ஏலாதி 12. கார் நாற்பது
13. ஐந்திணை ஐம்பது
14. ஐந்திணை எழுபது
15. திணைமொழி ஐம்பது
16. திணைமாலை நூற்றைம்பது
17. கைநிலை 18. களவழி நாற்பது.

இத்தொகுப்பு நூல்களை இலகுவில் ஞாபகம் வைத்திருப்பதற்காக ஒவ்வொரு செய்யுள் ஆக்கப்பட்டுள்ளது. விபரம் வருமாறு:~

**பத்துப்பாட்டு:~**

''முருகுபொருநராறுபாணர் இரண்டு முல்லை பெருகு வளமதுரைக் காஞ்சி ~ மருவினிய கோல நெடுநல்வாடை கோல் குறிஞ்சிப் பட்டினப்பாலை கடாத்தொடும் பத்து.

**எட்டுத்தொகை:~**

'நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்தபதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோ டகம்புறமென்று
இத்திறத்த எட்டுத் தொகை'

**பாட்டும், தொகையும்:~**

முதல் தொகுப்பான 10 நூல்களை ''பாட்டு'' என்றும், இரண்டாவது தொகுப்பான எட்டு நூல்களைத் ''தொகை'' என்றும் குறிப்பிட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

## அன்புமணி

இது நச்சினார்க்கினியார் முதலிய உரையாசிரியர்களின் குறிப்புரைகளாகும்.

இவற்றை மேற்கணக்கு நூல்கள் என்றும், சங்கமருவிய காலத்து 18 நூல்களைக் கீழ்க்கணக்கு நூல்கள் என்றும் குறிப்பிடுகின்ற மரபு (கணக்கீடு என்று இதற்குப் பொருள் கொள்ளலாம்.) இந்நூல்கள் ஒவ்வொன்றும் என்ன பொருள் பற்றிப் பேசுகின்றன என்பதைப் பின்னால் விரிவாகப் பார்க்கலாம். அதற்கு முன்னர் இந் நூல்கள் என்ன அடிப்படையில் இவ்வாறு தொகுக்கப் பெற்றன என்பதை அறிதலும் ஆகும்.

இதில் சில நூல்களை ''ஆற்றுப் படை'' எனக் குறிப்பிட்டிருப்பது மனங்கொள்ளத் தக்கது. ''ஆற்றுப்படை'' ''வழிப்படுத்தல்'' எனப் பொருள் கொள்ளலாம். உதாரணமாக நக்கீரர் பாடிய ''திருமுருகாற்றுப் படை'' முருகன் பெருமையைக் கூறும் நூல். பக்தர்களை முருகன் பால் இட்டுச் செல்லும் நூலாக இது அமைகின்றது.

இந்த அடிப்படையில் திருமுருகாற்றுப்படை, பொருணராற்றுப்படை, சிறுபாணாற்றுப் படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடு கடாம் (கூத்தராற்றுப் படை) ஆகிய ஐந்தும் ஆற்றுப்படை நூல்களாகின்றன. முல்லைப் பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை ஆகிய மூன்றும் அகப் பொருள் பற்றிய நூல்கள்

**பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்**

இக் கீழ்க்கணக்கு நூல்களுக்கும் உள்ள ஒரு பெரிய வேற்றுமை இந்நூல்கள் ஒழுக்கநெறி பற்றிப் பேசுவதாகும்.

மேலும் பாடல்களின் எண்ணிக்கையைக் கொண்டு நூற் தலைப்பு அமைந்திருப்பதும் கவனத்திற் கொள்ளத்தக்கது. (உதாரணம்:~ இன்னா நாற்பது, இனியவை நாற்பது, கார் நாற்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது)

இந் நூல்களில் ''திருக்குறள'' காலத்தால் முற்பட்டது. ஏனையவை காலத்தால் பிற்பட்டவை. இவற்றிலும் கார்நாற்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணை மொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, கைந்நிலை ஆகிய ஆறு நூல்களும் அகப் பொருள் பற்றிப் பேசுகின்றன. களவழி நாற்பது என்றும் நூல் போரைப் பற்றிப் பேசுகின்றது. இவை தவிர்ந்த ஏனைய பதினொரு நூல்களும் ஒழுக்கநெறி பற்றிப் பேசுகின்றன. இவற்றுள் தலையாயதாக திருக்குறள் அமைகின்றது. உலகநீதி தனிமனித ஒழுக்கம், சமூகநீதி முதலிய யாவும் இந்நூலில் அடங்கியிருப்பது கண்கூடு.

இவ்வாறே நாலடியார், நான்மணிக்கடிகை, ஆசாரக் கோவை, பழமொழி நானூறு முதலிய நூல்கள் உலகநீதி நூல்களாக அமைகின்றன. இவ்வாறு நோக்கும் போது சங்கமருவிய காலத்தில் கோரிக்கைகளையும், கலைகளையும் புறந்தள்ளி அறவாழ்க்கைக்கு முக்கியத்துவம் அளிக்கும் ஒரு திருப்பம் ஏற்பட்டிருப்பதை நாம் அவதானிக்கலாம்.

*(தொடரும்...........)*

# எல்மோ சச்சினுக்கு வில்லன்



இந்திய அணி இப்போது தோல்விமேல் தோல்வியைப் தழுவுகின்றது. உலகின் பலம் வாய்ந்த துடுப்பாட்ட வரிசையைக் கொண்ட இந்திய அணி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்று தோல்வியடைவது என்பது சர்வ சாதாரணமாகி விட்டது.

அண்மைக் காலமாக அது பல வீனமான அணிகளைக் கூட வெல்வதற்கும் கடுமையாகப் போராட வேண்டியிருக்கிறது. இது இந்திய கிரிக்கெட் ரசிகர்களிடையே கவலையையும். ஆத்திரத்தையும் ஏற்படுத்தி நிற்கும். அதேவேளை இதற்குக் காரணம் சச்சின் அணியில் இல்லாமையே என்பதுவும் பலரது அபிப்பிராயம்.

சச்சின் இந்திய அணியில் மட்டுமல்ல உலகப் புகழ் பெற்ற ஒரு வீரன். முப்பத்திரெண்டு வயதான சச்சின் டெண்டுல்கர் டெஸ்ப் போட்டிகளில் பத்தாயிரம் ஓட்டங்களைக் கடந்தவர். 34 சதங்கள் அடித்துள்ளார். ஒரு நாள் போட்டிகளில் 38 சதங்கள் 69 அரைச் சதங்கள் அடங்கலாக 13643 ஓட்டங்களை குவித்திருக்கிறார். ஆனால் சமீப காலமாக அவரது முழங்கையில் ஏற்பட்ட எல்மோ என்ற வியாதி காரணமாக விளையாட்டுக்களில் அவர் கலந்து கொள்ளவில்லை. இது சச்சின் ரசிகர்களுக்குப் பெரும் துக்கமே என்று கூறலாம். ஏனெனில் சச்சின் துடுப்பாட்டத்தின் மூலம் அபார திறமையை வெளிப்படுத்தியவர்.

சச்சினின் துடுப்பாட்டத்தை இந்தியாவிலுள்ள கோடிக்கணக்கான ரசிகர்கள் மட்டுமல்ல உலக நாடுகளிலுள்ள கிரிக்கெட் ரசிகர்களுக்கும் சச்சினின் துடுப்பாட்டம் கவர்ந்தது.

இந்திய அணியில் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கியவர். அணி வெற்றி பெறுமா? தோல்வியா? என்பது சச்சினின் துடுப்பு மட்டையில் இருந்து பெறுபேற்றைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவிருக்கிறது.

சாதனைகளைப் பொறுத்த மட்டில் கிரிக்கெட் வாழ்வில் நிறையவே படைத்திருக்கும் இவர் இவரது இலக்கை இன்னுமொரு வீரர் பெறுவது என்பது கடினமானதாகவுள்ளது. அந்த வகையில் எட்ட முடியாத இலக்கில் சாதனை படைத்திருக்கும் சச்சின் அண்மையில் சிறிலங்காவில் நடை பெற்ற முத்தரப்புத் தொடரில் பங்கு கொள்வார் என ரசிகர்கள் எதிர் பார்த்த போதும் இறு தியில் ஏமாற்றம் அளித்தது. அதன் பின்னர் சிம்பாப்வே. நீயூ சிலாந்து. இந்திய அணிகளுக்கான முத்தரப்புத் தொடர் மற்றும் டெஸ்ட் தொடரில் சச்சின் பங்கேற்பார் என ரசிகர்கள் ஆவலோடு எதிர் பார்த்தனர். வீழ்ந்து கிடக்கும் அணியை வெற்றி நடை பயில வைப்பார் என எதிர் பார்த்தனர். ஆயினும் எல்மோ இன்னும் சச்சினின் கிரிக்கெட் வாழ்வை சீர் குலைத்து வருகிறது. உடல் தகுதியைப் பெற்று விளையாடும் நிலையைப் பெறவில்லை என மருத்துவ உடற்தகுதி நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.


இது கிரிக்கெட் ரசிகர்களுக்கு பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கிறது. சச்சின் மீண்டு வர வேண்டும். தோல்வியில் துவண்டு கொண்டிருக்கும் இந்திய அணியைத் தூக்கி விடவேண்டும். இன்னும் சாதனைகள் படைக்க வேண்டும். இதுவே ரசிகர்களின் எதிர்பார்ப்பு. இதற்கு எப்போது பதில் அளிக்கப்போகிறார்.

*ஈழநாதம் (மட்டக்களப்பு பதிப்பு) வாரம் தோறும் வழங்கும் குறுக்கெழுத்துப் போட்டியில் பங்குபெற விரும்புவோர் போட்டிப்படிவத்தைப் பூர்த்தி செய்து அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பிவைக்கவும். சரியான விடை அனுப்பும் ஒரு அதிஸ்டசாலிக்கு 250 ரூபா பணப்பரிசும், பாராட்டுப் பெறும் 10 அதிஸ்டசாலிகளின் பெயர் விபரமும் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.*

*விடைகள் வந்து சேரவேண்டிய கடைசித் திகதி:~ 19~09~2005*

## குறுக்கெழுத்துப் போட்டி 68

**குறுக்கெழுத்துப் போட்டி இல - 68**
**ஈழநாதம் (மட்டக்களப்பு பதிப்பு)**
**பிரதான வீதி,**
**கொக்கட்டிச்சோலை.**



## இடமிருந்து வலம்

01. அரசியல்வாதி அல்லது பிரமுகர் ஒருவரின் கோபத்தைக் காட்ட பொதுமக்கள் குறித்த நபரின் உருவத்தை ஒத்த இதனை எரிப்பர்.
05. நாட்டுக் கூத்தின்போது மத்தளத்துடன் சேர்ந்து இசைக்கப்படுவது.
07. இன்னொருத்தர் வீட்டை, பொருளை பயன்படுத்தினால் கொடுக்கும் பணம். (திரும்பியுள்ளது)
09. இறைவனுக்கு இப்படியும் ஒரு நாமம். (திரும்பியுள்ளது)
10. அரசன் (திரும்பியுள்ளான்)
12. பூரண சந்திரனின் வடிவம். (குழம்பியுள்ளது)
14. துன்பம் (இறுதி எழுத்தை இழந்து திரும்பியுள்ளது)
15. இந்துக்கள் இதனை முதன் நூலாகக் கொள்வர்.
18. பூமி. (திரும்பியுள்ளது)
19. வன்னிப் பிரதேசத்தில் விவசாயத்திற்கும் மரக்கறிச் செய்கைக்குப் பிரபலமான குளம் ஒன்று.

## மேலிருந்து கீழ்

01. வாழ்வில் மனிதன் ஒவ்வொருத்தருக்கும் தனக்கென இதுவும் குறிக்கோளும் அவசியம்.
02. பாண்டவர்கள் காட்டில் கழித்த காலத்தை இவ்வாறு அழைப்பர். (தலைகீழ்)
03. பூரண நிறையுணவு.
04. யாழ்ப்பாணத்திலுள்ள கிராமம் ஒன்று (தலைகீழ்)
08. இவனைக் கண்டால் விலகிவிடு என்பார்கள். (குழம்பியுள்ளது)
11. விலங்குகளை மறைந்திருந்து கொல்லும் தொழிலை ஜீவனோபாயமாகக் கொண்டவன் (தலைகீழ்)
12. உலகில் உயரமான மலை. (தலைகீழ்)
13. துடைப்பம், கால்மிதி போன்ற பொருட்கள் செய்ய ஆரம்ப காலத்திலிருந்து இன்றுவரை பயன்படும் பொருள்.
16. நெல் குத்தும் போது அரிசி, உமியுடன் இதுவும் வரும்.
17. வீடு, இல்லம்.

## குறுக்கெழுத்துப் போட்டி 66ற் கான விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 01. உதரம். | 01. உப்பரிகை. |
| 05. தகனம். | 02. ரதம். |
| 07. புலி. | 03. (யா)கம். |
| 08. காரி(கை) | 04. அம்புலி. |
| 10. அல்லி. | 06. பல்லினம். |
| 11. பத்திரிகை. | 09. காரியம். |
| 13. திரவியம். | 12. திரட்டு. |
| 15. வாட்டம். | 14. செவி. |
| 16. முரடு. | 15. பிட(ரி) |

## பரிசு பெறும் அதிஸ்டசாலி

**ச.சந்திரமதி,**
**மகிழவட்டவான்,**
**ஆயித்தியமலை.**

## பாராட்டுப் பெறும் அதிஸ்டசாலிகள்

01. வ. இளநிதி, கல்லடி உப்போடை, மட்டக்களப்பு.
02. தி.முரளிதரன், சங்கமன் கிராமம், கோமாரி.
03. ச.சிறிசஞ்சு, ஆரையம்பதி - 01.
04. ஜெ.நவபுத்திரன், அன்னமலை, நாவிதன்வெளி.
05. ஆர்.உதயபிரகாவி, புதிய கல்முனை வீதி, கல்லடி, மட்டக்களப்பு.
06. ஜெ.சுஜானி, மட்டக்களப்பு.
07. சு.சந்திரிகா, குருமண்வெளி - 12, களுவாஞ்சிகுடி.
08. த.நாகையா, நியூ ராணி ஸ்ருடியோ, கல்முனை.
09. க.மயூரன், மாமாங்கம், மட்டக்களப்பு.
10. திருமதி.வ.பாலசுப்பிரமணியம், பிரதான வீதி, தம்பிலுவில் - 01.



# திருக்குறள் காட்டும் அரசியலும் அதன் பொருத்தப்பாடும்

**சென்ற வாரத் தொடர்ச்சி.....**

அரசியல் பற்றிய அதிகாரங்களில் 'செங்கோன்மை' முக்கியமானதொன்றாகும். அரசனால் மேற்கொள்ளப்படும் நீதி நெறி முறையான ஆட்சிச் சிறப்பினையே இது குறித்து நிற்கிறது. ஒரு பக்கச் சார்பின்றி அவ்வாட்சி சமனின்று சீர்தூக்கும் கோல் போல் அமைந்திருக்க வேண்டுமாதலால் செங்கோல் எனப்பட்டது.

மன்னராட்சியோடு தொடர்பான முக்கிய பண்புகளில் ஒன்றான இச் செங்கோன்மையைப் பற்றி அழகானதோர் விளக்கம் ஒன்று வள்ளுவரால் முன்வைக்கப்படுகிறது.

குறுங்காலத்தை நோக்கும் போது மன்னன் ஒருவனுக்கு வெற்றியைத் தருவது வேலாயுதமாகும். ஆனால் நெடுங்காலத்தை நோக்கும் போது வேலாயுதத்தை விட செங்கோல் தான் அவனுக்குச் சிறந்த புகழைக் கொடுக்கும். அதே வேளை அந்தச் செங்கோல நெகிழ்ச்சித் தன்மை அற்றதாக இருக்க வேண்டியதும் அவசியமாகும். இதனைச் 'செங்கோன்மை' என்ற அதிகாரத்தில் வரும் 546 வது குறள் நன்கு விளக்கி நிற்கக் காணலாம்.

'வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூ உம் கோடா தெனின்''

இதில் இருந்து படைப்பலத்தை விட செங்கோல் செலுத்துகின்ற ஆட்சிப்பலமே எக்காலத்திலும் நிலைத்திருக்கும் என்பது வள்ளுவர் வாக்காகப் பெறப்பட்டது.

செங்கோன்மைக்கு அடுத்ததாக கொடுங்கோன்மையைத் திருவள்ளுவர் முன் வைப்பதை நோக்கலாம். இது செங்கோன்மைக்கு எதிரானதாகும். அரசன் மற்றவரது பொருளுக்கு ஆசைப்பட்டு குடிகளைத் துன்புறுத்தி ஆட்சி செய்யக்கூடாது என்பதனையே இவ்வதிகாரக் குறட்பாக்கள் மூலம் வள்ளுவனார் வலியுறுத்துகிறார். இதற்குச் சிறந்த உதாரணமாக கொடுங்கோன்மையில் வரும் முதலாவது குறளை (குறள் 551) கொள்ள முடியும்.

''கொலை மேற்கொண்டாரிற் கொடிதே அலைமேற்கொண்டு
அல்லவை செய்தொழுகும் வேந்து''

கொடுங்கோன்மை மன்னர்களது ஆட்சிக் காலங்களில் தனக்குப் பொருள் வேண்டும் என்பதற்காக குடிமக்களை வருத்தி அரச நெறிக்கு முறையல்லாத தான் தோன்றித் தனமான செயல்களைச் செய்து வரும் மன்னவன் கொலை செய்வதற்காக வாளைத் தூக்கிய கொலைஞனை விட கொடியவனாவான் என்பதே திருவள்ளுவர் இக்குறள் மூலம் தெளிவுபடுத்தும் விளக்கமாகும்.

கொடுங்கோன்மையின் கொடுமையை சிறந்த உவமை மூலம் விளக்கி அதன் மூலமாக கொடுங்கோன்மையானது சிறந்த அரச முறைக்குப் பொருந்தாது என வள்ளுவர் வலியுறுத்திய விதம் நயக்கத்தக்கதாகும்.

கொடுங்கோன்மைக்கு அடுத்ததாக 'வெருவந்த செய்யாமை' என்னும் அதிகாரமானது அரசியலில் இடம் பெறுகிறது. வெருவந்த செய்யாமை என்றால் மக்கள் அஞ்சுவதும் தான் அஞ்சுவதும் போன்ற தொழில்களை மன்னன் செய்யாமை எனப் பொருள்படும்.

"இறைகடியன் என்று உரைக்கும் இன்னாச்சொல் வேந்தன்
உறைகடுகி ஒல்லைக் கெடும்''

என்ற குறள் ஆழமானதும், அவசியமானதுமான வெருவந்த செய்யாமைக் கருத்துகளை உணர்த்தி நிற்கக் காணலாம். அதாவது 'எங்கள் அரசன் கடுமையானவன்' என்று மக்கள் சொல்லும் பழிச்சொல்லுக்கு ஆழாகிய அரசன் தன் ஆயுளும் விரைவில் கெட்டுப் போக அழிவை அடைவான் என்பது இக்குறள் எமக்கு உணர்த்துகின்ற தத்துவமாகும்.

அடுத்ததாக சிறந்த அரசாட்சிக்கு ஒற்றனது சேவை மிக முக்கியமானது என்பது வள்ளுவனது அபிப்பிராயமாகும். இதனை விளக்குவதற்காக அழகான குறளொன்றை "ஒற்றாடல்" எனும் அதிகாரத்தில் இருந்து எடுத்துக் கொள்ள முடியும்.

அதிகமாக ஒற்றர்கள் மேற்கொள்கின்ற மாறுவேடம் முனிவனாகவோ அல்லது விரத ஒழுக்கத்தை மேற்கொண்டவனாகவோ வேடம் தரிப்பதாகும். இதற்குக் காரணம் இவ்வாறான வேடங்கள் பகைவர்களுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தாது.

இந்த மாறுவேடங்களில் செல்வதற்குரிய இடங்களில் எல்லாம் சென்று ஆராய வேண்டியவற்றையெல்லாம் ஆராய்ந்து ஓர் ஒற்றன் அறிந்து கொள்வான்.

ஆனால் ஏதோ ஒரு வகையில் பகைவர்கள் சந்தேகம் கொண்டு அவனைப் பிடித்துப் பலவிதமான துன்பங்களைச் செய்த போதிலும் அந்த இரகசியத்தை வெளியிடாதவனே சிறந்த ஒற்றனாவான். என்கிறார் வள்ளுவப் பெருமானார். இதனை

"துறந்தார் படிவத்த ராகி இறந்தாராய்ந்து
என்செயினும் சோர்விலது ஒற்று''

என்ற குறட்பாவானது நன்கு தெளிவுறுத்தி நிற்கக் காணலாம். இதில் இருந்து சிறந்த நல்லாட்சிக்கு ஒற்றான் 'அணிகலமானது' என்பது பெறப்பட்டது. ஊக்கம் உடைமை ஆனது அரசியலில் 60வது அதிகாரமாக வருகிறது. இது மன்னனுக்கும் மக்களுக்கும் பொதுவானதாகும். ஊக்கம் இல்லாத மன்னனால் சிறந்த அரசியலாட்சியை உருவாக்க முடியாது. அந்த ஊக்கம் உடைமையின் அவசியத்தைப் பின்வரும் குறளானது தெளிவுபடுத்தி நிற்கக் காணலாம்.

"உரமொருவற்கு உள்ள வெறுக்கை அஃதிலார்
மரம் மக்களாதலே வேறு''

அதாவது சாதாரண குடிமகனாக இருந்தாலும் நாடாளும் வேந்தனாக இருந்தாலும் ஒருவனுக்கு உள்ள செல்வம் என்பதன் ஊக்கமே ஆகும். அந்த ஊக்கமாகிய செல்வம் இல்லாதவர் உருவத்தால் மனித வடிவில் தெரிந்தாலும் மரத்தைப் போன்றவராவார் என்பது வள்ளுவர் தெரிந்து கண்ட உண்மையாகிறது.

இவ்வாறான திருக்குறள் காட்டும் அரசியலில் இடம்பெறும் கருத்துக்கள் ஒவ்வொன்றும் ஆழமானது, அவசியமானதுமான பல்வேறு அரசியல் நெறிமுறைக் கருத்துக்களை வலிறுயுத்துவதோடு அவை எக்காலத்திற்கும் எவ்வாட்சி நெறிக்கும் பொருந்தக்கூடிய தூரநோக்குடைய கொள்கைகளைக் கொண்டவைகளாக விளங்குகின்றமை சிறப்பம்சமாகும்.

**(முற்றும்)**

---

# தமிழ்க் கவிதைத் துறையில் பாரதியாரின் குயிற்பாட்டு...!

**கன்னிமுத்து வெல்லபதியான்**

தமிழ் அன்னையை அலங்கரிக்கும் அழகிய ஆபரணங்களில் ஒன்றாக கவிதையைக் கொள்ள முடியும். காலந்தோறும் பல கவிஞர்களும், புலவர்களும் தோன்றி கவிதையாலும், பாட்டாலும் செந்தமிழுக்குச் சிறப்பூட்டி வந்ததனை வரலாறு நன்கு படம் பிடித்துக் காட்டும். இத்தகைய எண்ணிறந்த கவிஞர்கள், புலவர்கள் வரிசையிலே மிகவும் உன்னதமான ஒருவராகக் கொள்ளப்படுபவரே இந்திய மண்ணில் எட்டய புரத்தில் தோன்றிய மகாகவி சுப்பிரமணிய பாரதியார் ஆவார்.

இவரை நவயுக கவிதைமேதை என்றால்கூட அது மிகையாகாது. எளிமையான, இனிமையான, இதமானசந்தச் சிறப்புக்களையும், உணர்ச்சிக் கொதிப்புக்களையும், மானிடவியல் பொதுமை நோக்கங்களையும், வாழ்வியல் தத்துவங்களையும் பாரதியாரின் கவிதைகளிலே பரந்தும், செறிந்தும் கிடக்கக் காணலாம். புதுக்கவிதையின் பெரும் பிதாவாகவும், பாட்டுக்கொரு புலவராகவும் நாட்டுக்கெல்லாம் உயர் கவிஞராகவும் விளங்குபவர் இவரேயாவார்.

புரட்சிப் போக்கும், புதுமை வேகமும் கொண்ட பாரதியாரின் படைப்புக்களில் பழமையின் செழுமையும் பரந்து கிடக்கும் பான்மையை அவதானிக்கலாம். தமிழ்க் கவிதைத் துறைக்கு அவர் செய்த சேவைகளோ அளப்பரியதாகும்.

''அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்பதில்லையே உச்சிமீது
வானிடிந்து வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்பதில்லையே''

என்று கூறும் அஞ்சா நெஞ்சமுடைய நம் பாரதியார் கவிதைகளை, கருத்தாழம் மிக்க பாடல்களை மாத்திரம் தந்ததோடு நின்று விடவில்லை. 'பாரதி பரம்பரை' என்றொரு படைப்புலக பரம்பரையை உருவாக்கி விட்டே சென்றிருக்கிறார். இன்றைய தமிழில் உள்ள கவிதை அவர் உருவாக்கித் தந்த கவிதை. பாரதியாரைப் பின்பற்றியே இக்கால கவிஞர்களுள் பெரும்பாலானோரைக் காண்கிறோம். பாரதியார் இன்றி இன்றைய கவிதை இல்லை என்றே கூறி விடலாம்.



இந்த வகையிலே தமிழ்க் கவிதைத் துறைக்காக மகாகவி சுப்பிரமணிய பாரதியார் படைத்த பெரும் படைப்புக்களில் 'கண்ணன் பாட்டு', 'பாஞ்சாலி சபதம்' 'குயிற் பாட்டு' போன்றன முக்கியமும், முதன்மையும் பெற்று விளங்குகின்றன. இவற்றிலும் 'குயில் பாட்டு' மிகவும் முக்கியமானதாகவும், பலவித கண்ணோட்டங்களுடனும் கருத்துச் செறிவுகளுடனும், கற்பனை வளத்துடனும் எழுதப் பட்டதாகவும் கொள்ளப் பெறுகிறது. சுருங்கச் சொல்லப் போனால் தமிழ் கவிதைத் துறைக்கு பாரதியாரின் குயிற்பாட்டு புதிய பரிணாமமாகவும் புதிய வரவாகவுமே கொள்ளப்படுகிறது.

மாலையில் பாரதியார் கனவு கண்டதன் பயனாக குயில்பாட்டு என்ற சிறிய காப்பியம் உருவானது. எனவே இது கனவுக் காப்பியம் கருத்தாழம் மிகவுடைய கற்பனைக் காப்பியம் ஆனாலும் உயர்ந்த காப்பியம். ஒப்பற்ற ஒரு காப்பியம்.

கடவுள் கொள்கையைப் பெரிதாகக் கூறும் கண்ணன் பாட்டைப் போலவோ, சமூக சீர்திருத்த கருத்துக்களை அள்ளி வழங்கி சுதந்திர தாகத்தை ஏற்படுத்திய பாஞ்சாலி சபதத்தைப் போன்றோ குயிற்பாட்டு அசையாமல் உண்மையான காதலைக் கருவாக வைத்துப் பின்னப்பட்டு உயர்ந்த பல கருத்துக்களை அதனூடாக அடுக்கிச் சென்று புதுமையான ரசனைகளையும், சிந்தனைப் போக்குகளையும் தருவதாகவே அமைந்திருக்கக் காணலாம்.

கற்பனையில் உருவாகிய குயில் கதையில் உண்மையான காதல், அதற்கேற்படும் சோதனை–வேதனை–சோதனையின் முடிவில் ஏற்படும் இன்பம், கன்மம் மறுபிறப்பு நம்பிக்கைகள், வாழ்வியல்த் தத்துவங்கள், வேதாந்த சித்தாந்தக் கருத்துக்கள் போன்ற பல்வேறு கருத்துக்களை சிறப்பு இடம் பெறுவதை நோக்க முடியும்.

ஆழமாகச் சிந்தித்துப் பார்க்கும் போது காதல்ச் சம்பவங்களிடையே வேதாந்தக் கருத்துகளே மேலோங்கி நிற்பதாகத் தெரிகிறது. இதனாலன்றோ குயில் பாட்டின் இறுதியில் மூன்று வரிகளில் பின்வருமாறு கூறுகிறார்.

''ஆன்ற தமிழ்ப் புலவீர் கற்பனையே
ஆனாலும் வேதாந்தமாக விரித்துப்
பொருளுரைக்க யாதேனும் சற்றே
இடமிருந்தால் கூறீரோ''

இதிலிருந்து தாம்படைத்த குயிற்பாட்டில் வேதாந்தக் கருத்துக்கள் சில இடம் பெறுமானால் அவற்றை விரித்து பொருள் உரைத்து உலகிற்கு கூறுங்கள் என்று ஏனைய தமிழ்ப் புலவர்களின் சிந்தனைக்கும், செயற்பாட்டுக்கும் களம் அமைத்துச் செல்கிறார் பாரதியார். இதனடிப்படையில் அறிஞர்கள் குயில் பாட்டில் உள்ள வேதாந்தக் கருத்துக்களைத் தேடி ஆராய்ச்சிகள் நடத்துவதனைக் உணர முடிகிறது. வேதாந்தம் என்ற சொல்லை வேதம்+அந்தம் எனப் பிரிக்க முடியும். இதன் பொருள் நான்கு வேதங்களின் முடிவு என்பதாகும். ஆனால் குயில் பாட்டில் நான்கு வேதங்களின் முடிவு கூறப்படவில்லை.

எனவே வேதாந்தம் என்னும் சொல் குயில் கதையில் 'ஓர் உயர்ந்த கொள்கை' என்ற பொருள் படவே இடம் பெற்றிருக்கிறது என்பது பல அறிஞர்களது எண்ணப்பாடாக இருக்கிறது. தமிழ்ப் புலவர்களைப் பொருள் விரித்து உரைக்குமாறு பாரதியார் வேண்டிக் கொண்டது வேதாந்த சமயக் கொள்கைகள் அல்ல என்பது குயில் வாழ்க்கையில் இருந்து உணரக்கூடியதாக உள்ளது.

**தொடரும்...........**

[illegible]மான மற்றுமோர் நவீன நாவல்.....

# உயிருள்ளவரை உன்னுடன்.....

08

காத்தநகர் கறுப்பு ரோஜா



உங்களை எப்ப கண்டானோ அன்றிலிருந்து பெண்கள் மேல கொஞ்சம் நல்லபிப்பிராயம் உருவாகியிருக்கிறது. உங்களை எங்கும் தேடுவான். இன்று கண்டுபிடித்து விட்டான்.

அது மட்டும் இல்ல அம்மா அவன் இன்னொரு பொண்ணுக்குத் தூண்டில் போடுறான். டேய் ரகு வாயை மூடு என்றான் ராஜா.

அம்மா ரகு சொல்றதை நம்ப வேணாம். யாருக்கு பூ வைக்கிறீங்க. நானும் உங்கட வயதைத் தாண்டி வந்தவதான் பிறகு எப்படி இருப்பாள்.

பெயர் என்ன என ரகுவிடம் திரும்பிக் கேட்டாள்.

அதானே தெரியமாட்டேங்கிறது. என்று கூறி ஒரு புத்தகக் கடைக்கு முன் நிறுத்தி அம்மாவின் மகனுக்கு நிறைய அப்பியாஷக் கொப்பியும், எழுது கருவிகளும் வேண்டிய பின் வீட்டில் படிக்கிறவர்கள் வேறு யார் யார் இருக்கிறார்கள் என வினவினான்.

ஒரு மகள் இருக்கிறாள். படித்து முடித்து விட்டு கம்பியூட்டர் கோஸ் செய்கிறாள் என்றாள். கம்பியூட்டர் பாஸ் புக்கும், நோட் புக்கும் ஒவ்வொரு செக்ஸனிலும் எடுத்தான். பில்லைப் பே பண்ணிவிட்டு மறுபடியும் காரில் ஏறி அம்மாவின் வீட்டிற்கு வந்தனர்.

வீடென்றால் ராஜாவின் வீட்டைப் போலவோ அல்லது சாதாரண வீட்டைப் போலவோ இல்லை. எளிமையாக ஓலையால் வேயப்பட்ட குடிசை. ஏழையானாலும் குணத்தில் தங்கந்தான் என ரகு எடை போட்டுக் கொண்டான். குடிசை என்றாலும் உரிய இடங்களில் உரிய பொருட்களை வைத்து நேர்த்தியாக இருந்தது அந்தக் குடிசை.

ராஜா எங்கே மகன் என வினவ குடிசையின் பின்புறத் தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருந்த பிரபுவைக் கூப்பிட்டாள். உடனே பிரவு அம்மாவின் குரல் கேட்டு ஓடோடி உள்ளே வந்தான்.

யார் அம்மா இவர்கள் என காதிற்குள் கேட்டான். இவர் ராஜா மாமா. இது ரகு மாமா என அறிமுகம் செய்து வைத்தாள்.

பிரபு வணக்கம் தெரிவித்து விட்டு சிரித்தான். இருவரும் பதில் வணக்கத்தைக் கூறிவிட்டு கொண்டு வந்த கொப்பிகளை அவனிடம் நீட்டினான் ராஜா. அவன் அம்மாவை பார்க்க வேண்டிக் கொள் என்று சொல்ல அவற்றை ஆசையுடன் பெற்றுக் கொண்டான்.

ராஜா பிரபுவின் அருகில் சென்று உனக்குத் தேவையானவற்றை என்னிடம் கூச்சமின்றிக் கேள் வாங்கித் தருகிறேன். என்ன உங்க மகளைக் காணவில்லை.

அம்மா! அக்கா வயல்ல இருந்து கொண்டு ஸ்டோரி புக் படிக்கிறா. நாம வயலுக்குப் போவோம். வயலை பார்த்த மாதிரியும் இருக்கும். மகளைப் பார்த்த மாதிரியும் இருக்கும் என ரகு கூற மூவரும் வயலுக்குச் சென்றனர். பிரபுவின் அக்கா புக் படித்துக் கொண்டிருந்தாள். இவர்களுக்கு முன்னால் அவள் அமர்ந்து கொண்டிருந்தாள். அவளின் பின் புறம் தான் அவர்களுக்குத் தெரிந்தது.

தேவி என அம்மா அழைக்க திரும்பிய தேவி கண் இமைகளை சிமிட்ட மறந்து அப்படியே நின்றாள். ரகு வியப்புடன் ராஜாவைப் பார்த்தான். ராஜா அவளைப் போலவே அசையாமல் நின்றான்.

என்னடா இது வம்பாப் போயிற்று. இரண்டு பேரும் சொல்லி வைத்த மாதிரி அப்படியே நின்கின்றனர் என ரகு தன் மூளையில் பொறி ஒன்று தட்டியது போல தேவியை உன்னிப்பாக பார்த்தான்.

ராஜா சொன்னவள் தான் இவள். அவன் வர்ணித்ததை விட ரொம்ப அழகாக இருந்தாள். கண்கள் நிலத்தில் படர, கால்கள் மணலில் கோலம் போட, கவிழ்ந்த தலை நிமிராமல் நின்றாள் தேவி. தேவியின் அம்மா ரகுவையும், ராஜாவையும் அறிமுகம் செய்தாள். ரகு தேவியின் அம்மாவைக் கூட்டிக் கொண்டு மற்றைய இடங்களைப் பார்வையிட்டான்.

தேவியும், ராஜாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டே அவர்களைப் பின் தொடர்ந்தனர். ஆனால் எதுவுமே பேசிக் கொள்ளவிலலை.

நேரம் கடந்து விட்டதை உணர்ந்த ரகு அப்ப நாங்கள் கிளம்புறோம் என்று எழுந்தான் தேவியின் அம்மா. மோர் குடித்துவிட்டுப் போங்க. என்று இரண்டு கிளாஸ் மோருடன் வந்தாள். மோரைக் குடித்து விட்டு ராஜா நன்றாக இருக்கிறது என்றான்.

ரகு தேவியின் கைபட்டதாலோ என ராஜாவிடம் கேட்டான். இருக்கும் இருக்கும் சீக்கிரம் எடு மரக்கறிக்காக சமையல்காரி பாத்துக் கொண்டிருப்பாள் என்றான் ராஜா. ஓகே நாங்க வருகிறோம் என்று எழுந்தனர். இருவரும் தேவிக்காக வேண்டிய புத்தகங்களை அவளிடம் நீட்டினான். அவள் புன் சிரிப்புடன் 'தைங்ஸ்' என்றாள். நீங்க எனக்குச் சொல்வதை விட ராஜாவிற்குச் சொன்னால் பொருத்தமாக இருக்கும். ஏனெனில் அவன் தான் வாங்கிக் கொண்டு வந்தான்.

தேவியின் உள்ளம் படபடக்க என்ன சொல்வதென்று புரியாமல் அப்படியே தயங்கி நின்றவள் அம்மா ஏதும் நினைத்து விடக்கூடுமோ என யோசித்தவள் 'தைங்யு' என்றாள். ராஜா 'யூ ஆ வெல்கம்' எனக் கூறிவிட்டுக் இருவரும் வீட்டை விட்டு வெளியேறினர். காரினுள் ராஜாவும், ரகுவும் ஏறிக் கொண்டு வருகிறோம் என்று கூறிவிட்டு தங்களது வீட்டுக்கு வந்து சேர்ந்தனர். வீடு வந்ததன் பின்புதான் தெரிந்தது எவ்வளவு லேற்றாகி வந்திருக்கிறார்கள் என்பது. சமையல் காரியிடம் ஒரு சாரி கேட்டு விட்டு மெதுவாக நகர்ந்தனர் இருவரும்.

'டேய் நான் சித்ராவை பாத்துவிட்டு வந்திரேன்டா' என்றான் ரகு. ஓகே நான் மேல றூமிலதான் இருப்பேன் சீக்கிரம் வந்துவிடு என்று கூறிவிட்டு ராஜா தனதறைக்குச் சென்றவன் அறைக் கதவைத் தாளிட்டுக் கொண்டு சந்தோசத்துடன் மெத்தை மேல் தொப்பென்று விழுந்தான்.

ராஜாவின் மனமும் உதடும் தேவி என்ற பெயரை அடிக்கடி உச்சரித்துக் கொண்டிருந்தது. தேவியின் உருவம் ராஜாவின் மனதில் அப்படியே பதிந்து விட்டிருந்ததைக் கண்களை மூடி கொண்டு ரசித்தான் ராஜா. கொண்டிருந்தவன் ரகுவிடம் என் தேவியை வரைந்து கேட்க வேண்டும் என நினைத்துக் கொண்டான்.

*(தொடரும்............)*

# முஸ்லிம் தமிழர் கிராமியக் கவியமுதம்

## அஷ்ரபின் பேராசையும், புத்தர் சிலையும்

சட்டத்தரணி முதலாமவராகும். எம்.எஸ்.காரியப்பர், கே.டபிள்யூ.தேவநாயகம், எம்.எச்.எம் அஷ்ரப் போன்றவர்களும் மந்திரிப் பதவி பெறுவதற்காக முஸ்லிம், தமிழர் பிரதேசங்களின் பாரம்பரியங்களையும், சிங்கள அரசுகளுக்கு ஒப்பம் போட்டுக் கொடுத்த சமூகத் துரோகிகளாவர்.

1977ல் கல்முனைத் தொகுதியில் தமிழர் கூட்டணிக்காக சட்டத்தரணி ஏ.எம்.சம்சுதீன் அவர்களை சிவசிதம்பரம் போன்றவர்களுக்கு ஆ.வேல்முருகு ஆசிரியர் இசைவாணர் (1948 லிருந்து தமிழரசுக் கட்சியின் தீவிரத் தொண்டர்கள்) சிபார்சு செய்து தேர்தல் களத்தில் இறங்கினோம். இதன்படி டாக்டர். ஆ.உதுமா லெப்பை, இளம் சட்டத்தரணி எம்.எச்.எம்.அஷ்ரப் இருவரையும் கல்முனை, திருகோணமலை, புத்தளம் பொத்துவில் வரை பலநூறு மேடைகளில் விடுதலை முழக்கம் செய்தோம்.

அஷ்ரப் அடிக்கடி பேசுவார். 'இஸ்லாமியரும், இந்து, கிறிஸ்த்து முஸ்லிம்களும் தமிழர்களும் 'நகமும், சதையும்' 'உடலும் உயிரும்' போன்றவர்கள். ஒற்றுமையாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அதாவது ஒரு மனிதனுக்கு இரு கண்களைப் போன்று வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.ஒரு கண் பழுதுபட விடமாட்டோம். தமிழர்களும், முஸ்லிம்களும் சேர்ந்து நமது இழந்த உரிமைகளைச் சிங்கள அரசிடமிருந்து மீளப்பெற்று வாழத்தான் போராடிக் கொண்டிருக்கிறோம்.' என்று இடிமுழக்கம் செய்து வந்தார் அஷ்ரப். தேர்தலில் சம்சுதீன் தோல்வி கண்டதும் சிறிமாவின் வீடு தேடிப் போனார். அஷ்ரபும் கூஜாத் தூக்கிச் சென்றார். இவர்கள் ஓரளவு பிரபலமடைந்தவராகத்தான் என்னையும் ஆரம்ப ஏணியாகப் பயன்படுத்தினார்கள்.

முன்பெல்லாம் தமிழரசுக் கட்சியில் காரியப்பர், முஸ்தபா, மஜீத், லத்தீப் சின்லெப்பை, முஹம்மதலி தேர்தலில் வென்றதும் சில மாதங்களுள் சிங்களக் கட்சி அரசுகளின் எச்சிலைப் பதவிகளுக்குப் பேராசைப்பட்டு நாவூறி நக்குண்ணப் போய் விடுவார்கள். காட்டிக் கொடுக்கும் காக்கை வன்னியன் காரியப்பரின் பரம்பரை என்று புரட்சிக் கவிஞர் காசி ஆனந்தனும், தமிழரசுக் கட்சி மேடைகளிலும் உணர்ச்சிவசப்பட்டு குமுறுவார். சம்சுதீன் தேர்தலில் தோற்றதும், சிறிமாவிடம் சரணடைந்தும் சேர்க்கவில்லை. பின்னர் காலங்கடந்தே செப்புச்சுமது சேர்த்தனர். நியமன எம்.பியாக்கினார். சிறிமா.

காரியப்பர் பரம்பரை கட்சி விட்டுக் கட்சி மாறியதைக் கல்லாற்றுப் புலவர் சவரிமுத்து தேர்தல் மேடைகளில் பாடுவார்.

''சிங்களவர் பிறந்தறியா
செந்தமிழர் பூமியிலே
சிங்களக் கொடிபறக்குதுடா
கொண்ட் வெட்டான் முதுசொம்களே
தங்க நிலம் முஸ்லிம் தமிழர்
வளங்களையே
தட்டிப் பறிக்கத் துணை போனவர்கள்
காரியப்பர் பரம்பரையே!
பண்டாவின் ஆட்சியிலும்
மந்திரியாம் முஸ்தபாவே
பதவிக்காய் மஜீதும்.
மேர்ஷாவும் மாறினாரே
பண்பில்லா அரசியல் வாதிகளால்
தமிழர் தேசங்களே
பறித்திட சிங்களாட்சிக்குத் துணைபுரிந்தார்
காரியப்பர் பரம்பரை...''

என்று தமிழரசுக் கட்சித் தொண்டர் சவரிமுத்துப் புலவர் 1960-80 வரைக்கும் தமிழர், முஸ்லிம் உறவு தயவுகளையும் தேர்தல் மேடைகளில் பாடி வந்தார்.

''மூங்கில் குழலினுள்
மாவும் தேங்காய் பூவுமாப்போல்
முஸ்லிமும் தமிழர்களும்;
மச்சான் மச்சி என்று;
தூங்கி ஒரு வீட்டுக்குள்;
துணை புரிந்து காலங்களைத்
தூரப் போக்கிட்டனரே;
துரோகிக் கட்சிமாறிகளே!''

இப்படி இன்னும்பல பாடல்களையும், கிராமியக் கவியமுதங்களையும் மேற்கோள் காட்டலாம். சுருக்கமாகவே ஆராய்வோம்.

தமிழரசுக் கட்சி, தமிழக காங்கிரஸ் இரண்டு கட்சிகளும் தான் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் 1948 லிருந்து பிரபலம் பெற்றவை. இவைகளில் வென்றபின் பொன்னம்பலம், காரியப்பர் இருவருமே சிங்கள அரசுகளின் பேரினவாத ஆசையூட்டலில் மதிமயங்கி தமிழர்களின் சுயாதீனங்களைச் சிங்களவர்களுக்கு விற்று மந்திரிப் பதவி வகுத்த முதலாமவர்கள்.

கலாபூசணம்
மருதூர்வாணர்

1950-60களில் யாழ்ப்பாணம் நாக விகாரை தமிழர்களால் தகர்க்கப்படவும், மந்திரி பொன்னம்பலம் [illegible] புனரமைக்கச் செய்தவர். பின்பு மார்ட்டின் மேயர் துரையப்பா எவரும் மறந்திருக்க முடியாத கறை படிந்த வரலாறு.

இதே காலங்களில் கல்முனையில் காரியப்பரும், காரைதீவில் மயில்வாகனமும் புத்தர் சிலை அமைத்த தயாரத்தின சோமரத்தின சிங்கள மந்திரிகளை வரவேற்றும் பொலிஸ் பாதுகாப்பிலும் (இன்றுவரை கல்முனை- காரைதீவிலுள்ளது)

1970 -80 களில் பொத்துவில் நகரில் கனகரெத்தினமும் அக்கரைப்பற்று நகரில் சுவீட் மஜீத், நிந்தவூர் முஸ்தபா, சம்மாந்துறை மஜீத் இவர்களெல்லாம் மந்திரிப் பதவிகளுக்கும் எச்சிலை பொறுக்கிகள். தமிழர் முஸ்லிம் தாயக பூமிகளில் புத்தர் சிலைகள் அமைக்க இடம் கொடுத்த படுதுரோகிகள் எனலாம்.

திருகோணமலையிலும், கிண்ணியா மஜீத், மஹ்றூப் போன்ற எச்சிலை நக்கிகளும், சிங்களக் கட்சிகளில் புத்தர் சிலை நிறுவிட தமிழர் முஸ்லிம் பரம்பரைத் தாயகங்களைத் தாரை வார்த்துக் கொடுத்த தமிழர் துரோகியானவர்கள்.

மட்டக்களப்பு நகர்களிலும் ராஜன் செல்வநாயகம், கல்குடாவில் கே.டபிள் யூ.தேவ நாயகமும், மந்திரிகளாகி புத்தர்சிலை அமைக்க தமிழர் முஸ்லிம் தாயகத்தையும் அடகு வைத்த பாதகர்களாவர். இவர்களைவிட மிகவும் கொடூரமானவர்கள் எம்.சீ. அகமது, எம்.எச்.எம்.அஷ்ரப் என்று சவரிமுத்துப் புலவர் இப்படி நாட்டுக்கவிபோல் பாடி இருக்கிறார்.

''புத்தி கெட்ட முஸ்லிம் அகமதா? கட்சிமாறினான்
புத்தியுள்ள சிறிமாவின் பிக்குவா?
புத்தர் சிலை வைத்தவர்கள் பெயரா?

*(தொடரும்,.......)*

# பாலஸ்தீன காஸா பகுதியிலிருந்து இஸ்ரேலிய யூத குடியேற்றங்கள் வெளியேற்றம்

உலகின் நீண்டகால போராட்ட வரலாற்றை கொண்ட பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தை மிக நீண்ட காலத்திற்கு வழிநடத்திய பெருமை பாலஸ்தீன விடுதலை அமைப்பின் தலைவர் யசீர் அரபாத்தையே சாரும். யசீர் அரபாத் இராணுவ மருத்துவமனை ஒன்றில் சுகவீனம் காரணமாக காலமானதன் பின்பு பாலஸ்தீன அதிகார சபையின் தலைவராக யசீர் அரபாத்துக்கு அடுத்த நிலையில் இருந்த மஹ்முத் அப்பாஸ் நியமிக்கப்பட்டார்.

அப்பாஸ், யசீர் அரபாத் போன்று கடும் போக்கான போராட்ட வீரனாக தன்னைக் காட்ட முற்படவில்லை என்றே கூறப்படுகிறது. மஹ்முத் அப்பாஸ் இஸ்ரேலுடனும், ஐரோப்பிய யூனியனுடன் ஒத்துப் போகின்ற தன்மையான மென் போக்கை கடைப்பிடிப்பவராகக் காணப்படுகின்றார். இதனால் பாலஸ்தீனத்திலுள்ள விடுதலை தீவிரவாதிகளின் எதிர்ப்பையும் எதிர் நோக்குபவராகவே பாலஸ்தீன அதிபர் தற்போது காணப்படுகிறார். இந்த மென் போக்குடைய பாலஸ்தீன அதிபர் மஹ்முத் அப்பாஸ் அமெரிக்காவினதும், ஐரோப்பிய ஒன்றியத்தினதும் ஊளலைப் பேணுபவராகவும் காணப்படுகின்றார்.

இஸ்ரேல் 1967ம் ஆண்டு மத்திய கிழக்கு யுத்தத்தின் பின்னர் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளே காஸாவும், மேற்குக் கரையும் ஆகும். 1.4 மில்லியன் பாலஸ்தீனர்களின் தாயகப் பகுதியான இந்தப் பகுதியில் இருபத்தியொரு யூதக் குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டுள்ளதுடன், 8500க்கு மேற்பட்ட இஸ்ரேலியர்களும் இறுதி வரை வசித்து வந்துள்ளதாக அறியப்படுகிறது.

யூதக் குடியேற்றங்களும், இராணுவ சூனியப் பகுதிகளும் இணைந்து காஸாவின் 18 சதவீதத்தினை விழுங்கியுள்ளன. காஸாவை விட 15 மடங்கு பெரிய பகுதி மேற்குக் கரை. மேற்குக் கரையில் 120 குடியேற்றங்களும், 230000 இஸ்ரேலிய யூதர்களும் வாழ்கின்றனர். இந்தக் குடியேற்றங்களால் பாலஸ்தீனர்களின் அரசியல், பொருளாதார வாழ்வியலில் ஏற்படுத்திய தாக்கங்கள் அபாரம் என்றே சொல்லப்படுகிறது.

கடந்த 38 ஆண்டுகளுக்கு முன்பு இஸ்ரேலியர்களால் ஆக்கிரமிக்கப்படுவதற்கு முன்னர் இக் காஸாப் பகுதியில் சுமார் 13 இலட்சம் பாலஸ்தீனர்கள் வசித்து வந்தார்களென்றும், இவர்கள் அனைவரும் இஸ்ரேலிய இராணுவ குடியேற்ற ஆக்கிரமிப்பினால் அகதி முகாம்களுக்கு வலுக்கட்டாயமாக அனுப்பப்பட்டனர், அல்லது விரட்டப்பட்டனர். இந்த நிலையில் காஸாப் பகுதியில் ஆக்கிரமிப்பை கைவிட வேண்டும் என பாலஸ்தீனம் தொடர்ந்து கோரிவந்ததுடன் இதற்கெதிரான போராட்டங்களும் தொடர்ந்தே வந்துள்ளது.

மேற்படி கடந்த 38 ஆண்டுகளாக எத்தனையோ அப்பாவி பொதுமக்களையும், பல்லாயிரக்கணக்கான பாலஸ்தீன போராளிகளினதும், இஸ்ரேல் இராணுவத்தினரதும் இழப்புக்கு பின்னர் கடந்த 16.08.2005 செவ்வாய்கிழமை மேற்படி கசப்பான நிகழ்வுகளுக்கெல்லாம் முடிவு கட்டுவது போன்ற தோற்றப்பாட்டுடன் காஸாப் பகுதியிலிருந்து அனைத்து இஸ்ரேலிய யூதக் குடியேற்ற வாசிகளும் 48 மணிநேரத்திற்குள் வெளியேற வேண்டுமென இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோன் அவர்களால் உத்தரவிடப்பட்டது. அல்லது அறிவிக்கப்பட்டது. அதன்படி கடந்த 16.08.2005 ம் திகதியிலிருந்து யூதக் குடியேற்ற வாசிகளுக்கு முறைப்படி கடிதங்களையும், இஸ்ரேலிய அரசு அனுப்பி வைத்தது.

இதையடுத்து 16ம் திகதியிலிருந்து யூதக் குடியேற்ற வாசிகளின் வெளியேற்றமும் இடம் பெற்றது. இருந்த போதிலும் 38 வருடங்களாக இருந்து வரும் வாழ்வியலமைப்பும் வீடுகளையும், சொத்துக்களையும் விட்டு வெளியேற மாட்டோம் என்று பல்வேறு குடியிருப்புக்களில் இருந்து பெரும்பாலான யூதர்கள் இஸ்ரேலிய இராணுவத்திற்கும் தமது அரசுக்கும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.



ஒரு சில யூதக்குடியேற்றப் பகுதிகளிலிருந்து வெளியேற மறுத்த யூத மக்களை மின்கம்பி வேலிகளை அமைத்து இராணுவத்தினர் வெளியேற்ற எடுத்த நடவடிக்கைக்கு இஸ்ரேல் ஆதரவளிக்கும் என்றும் அமெரிக்கத் தூதர் கூறியுள்ளார். காஸாப் பகுதியிலிருந்து யூதக் குடியேற்றங்கள் வெளியேற்றப்பட்டமைக்கு தாங்கள் தான் காரணம் என மஹ்மூத் அப்பாஸ் நிர்வாக அரசும், அங்குள்ள ஹமாஸ் தீவிரவாத அமைப்பும் உரிமை கொண்டாடி வருகின்றனர். அத்தோடு நின்றுவிடாது பேரணிகளையும் நடத்தி வருகின்றனர்.

இதற்கிடையில் காஸாப் பகுதியிலிருந்து யூதக் குடியேற்றங்கள் முற்றாக வெளியேற்றப்பட்டு மேற்படி சமாதான சமிஞ்சைகள் தோற்று விக்கப்பட்டுவிடுமென இஸ்ரேலும், பாலஸ்தீனமும் கூறி வந்த போதிலும் கடந்த

**பாரிசிலிருந்து**
**ஜீ.ஏ.நல்லரெத்தினம்**

25.08.2005 வியாழக்கிழமை பாலஸ்தீனத்தில் இஸ்ரேல் இராணுவத்தினரால் ஒரு அகதி முகாமில் நடத்தப்பட்ட தாக்குதல் ஒன்றில் 5 பாலஸ்தீனர்கள் பலியாகியுள்ளனர். இவர்கள் கடந்த காலங்களில் இஸ்ரேலில் நடத்தப்பட்ட பல தற்கொலைத் தாக்குதல்களுடன் சம்பந்தப்பட்டவர்கள் என இஸ்ரேல் இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

ஆனால் அங்குள்ள ஊடகச் செய்திகளின்படி 3 பேரே பாலஸ்தீன தீவிரவாதிகள் என்றும், 2 பேர் சதாராண பொதுமக்கள் என்றும் தெரிவிக்கின்றன. இந்த வகையில் காஸாப் பகுதி வெளியேற்றத்துடன் இரு நாடுகளுக்குமான கசப்புணர்வு ஓரளவாவது இல்லாமல் போகுமென எதிர்பார்த்த சர்வதேச சமூகத்திற்கும் 25.08.2005 இஸ்ரேலிய இராணுவத்தினது தாக்குதல் சம்பவம் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதையே காணக் கூடியதாகவுள்ளது.

காஸாப் பகுதியிலிருந்து யூதக் குடியேற்றங்கள் உடனடியாக 48 மணி நேரத்துக்குள் வெளியேறுவதென்பது வேதனையான விடயம்தான் இருந்தாலும் இஸ்ரேல் நாட்டினுடைய எதிர்கால நலனுக்கு இச்செயல் உத்வேகமாக அமையும். அத்தோடு, அவசியமானதும் கூட என இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோன் கூறியுள்ளார். அத்தோடு பாலஸ்தீன பகுதியிலிருந்து வெளியேற வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி அவர் உரையாற்றும் போது பாலஸ்தீனத்திற்குச் சொந்தமான காஸாப் பகுதியில் நாம் நிரந்தரமாக இருந்து விடமுடியாது என்றும், அதை நாம் காலி செய்துதான் ஆகவேண்டும். இப்பகுதியில் 10 இலட்சம் பாலஸ்தீனர்கள் வாழ்கின்றனர். அவர்கள் அனைவரும் அங்கு அகதி முகாம்களில் வறுமை நிலையில் வாழ்கின்றனர். இந்த நிலைக்கு முடிவே இல்லையா? என ஏங்கி வாழ்கின்றனர். எனவே அவர்களது நலனைக் கருத்தில் கொண்டு இஸ்ரேலியர்களாகிய நாம் வெளியேறித்தான் ஆக வேண்டும் என முதலைக் கண்ணீரும் வடித்துள்ளனர்.

ஆகவே நாம் இந்த இடத்தில் பாலஸ்தீன அகதிகளுக்கு ஒரு நட்புக்கரத்தை நீட்டுகின்றோம். இதற்கு இணையாக பாலஸ்தீனர்களும் நட்புக் கரத்தை நீட்டினால் மகிழ்ச்சியான விடயம்தான். மாறாக போர் கொடி தூக்குவார்களாக இருந்தால் இதுவரை எதிர்பாராத பதிலடியும் எமது இராணுவத்தால் கொடுக்கப்படும் என்ற தொனியில் ஒரு எச்சரிக்கை அறிவிப்பையும் எரியல் ஷரோன் அறிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் சபையின் இஸ்ரேலியா பிரதிநிதி டான் கில்லர் மேன் கருத்துத் தெரிவிக்கையில் பாலஸ்தீன காஸாப் பகுதிகளிலிருந்து இஸ்ரேல் வெளியேற தொடங்கி விட்டதனால் இனிமேல் ஐ.நாவில் இஸ்ரேலுக்கு எதிரான போக்குகள் முடிவுக்கு வரும். அதேபோல் ஐ.நாவில் அதற்கு எதிரான தீர்மானங்கள் நிறைவேற்றப் படுவதும் நிறுத்தப்படும் என எதிர்பார்ப்பதாக உறுதிப்பட நம்பிக்கை தெரிவித்தார்.

அத்தோடு காஸாப் பகுதியிலிருந்து யூதக் குடியேற்றங்களின் வெளியேற்றத்தினால் சர்வதேச நாடுகளின் ஆதரவுடன் செய்யப்பட்ட இஸ்ரேல் பாலஸ்தீன சமாதான ஒப்பந்தத்திற்கு புதிய உத்வேகத்தை வழங்கும் வாய்ப்பையும் ஏற்படுத்தியுள்ளதாக அமெரிக்க வெளியுறவுச் செயலர் கொண்டலீசா ரைஸ் தெரிவித்துள்ளார். இதற்கிடையில் பாலஸ்தீனத் தலைவர் மஹ்மூத் அப்பாஸ்ஸை சந்திக்க அமெரிக்கத் தூதர் டேலிட் வெல்ச் இஸ்ரேலும், பாலஸ்தீனமும் இரு தனி ஜனநாயக நாடுகளாக அமைதியுடனும், பாதுகாப்புடனும் இனி வாழும் என்ற நம்பிக்கை அமெரிக்காவுக்கு உண்டு என்றும் கூறியுள்ளார். அத்தோடு எவ்வளவோ சிரமப்பட்டு ஆக்கிரமித்த நிலப் பகுதியிலிருந்து இஸ்ரேல் வெளியேறுவது முக்கிய நிகழ்வாகும் என்றும் இனி பாலஸ்தீன நிர்வாகம் பாதுகாப்புக் கட்டமைப்பை வலுப்படுத்தி சட்ட ஒழுங்கை நிலைநாட்டி வன்முறையை கை விட வேண்டுமென்ற மறைமுக அறிவிப்பையும் தெரிவித்ததோடு, இதற்கு அமெரிக்கா அதன் ஆதரவையும் தெரிவித்துள்ளது.

## மாணவர் பரிசுக் குவியல்

**தமிழ் பேசும் மாணவச் செல்வங்களுக்கு!**

ஈழநாதம் மட்டக்களப்பு பதிப்பு மாணவர்களின் அறிவுத்திறனை விருத்தி செய்யும் வகையில் வாரந்தோறும் பரிசுத்திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. மட்டக்களப்பு ராஜாஸ் புத்தக நிலையத்தின் அனுசரணையுடன் நடாத்தப்படும் இந்தப் பரிசுக் குவியலில் நீங்களும் அதிஷ்டசாலியாகத் தெரிவு செய்யப்படுமிடத்து பெறுமதி மிக்க அறிவு நூல்கள், பாடசாலை உபகரணங்கள், பரிசுகளாக வழங்கப்படும்.

நீங்கள் செய்யவேண்டியது இவை தான்,

கீழ்வரும் வினாக்களுக்கு சரியான விடையை எழுதி – பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தி முகவரியை வெட்டியொட்டி அனுப்புதல் வேண்டும்.

முதலாவது அதிஷ்டசாலிக்கு பரிசும், பாராட்டுப் பெறும் ஐந்து மாணவர்களின் பெயர், பாடசாலை விபரங்களும் பிரசுரிக்கப்படும்.

**விடைகள் வந்து சேர வேண்டிய இறுதித் திகதி:-18.09.2005**

அனுப்பவேண்டிய முகவரி

**மாணவர் பரிசுக்குவியல்-49**
**ஈழநாதம் (மட். பதிப்பு), பிரதான வீதி,**
**கொக்கட்டிச்சோலை.**

**இவ்வார வினாக்கள்.**

01. இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக உயர்நீதிமன்றம் எப்போது தீர்ப்பு வழங்கியது?
02. சீனப் பெருஞ் சுவரைக் கட்டியவர் பெயர் என்ன?
03. பிரான்ஸ் நாட்டின் தலைநகரம் எது?
04. கிரிக்கெட்டின் தாயகம் என அழைக்கப்படும் நாடு எது?
05. இலங்கை கிரிக்கெட் வரலாற்றில் முதல் ஹெட்ரிக் சாதனை புரிந்த வீரர் யார்?

**பரிசுக்குவியல் 47 இற்கான சரியான விடைகள்**

01. அனுரா பண்டாரநாயக்க. 02. சனத் ஜயசூரியா.
03. பளிங்குப் பாதை. 04. நேபாளம். 05. ஜப்பான்.

### பரிசுபெறும் அதிஸ்டசாலி

**இ.யோகசிங்கம்,**
**தரம்-05B,**
**மட்-முனைக்காடு வி.வித்தி.**

### பாராட்டுப்பெறுவோர்

01. ஜெ.சஞ்சஸ், மட்டக்களப்பு.
02. வே.கிருஸ்ண வேணு, நாவற்காடு நாமகள் வித்தி.
03. ச.பிரவீனன், சி.ச.ம.வித்தி. குறுமண்வெளி.
04. அ.கிருபாஜினி, பட்டிருப்பு, களுவாஞ்சிகுடி.
05. க.ஜெயமதி, தரம்–13கலை, மட்–அரசடித்தீவு வி.ம.வித்தி.

**மட்டு நகரில் சகலவிதமான பாடசாலை உபகரணங்கள் மற்றும் அப்பியாசக் கொப்பிகள் அறிவு நூல்களுக்கு :-**




தொ.பே.இல:- 065-2222371 065-2225341




ஈழநாதமே!
என் அன்பார்ந்த வந்தனங்கள் வாரம் தோறும் நீ அள்ளிப் படைக்கும் தெவிட்டாத தேனமுதம் என்றென்றும் தித்திக்கின்றது. உன் வாசல் தேடி வந்தவேளை நீ வழங்கிய ஆறுதல் என் உள்ளத்திற்கு பெரிய வலுவை அள்ளித் தந்தது. என்றென்றும் தந்து கொண்டே இருக்கிறது. அதற்காக நான் என்றும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

19.08.2005 அன்று பிரசுரமாகிய சொந்தங்களின் சொர்க்கம் என்ற கவிதையும், தவறுகளின் தண்டனை என்ற சிறுகதையும் ஒரு கண நேரம் நெகிழ வைத்தது. கவிதையிலும், சிறுகதையிலும் ஆங்காங்கே இழையோடியிருந்த ஆழமான கருத்து தற்கால கட்டத்திலும் சிற்சில இடங்களில் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. அவற்றைச் சிந்தித்துத் திருத்தினால் நல்லதோர் சமூதாயம் உருவாகும் என்பது திண்ணம்.

அந்த சிறுகதையினையும், கவிதையினையும் பிரசுரித்த அந்த இரு உள்ளங்களுக்கும் ஈழநாதத்தின் சார்பாக என் மனமார்ந்த நன்றிகளையும், பாராட்டுதல்களையும் தெரிவிப்பதில் பேருவகை அடைகின்றேன். இவர்களின் எழுத்தாற்றல் மென்மேலும் வளர எல்லாம் வல்ல இறையோன் துணை புரிவாராக!

ஓங்கட்டும் நாதம்
தழைக்கட்டும் ஈழம்.

ச.சந்திரமதி,
மகிழவட்டவான்,
ஆயித்தியமலை.

ஈழநாதமே!
உன்னிடம் எனக்கு
பிடித்தவையை
கூறுகிறேன் கேள்!
தேன் சிந்தும் கவிநாதப்
பகுதி, கிராமங்களின் கிராமிய
பேச்சு மொழி வீசும்
சிறுகதைப் பகுதி,
பெண்களை பெருமையாகக்
கூறும் மகளிர் மகுடப்பகுதி
வரலாற்றுக் கட்டுரைப் பகுதிகளே
என்னை மிக மிகக்கவர்ந்தவை
நாதமே நீ நூற்றாண்டு வாழ
வேண்டும் என வாழ்த்துகின்றேன்.
க.கமலதாசன்,
வந்தாறுமூலை.

அன்பின் நாதமே!
என் மனதைக் கவர
வைக்கும் நாதமே! உம்மால்
வெளியாகும் ஆக்கங்கள்
யாவும் எனக்கு மிக மிகப்
பிடித்திருக்கின்றது. இன்னும்
இவற்றைவிட பல
ஆக்கங்களை உருவாக்க
எனது வாழ்த்துக்கள்
எஸ்.விஜயா,
கரடியனாறு.

# மகிந்த ராஜபக்ஷவின் மாய்மாலம்

"ஆளாப் பேரக் காணல்லையாம், ராமநாதனாம் பேரு" என்று ஒரு கிராமிய பழமொழி உண்டு. மகிந்த ராஜபக்ஷ போடும், மாய்மாலங்களைப் பார்க்கும் போது இந்தப் பழமொழி தான் ஞாபகத்திற்கு வருகிறது.

ஜனாதிபதி வேட்பாளரான உடனே ஏதோ ஜனாதிபதி ஆகிவிட்டது போன்ற ஒரு மாயை. உண்டாக்கும் நடவடிக்கைகளில் அவர் ஈடுபட்டிருப்பது வேடிக்கையானது.

போஸ்ரர்கள், பத்திரிகைகளில் முழுப் பக்க விளம்பரங்கள், கூட்டங்களில் சமாதான சகவாழ்வு பற்றிய உரைகள், ஊடகங்களில் அறிவுரைகள் என இவர் போடும் ஆட்டங்கள் மிகையிலும், மிகை.

இந்த நாடகங்களில் மிகவும் சிரிப்புக் கிடமானது அவர் அடிக்கடி கூறும் பொன் மொழிதான். அதாவது தான் ஜனாதிபதியானதும் [முத]தல் வேலையாக தமிழீழ விடுதலைப் புலிக [ளி]ன் தலைவர் மேதகு வே.பிரபாகரனைச் சந்தி[த்]து பேச்சுவார்த்தை நடாத்தி இனப்பிரச்சினை [யை]யத் தீர்த்து வைப்பாராம்.

உண்மையில் சமாதானத்தில் அக்க[றை] கொண்டவர் எவராயினும், முதலில் அவர் [எ]ன்ன செய்ய வேண்டும்.

[01.] கொழும்பிலும், தமிழ்ப் பிரதேசங்களிலும் [நடை]பெறும் சுற்றி வளைப்புத் தேடுதல்களை [நிறு]த்த வேண்டும்.

[02.] அத்தகைய நடவடிக்கைகளின் போது [எ]வ்வித குற்றச்சாட்டுக்களும் இல்லாமல் சந்தே[க]த்தின் பேரில் தமிழ் இளைஞர்கள், யுவதிக[ளை]க் கைது செய்வதைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

03. அவ்வாறு கைதானவர்கள் எவ்வித விசார[ணை]யுமின்றி சிறையில் வாட்டப்படுவதை நிறு[த்]த வேண்டும்.

04. அப்படிக் கைதானவர்கள் காணாமல் போவ[தை]யும், மர்மமான முறையில் கொலை செய்யப் படுவதையும் தடுத்து நிறுத்த வேண்டும்.

05. இவ்வாறு பொறுப்பற்ற முறையில் தமிழர் களைக் கைது செய்யும் பொலிசார் மீதும், இராணுவத்தினர் மீதும் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

06. இவற்றுக்கெல்லாம் மூலகாரணமான அவசர காலச் சட்டத்தை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

07. வீதித்தடைகளும், அப்பாவித் தமிழர்களை இம்சைக்குள்ளாக்கும் அனாவசியமான பரிசோதனைகளையும் உடனடியாக நிறுத்த வேண்டும்.

இவற்றில் எதையுமே செய்யாத, செய்யமுடியாத மாண்புமிகு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ சமாதானத்தைப் பற்றிப் பேசுவதும் விடுதலைப் புலிகளின் தலைவரைச் சந்திக்கப் போவதாகக் கூறுவதும் வேடிக்கையாக இல்லையா?

ஆரம்ப காலத்தில் பிரதமர் பதவியுடன் இணைத்துப் பேசப்பட்ட லக்ஷ்மன் கதிர்காமரின் கொலையை நாம் மறந்து விடமுடியாது. இக் கொலை பற்றி வைத்திய பரிசோதனைகளுக்கு முரணான கட்டுக் கதைகள் பரப்பப்பட்டதையும், அவர் கொலையில் உண்மைக் குற்றவாளிகள் தப்பிவிட வழிவகுத்து விடுதலைப்புலிகளின் மேல் பழியைப் போட்டு புலிகளுடன் சம்பந்தப்படாத நூற்றுக் கணக்கான தமிழர்களைக் கைது செய்தமையை யாரும் மறந்துவிட முடியாது.

கூடவே இன்னொரு விடயமும் ஞாப

## தமிழன்பன்

கம் வருகிறது. கௌரவ அனுரா பண்டாரநாயக்கா வெளிநாட்டு அமைச்சராக்கப்பட்டுள்ளார். இரண்டும் இரண்டும் நான்கு என்று சொல்வதற்கு கல்குலேற்றர் தேவையில்லை.

இப்போது சந்திரிகா அம்மையாரும் அவரது தம்பியாரான வெளிநாட்டு அமைச்சரான அனுராவும், ஒன்று சேர்ந்து வெளிநாடுகளுக்கு இச்சந்தர்ப்பத்தில் யூ.என்.பி, விடுதலைப் புலிகள் கையெழுத்திட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் இராணுவக் கெடுபிடிகள் குறைந்து சமாதானப் பேச்சு வார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டதையும், யூ.என்.பி ஆட்சியை அடாவடித்தனமாகக் கவிழ்த்து ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்து சந்திரிகா அம்மையார் ஆட்சி அமைத்து பின்னர் ஜே.வி. பியின் கிடுக்குப் பிடியிலிருந்து அகப்பட்டுத் திணறியதையும் நாம் நினைவு கூரவேண்டும்.

இம்சை பொறுக்க முடியாமல் ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரால் தூக்கியெறியப்பட்ட ஜே.வி.பியுடன் மகிந்த ராஜபக்ஷ கூட்டுச் சேர்ந்துள்ளார். இக்கூட்டு அவ்வப்போது அவர் வெளியிடும் கருத்துகளிலிருந்து தெரியவருகிறது.

அதே கிடுக்கிப் பிடி மகிந்த ராஜபக்ஷவிற்கும் ஏற்படும் என்பது சர்வ நிச்சயம். இதை நன்கு அறிந்திருந்தும் மகிந்த ராஜபக்ஷ கூட்டுச் சேர்ந்துள்ளார். திட்டவட்டமான கொள்கை எதுவுமில்லாமல் ஜனாதிபதியின் சிம்மாசனத்தைக் கைப்பற்றுவதே அவரது இலட்சியம் என்பதையே இக்கூட்டு காட்டுகிறது.

இத்தகைய ஒரு மனிதர் இனப்பிரச்சினையை எவ்வாறு தீர்க்க முடியும்.1994ல் சந்திரிகா அம்மையார் இதேபோன்று வாக்குறு



தியை அளித்து தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று (62 வீத வாக்குகளைப் பெற்று) ஜனாதிபதியானதும் தமிழ் மக்களுக்கு என்ன நேர்ந்தது. எனவே இத்தகைய போலி மாய்மாலங்களில் தமிழ் மக்கள் ஏமாறமாட்டார்கள் என்பதை அவர் அறிந்து கொள்வாரா?

## தியாக தீபம் லெப்.கேணல் திலீபனின் 18ம் ஆண்டு நினைவு நாளினை முன்னிட்டு மாவடிமுன்மாரிக் கோட்டத்தினரால் நடாத்தப்படும் பாடசாலை மாணவர்களுக்கிடையேயான கவிதைப் போட்டி -2005

01. போட்டிகள் பின்வரும் ஒழுங்கில் நடைபெறும்.

கீழ்ப்பிரிவு (10ம் தரத்திற்குக் கீழ்)
மேற்பிரிவு க.பொ.த(சா.த), க.பொ.த(உ.த)

02. தலைப்புக்கள்:-

கீழ்ப்பிரிவு "தியாகத்தின் சிகரம் திலீபன்"
மேற்பிரிவு மக்கள் புரட்சி வெடிக்குதிங்கே!

03. போட்டிக்கான நிபந்தனைகள்:-

கீழ்ப்பிரிவு 16 வரிகளுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும் (01 மணித்தியாலம்)
மேற்பிரிவு 40 வரிகளுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும் (02 மணித்தியாலம்)

04. ஏனைய நிபந்தனைகள்:-

ஒவ்வொரு பாடசாலைகளில்லிருந்தும், ஒவ்வொரு பிரிவில் 3 ஆக்கங்களினை 10.09.2005 ஆம் திகதிக்கு முன்னதாகத் தயார் படுத்தி, தமிழீழ மாணவர் அமைப்பு, மட்டக்களப்பு மாவட்டம், கொக்கட்டிச்சோலை, (ஈழநாதம் பணிமனை முன்பாக) என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

பிரிவு ரீதியாக தெரிவு செய்யப்படும் மூவருக்கு பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படும். போட்டியாளர் தமது ஆக்கத்தை பாடசாலை முதல்வர் முன்னிலையில் தாமாகவே குறிக்கப்பட்ட நேர எல்லைக்குள் செய்து முடித்து ஒப்படைத்தல் வேண்டும்.

-நன்றி-


## கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை

### கிழக்குப்பல்கலைக்கழக வைத்திய பீடத்திற்கு இறந்த உடல்களை தானமாக வழங்குமாறு கோரிக்கை

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் புதிதாகத் தாபிக்கப்பட்டுள்ள சௌக்கிய பராமரிப்புப் பீடத்திற்கு எதிர்வரும் ஜனவரி மாதம் மாணவர்களை அனுமதிப்பதற்கான ஏற்பாடுகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இவர்களுடைய கற்கை நெறி போதனா வைத்தியசாலையிலுள்ள நோயாளிகளுடன் மட்டுமன்றி மனித உறுப்புகளை இறந்த மனித உடல்களிலிருந்து பிரித்து சோதனை செய்வதிலும் தங்கியுள்ளது. இதற்காக இறந்த மனித உடல்கள் அவசியம் தேவைப்படுகின்றன. மருத்துவப் படிப்பிற்கு மனித உடல்களைத் தானமாகக் கொடுப்பது நற்காரியமாகும்.

இறந்தவர்களின் உற்றார், உறவினர்கள் இறந்த உடலைத் தானமாக மருத்துவ பீடத்திற்குக் கொடுக்க விரும்பினால் பின்வரும் முகவரி/தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

பதில் பீடாதிபதி,
சௌக்கியப் பராமரிப்புப் பீடம்,
கிழக்குப் பல்கலைக் கழகம், இலங்கை.
50புதிய வீதி,
மட்டக்களப்பு.
தொலைபேசி 065-2227025.

உரிமை கோரப்படாத இறந்தவர்களின் உடல்களையும் கிழக்குப் பல்கலைக் கழக சௌக்கிய பராமரிப்புப் பீடத்திற்குத் தானமாக வழங்க முடியும்.

பதிவாளர்

கிழக்குப்பல்கலைக்கழகம்,/இலங்கை
வந்தாறுமூலை,
செங்கலடி,
06.09.2005.


## பாரதியார் நூற்றாண்டிலே.....?

### ஓர் ஆய்வு

### கலாபூஷணம் மருதூர் வாணர்

கண்ணதாசன் பாரதியார்; கவிகளிலும்
கருத்துப் பிழைகள் கண்டதினால்....
என்னதான் பெரும்புலவ(ர்கள்) என்ற போதும்
என்றனுக்கு அச்சமின்றிப் பாடுகிறேன்.

சிங்களத் தீவின் கடற்கரையைச்
செந்தமிழ்த் தோழர்கள் அழகு செய்தார்
இங்ஙனம் கண்ணதாசன் ஏன்பாடினார்?
இலங்கையின் வரலாற்றைத் தெரிந்திலரேன்?

எங்களின் தமிழ் பேசும் இந்து, கிறிஸ்து
இஸ்லாமியர் ஆதம்அலை, கால்பதித்த
தங்குபுகழ் வரலாறைத் தெரிந்திடாமல்
தன்கவியில் "சிங்களத் தீவு" எனப்பாடியதேன்?

"சிவனொளி பாதமலை" எனும் பெயரும்
"செயிலான் சரண்தீவு" மலைப் பெயரும்
இவர் படிக்கவில்லையேன் புலமையிலே?
இலங்கையை இராவணனும் ஆண்டதானே?

சிங்களவர் செப்புகின்றார் தமிழர், முஸ்லிம்
சிறிலங்காவில் வந்தேறிய குடிகள் எனறே
எங்களவர் இராமேஸ்வரனும் இலங்கை ஆண்டான்
ஏனிந்தச் சிங்களவர் அறியந்தில்லையோ?

ஆதிமகள் குவேனிமுதல் ஆரியச் சிங்களரும்
ஆழியோரம் தீவகத்துள் குடிஏறியர்தான்
நீதிகெட்டு வரலாற்றைத் திரித்துக் கூறி
நீசச் சிங்களவர் பிள்ளை பெற்றும் பெருக்கினரே!

இங்ஙனமாய் முறைதவறிச் சிங்களவர்
இனம் பெருக்கிய இலங்கைத் தீவின் வரலாறுகளை
எங்கள் கவி சுப்பிரமணி பாரதியாரும்
எழிலாய்ந்து படிக்காமலே எழுதினாரோ?

"சிங்களத் தீவினுக்கோர் பாலமமைப்போம்
சேதுவையை மீதிறத்தி வழிசமைப்போம்"
"சிங்களத் தீவு" என்றுதானே பாரதியாரும்
சிங்களவர் நாடுதான் பொருள் படப் பாடியதேன்?

தாயகம் தான் தமிழருக்கும் இந்தியாதான்
தாவி வந்த அரபியர்க்கும் இந்தப் பெண்களை
மாயமோகங் கொண்டுகாதல் மணந்ததினால்
மாந்தி வந்த தாய்மொழிதான் தமிழ் மரபாகுமே!

சேயகம்தான் இலங்கைத் தீவு இந்து, முஸ்லிம்
சிங்களர்க்கும்;: ஈழத்தீவு ஆதிகாலம்......
நேயமுடன் வந்து வந்து குடியேறினோர்தான்.....
நேர்மையுடன் வாழ்ந்த தமிழர் பெருகல்லையே.

பாரதியார் பெரும் புலவர் ஏற்கிறேன்தான்....
பாடல்களில் மரபு, சந்தம் பிழையில்லையே......
நேரடியாய் "சிங்களத் தீவு" எனப்பாடியதேன்.?
நோகுதையோ, கருத்துப்பிழை பாரதியாரே!

மக்கள் கவி, புரட்சிக்கவி, உலகமகா கவியே
மதிநுட்பப் "பாஞ்சாலி சபதமும் பாடியோரே..
திக்கை வணங்கும் துருக்கர்" என்றும்
"தீனிஸலாம்" எங்களையும் தீண்டினாரேன்?

மேற்கை வணங்கும் முஸ்லிம் என்றிருந்திருந்தால்
மேலதிகப் பிழைபிடிக்கா விட்டிருப்போம்
சேற்றை அள்ளி வீசுதல்போல் பாரதியார்
செருக்குடனே யோசியாமல் பாடினாரேன்?


நேசமக்கள் என்றனுக்கும் "ஈழபாரதி" என
நெருக்குதலாய் பட்டந்தந்தவர்களும் (97ல்)
பாசமச்சான் அன்பு முகைதீன், பசீல்காரியப்பர்
"பாண்டியூரான்" மரபுக்கவி நேசர்களே!

ஆகவேதான் கண்ணதாசன் "சிங்களத்தீவு"
ஆகுவித்த கருத்தும் பிழைதானே? பாரதியாரும்
நோகுவித்த "சிங்யளத்தீவு"ம் கருத்துப் பிழைதானோ?
நேசர்களே என்கவித்துவம் நேர்மைதானோ?



"ஈரத்தீ" முழு நீளத் திரைப்பட வெளியீட்டு விழாவில் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு. வே.பிர பாகரன் அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

கரும்புலிகளின் வரலாற்றை சித்தரிக்கிறது இத் திரைப்படம். நிகழ்வில் நிதர்சனப் பிரிவுப் போராளியும், தமிழீழ நுண்கலைக் கல்லூரி மாணவியுமான புகழினியின் பரத நிருத்திய அரங்கேற்ற நிகழ்வும் இடம்பெற்றது.



மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள இன்றய நெருக்கடி நிலை தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கும் மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் அவர்களுக்கும் கொக்கட்டிச்சோலை மாவட்ட செயலகத்தில் சந்திப்பு நடைபெற்றது.








திருமலை சேனையூரில் கிராமிய விசேட படையணியின் பயிற்சி நிறைவு நாள் நிகழ்வில் திருமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம் கலந்து கொண்டு பரிசில் வழங்கிக் கௌரவித்தார்.









பட்டிப்பளையில் அண்மையில் "பற்றோ" அரிசி ஆலை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது. நிகழ்வில் கலந்து கொண்ட அதிதிகளைப் படத்தில் காணலாம்.







தமிழீழ விளையாட்டுத்துறையின் ஏற்பாட்டில் பட்டிப்பளை பிரதேச விளையாட்டுக்கழக உறுப்பினர்களுக்கு ஐந்து நாள் பயிற்சி அளிக்கப்பட்டது. சுவிஸ் நாட்டுப் பிரதிநிதிகள் மற்றும், பிரதேச விளையாட்டு உத்தியோகஸ்த்தர் ஆகியோர் மகிழடித்தீவு விளையாட்டு மைதானத்தில் இந்தப் பயிற்சியை வழங்கினர்.

இப்பத்திரிகை நித்தி பதிப்பகத்தில் 09- 09- 2005 அன்று அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது

D:\09-09-2005.cdr
Wednesday, September 07, 2005 1:46:40 AM